வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 20.02.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 77 | பக்கங்கள் : 20



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



07 இந்திய பிரதமரின் இலங்கை விஜயம்?



08 இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கு என்ன தீர்வு?



09 ஒலிம்பிக்கில் 15 வயதேயான சிறுமியின் கனவு கலைந்ததற்கு யார் காரணம்?



11 இரத்தக் கொதிப்பு எப்படி ஏற்படுகிறது? தடுப்பது எப்படி?

# எல்லைப் புறங்கள் பறிபோவதை மாகாணசபை தடுத்து நிறுத்தியது

## சுட்டிக்காட்டுகிறார் ரவிகரன்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 20

**வடக்கு மாகாண சபை ஆட்சியில் இருந்தபோது முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிகள் பறிபோவதைத் தடுக்கக் கூடியதாக இருந்தது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

டான் தமிழ் ஒளியில் நேற்று இரவு ஒளிபரப்பாகிய முல்லைத்தீவு கொக்கிளாய் காணி சுவீகரிப்புத் தொடர்பான நெற்றிக்கண் நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கனிய மணல்

19

## தமிழரிடம் பெரும் நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளார் ஸ்டாலின்

### கூட்டமைப்பு, உலகத் தமிழர் பேரவை கூட்டாக அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 20

தமிழ் நாட்டின் முதலமைச்சராகி இன்னும் ஒரு வருடம் கூட கழியாத நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சந்தேகத்துக்கிடமின்றி தமது ஆளுமையைத் தமிழகத்திலும், உலகத் தமிழர் மத்தியிலும்

19

## போதையில் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக புதிய சட்டம்

போதையில் வாகனங்களை செலுத்துபவர்களுக்கு எதிராக புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதனை கட்டுப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு 22 ஆயிரம் வாகன விபத்து சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

19

## காரைநகர் கடற்பரப்பில் வைத்து 6 இந்திய மீனவர் படகுடன் கைது!

யாழ்ப்பாணம், பெப். 20

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்கள் ஒரு படகுடன் நேற்று முன்தினம் இரவு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு காரைநகர் கோவளம் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர்

19

# இலங்கை வரும் மோடி தமிழர் தீர்வு குறித்து அரசுக்கு கடும் அழுத்தம் கொடுக்கவேண்டும்

## இந்தியத் தூதுவரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, பெப். 20

“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி , இலங்கைக்கான தமது விஜயத்தின்போது தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வு தொடர்பில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவிடம் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, துணைத் தூதுவர் வினோத் ஜேக்கப், அரசியல்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பானு பிரகாஷ் ஆகியோரோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் அதன் பேச்சாளர் எம்.எ. சுமந்திரனும் நேற்று

19

## வடக்கில் 09 வயது சிறுமி உட்பட 36 பேருக்கு கொரோனா தொற்று!

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ். ஆய்வு கூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்போது வடக்கில் 09 வயது சிறுமி உட்பட 36 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 150 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசேதனை யில் 36 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் - 19 பேருக்கும் (9 வயது சிறுமி உட்பட) மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 06 பேருக்கும் சாவகச்சேரி பிரதேச வைத்தியசாலையில் 08 பேருக்கும் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் 03 பேருக்கும் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. (அ)

## ஈஸ்டர் தாக்குதல் பாதிப்புக்கு இந்த அரசு நியாயம் வழங்காது

### நம்பிக்கை இழந்து விட்டோம் என்கிறார் பேராயர்



கொழும்பு, பெப். 20

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்காது எனவும் புதிய அரசாங்கத்தின் கீழாவது நியாயம் கிடைக்கும் என எதிர்பார்க்க நேரிட்டுள்ளதாகவும் கத்

19

## மேலும் 20 பேர் தொற்றால் பலி!

கொழும்பு, பெப். 20

நாட்டில் மேலும் 20 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இது

19

## ஜெனிவா அமர்வில் இலங்கைக்கு பாரதூரமான நிலை ஏற்படலாம்!

### எச்சரிக்கிறார் தயாசிறி ஜயசேகர



கொழும்பு, பெப். 20

ஜெனீவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக பேசக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் ஊடகவியலாளர் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் அமைந்துள்ளன என சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை மீது பாரதூரமான நிலைப்பாடுகள் தோன்ற ஏதுவாக அமையும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

19

## ஆட்சியில் இருக்கும் அரசுக்கு நாங்கள் எந்த கஷ்டமும் கொடுக்கமாட்டோம்!

### வவுனியாவில் மைத்திரிபால உறுதி

வவுனியா, பெப். 20

நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற கட்சியாக இருக்கின்றோம். தற்போது உள்ள ஆட்சியாளர்களுக்கு எந்த கஷ்டத்தையும் கொடுக்கமாட்டோம். நாங்கள் மக்களது பிரச்னையை கதைப்போம். மக்களுக்கு பிரச்னை ஏற்பட்டால் அதனை பேச முன்னிற்போம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திக் கட்சியின் வன்னி மாவட்ட மாநாடு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரி கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திக்குச் சந்தி மேசை வைத்து கடைவிரிக்கின்ற செய்திகள்தான் இப்போது தினமும் வந்து கொண்டிருக்கின்றன.

இந்தக் கொடிய சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கும் என்று நினைக்க வில்லை.

அது நீக்கப்பட்டால் இன்று சிறையில் இருக்கும் பல கைதிகள் வெளியே வந்துவிடுவார்கள். சுமந்திரனின் இந்த முயற்சி பாராட்டுக்குரியதுதான்.

இன்று இருக்கும் ராஜபக்ஷ அரசுக்கு இந்தச் சட்டத்தை நீக்குவதற்கு விருப்பம் இருக்கும் என்று யாரும் நம்பப் போவதில்லை.

ஆனால், இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த நல்லாட்சி அரசில் இந்தச் சட்டத்தை நீக்குவதற்கு அனைவரும் விருப்பம் தெரிவிக்காவிட்டாலும், அதில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று அனேகமாக எல்லாருமே சொன்னார்கள். சர்வதேச நியமங்களுக்கு அமைய இந்தச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்ற நிலையிலேயே அன்றைய நல்லாட்சி அரசில் அங்கம்வகித்த பல்வேறு கட்சிகளும் கருத்து வெளியிட்டு வந்தன.

அப்போது, அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, அதனை மாற்றியமைக்கவாவது நாம் முயன்றிருக்கலாம். அதிலும், தங்களையே சட்ட மேதைகளாகவும், ஜனநாயக காவலர்களாகவும் காட்டிக்கொண்டவர்கள் பலர் அந்த ஆட்சியில் யானைப் பலத்துடன் இருந்தார்கள். அப்போதெல்லாம் அதுகுறித்து எந்த அக்கறையும் இல்லாம இருந்தவர்கள் இப்போது எதற்காக இப்படி கிராமம் கிராமமாக போகிறார்கள் என்று இந்த ஊர்க்குருவி யோசித்துக்கொண்டிருந்தபோது, தென்னிலங்கை அரசியல்வாதி ஒருவர் தொடர்புகொண்டு அந்த விடயம் குறித்து கேள்வி எழுப்பினார்.

நல்லாட்சி அரசாங்கம் அமைவதற்கு தீவிரமாக உழைத்தவர்களில் அவரும் ஒருவர். அந்தக் காலத்தில் நமது சுமந்திரனுடன் நெருக்கமாக பணியாற்றியவர்.

இந்த ஊர்க்குருவிக்கு எழுந்த சந்தேகம்தான் அவருக்கும் வந்திருக்கின்றது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

அவரும் கேட்டார், நாங்கள் எல்லோரும் முற்றாக நீக்குவதற்கு தயாராக இருக்கவில்லை என்றாலும், சர்வதேச நியமங்களுக்கு அமைய அதனை மாற்றியமைக்க தயாராகத்தானே இருந்தோம், அப்போது அதனை முன்னின்று செய்திருக்க வேண்டியவர், அப்போது செய்யாமல் இருந்துவிட்டு இப்போது, அதுவும் தெற்கில் ராஜபக்ஷக்கள் அரசியல் இறங்கு முகத்தில் இருக்கும்போது, அவர் இந்த விடயத்தை கையில் எடுத்திருப்பது அவர்களுக்கல்லவா இங்கு பலம் சேர்க்கிறது என்று கேட்டார்.

இந்தச் சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் என்பது நமது விருப்பம். அப்படியிருக்கையில், அதற்காக உழைக்கும் ஒருவர் பற்றி நாமும் குறைகூற முயாதல்லவா?

நான் சொன்னேன்:

“முன்னர் அவர் கனவான் அரசியல் செய்தவர். இவ்வாறு வீதியில் இறங்கியெல்லாம் தன்னால் அரசியல் செய்யமுடியாது என்று நினைத்துக்கொண்டிருந்தவர். ஆனால் இப்போது அப்படியல்ல, தன்னாலும் வீதியில் இறங்கி அரசியல் செய்யலாம் என்று நினைத்து இறங்கிப் பார்த்தார். தன்னாலும் முடியும் என்று தெரிந்தபோது, இப்போது எல்லா விடயங்களையும் கையில் எடுத்துக்கொண்டு வீதிக்கு இறங்கியிருக்கிறார் போலும்” என்று அவருக்காக வாதிடவேண்டியதாயிற்று.

அது சரிதான், இப்போது அரசாங்கம் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்துவதற்காக திருத்தச் சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றில் தாக்கல் செய்திருக்கின்றதே. அதனை வழக்கம்போல சட்ட சவாலுக்கு உட்படுத்துவதை விட்டு விட்டு, அவர் வீதிக்கு இறங்கியிருப்பதுதான் நமக்குள் கேள்வியை உருவாக்குகின்றது என்றார் அவர்.

சுமந்திரனின் சகபாடியான ஒரு பெண் சட்டத்தரணி, இந்த புதிய சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி, நீதிமன்றப் படிகளில் ஏறியிருக்கிறார். சுமந்திரன் வீதியில் இறங்கியிருக்கிறார் என்று அவருக்கு விளக்கமளித்தேன்!

அந்த சட்டத்தை நீக்கவேண்டும் என்று மேற்குலகும், குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும்போது, அதனை பேசுபொருளாக்கினால் ராஜபக்ஷக்கள் தெற்கில் அரசியல் செய்ய அதுவும் உதவும் என்ற வாதமும் நிராகரிக்கக்கூடியது இல்லைத்தான்.

அதற்காக நாம் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதும் நல்லதுதானே!

**- ஊர்க்குருவி.**

# மஹிந்தவும், ரணில் விக்கிரமசிங்கவும் அரசியலிலிருந்து ஓய்வு பெறவேண்டும்

## சம்பிக்க ரணவக்க கோரிக்கை



கொழும்பு, பெப். 20

“பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வும் அரசியலில் இருந்து ஓய்வு பெறவேண்டும்.” - என்று 43 ஆவது படையணியின் ஒருங்கி ணைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

“இவ்விருவரும் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளனர். அதே போல குறைபாடுகளும் உள் ளன. அதேபோல இருவருக்கும் இடையில் மாறுபட்ட திறமைகள் உள்ளன.

குடும்பத்துக்கு முக்கியத்துவம் வழங்காமல் மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஒதுங்கவேண்டும். அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவும் 25 ஆண்டுகள் தலைவர் பதவியை வகித்துவிட்டார். அவரும் விடை பெற வேண்டும்.” - என்றும் சம் பிக்க குறிப்பிட்டுள்ளார். (அ)

# இந்தியாவிடம் இருந்து இலங்கை பெறவுள்ள ரயில் தொகுதி பரீட்சார்த்த பயணம் வெற்றி

கொழும்பு, பெப். 20

டீசலில் இயங்குவதும் குளி ரூட்டல் வசதியுள்ளதுமான இரண்டாவது பல்வகை ரயில் தொகுதி, நடைமுறையில் உள்ள கடன் திட்டங்களின் கீழ் இந்தி யாவால் இலங்கைக்கு கையளிக்கப்படவுள்ள நிலையில் அதன் பரீட்சார்த்த பயணம் வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இந்த பரீட்சார்த்த பயணத்தில் இந்திய தூதரக அதி காரிகள் கலந்து கொண்டனர்.

உலகத்தரம் வாய்ந்ததும் நம்பகமானதுமான ரயில் சேவை வசதிகளை இலங்கை மக்களுக்கு வழங்குவதற்காக இந்திய - இலங்கை ஒத்துழைப்பு குறித்து பெருமிதம் கொள்கின்றோம் என இது குறித்து இலங்கைக்கான இந் தியத் தூதரகம் கருத்து வெளியிட்டுள்ளது. (அ)

# மேலும் 252 பேர் குணமடைவு!

கொழும்பு, பெப். 20

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 252 பேர் பூரணமாக குணமடைந்த வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய, கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 596,891 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 634,333 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# நெல்லியடி நகரப்பகுதிகளில் பொலிஸாராம் மரம் நடுகை



யாழ்ப்பாணம், பெப். 20

நெல்லியடி நகரப்பகுதிகளில் நிழல் தரும் மரங்கள் நெல்லியடிப் பொலிஸாரினால் நாட்டி வைக்கப்பட்டன.

நேற்று முன் தினம் சனிக் கிழமை காலை பருத்தித்துறை 750 வீதியின் இரு பகுதிகளிலும் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சனா விமலவீர தலைமையிலான பொலிஸார் இவ் மரக் கன்றுகளை நாட்டி வைத்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கு அமைவாக தொடர்ச்சியாக நெல்லியடி பகுதியில் நிழல் தரும் மரங்களும் பயன்தரு மரங்களுமாக 75,000 மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்படும் என பொலிஸார் கூறினார். (அ)

# 37,000 மெ.தொன் பெற்றோலுடன் வருகிறது கப்பல்!



கொழும்பு, பெப். 20

37,000 மெற்றிக் தொன் பெற்றோல் தாங்கிய கப்பல் நேற்றிரவு நாட்டை வந்தடையும் என வலுசக்தி அமைச்சு தெரிவித்தது.

இதன் காரணமாக, தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு நீங்கும் என்றும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், இன்று 37, 500 மெற்றிக் தொன் டீசல் தாங்கிய கப்பலொன்றும் நாட்டை வந்தடைய உள்ளது.

இந்தக் கப்பலுக்கான கொடுப்பனவை செலுத்தும் பணிகள் இடம்பெறுவதாக வலுசக்தி அமைச்சு குறிப்பிட்டது. (அ)

# சிவகரனிடம் ரி.ஐ.டியினர் 5 மணி நேரம் விசாரணை!

கொழும்பு, பெப். 20

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனிடம் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் கொழும்பில் உள்ள கிருலப்பனை அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சுமார் 5 மணி நேரம் விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விசாரணைகளின் போது தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் கடந்த 10 ஆண்டுகளில் நடத்திய போராட்டங்கள், கூட்டங்கள் தொடர்பான பல்வேறு விதமான கேள்விகளை அவர்கள் முன் வைத்ததாக சிவகரன் தெரிவித்தார்.

இவ்விதமாக மூன்று மாதத்துக்கு ஒரு தடவை விசாரணையை எதிர் கொள்வதாகவும் எமது ஜன நாயக ரீதியான செயற்பாட்டை சவாலுக்குட்படுத்த முனைவது நீதியான ஜனநாயக சட்ட ஆட்சிக்கு உகந்ததாக தெரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu
20.02.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## தமிழ் தேசிய தரப்புக்கள் செய்ய வேண்டியது?

யுத்தத்திற்கு பின்னரான அரசியல் சூழலில் தமிழ் தேசிய தரப்புக் கள் மோசமான பிளவுகளை சந்தித்திருக்கின்றன. இப்போதும் பிளவுகள் தொடர்பிலேயே சிந்திக்க முற்படுகின்றன. 2009இல் யுத்தம் நிறைவுற்ற போது, தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. ஆனால் இன்று பல கட்சிகளால் தமிழ் தேசிய அரசியல் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது.

இந்தச் சூழலை மாற்றியமைக்கும் நோக்கில் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவையும் வெற்றியளிக்கவில்லை. கட்சிகளை ஒற்றுமைப்படுத்த முற்பட்ட - அதேபோன்று மாற்றுத் தலைமையொன்றை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்துமே முளையிலேயே கருகிப் போயிருக்கின்றன. அது மட்டுமன்றி, மேலும் உடைவுகளுக்கும் வழிவகுத்திருக்கின்றன. தமிழ் மக்கள் பேரவையின் மூலம் கட்சிகளை ஒன்றுபடுத்தும், பொது வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இறுதியில் தமிழ் மக்கள் பேரவையின் நகர்வுகளால் மேலுமோரு புதிய கட்சி உருவாகியது.

பல கட்சிகள் இருப்பது ஜனநாயக அரசியலில் ஓர் அங்கமாக நோக்கப்பட்டாலும் கூட - உரிமைக்காக போராடிவரும் தமிழ் இனத்தின் மத்தியில் பல கட்சிகள் இருப்பதானது, உரிமை நோக்கிய பயணத்தில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். இவ்வாறான தொரு சூழலில்தான், இந்தியாவின் தலையீட்டை கோரும் விடயத்தில் ஆறு கட்சிகள் ஒன்றுபட்டிருந்தன. நீண்ட காலத்திற்கு பின்னர் இவ்வாறானதொரு உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. இதனை எவ்வாறு பேணிப்பாதுகாப்பது என்பது தொடர்பில் மட்டுமே, குறித்த கட்சிகளின் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பின்னடைவு களை சந்தித்திருந்தது. இதற்கு கட்சிகள் மத்தியில் ஏற்பட்ட பிளவுகளே காரணம். இது சரிசெய்ய முடியாத பிரச்னைகளும் அல்ல. இன்று இந்திய பிரதமருக்கான கடிதத்தில் கையெழுத்திட்டிருக்கும் கட்சிகள் ஆறாக அடையாளப்படுத்தப்பட்டாலும் கூட, அடிப்படையில் அனை வருமே கூட்டமைப்பு என்னும் ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் தான். கூட்டமைப்பிற்குள் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களால், உள் முரண்பாடுகளால் வெளியேறியவர்கள்தான். எனவே ஆறு கட்சிகளும் அடிப்படையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர்தான்.

இப்போது மீண்டும் ஒரு புள்ளியில் சந்தித்திருக்கின்றனர். இந்த ஒற்றுமை, இந்த உடன்பாடு, இந்த புரிதல் - பாதுகாக்கப்பட வேண்டும். இன்றைய சூழலில் எந்தவொரு கட்சியும் தனித்து எதனையும் சாதிக்க முடியாது. சேர்ந்து சாதிப்பதிலேயே பல தடைகளும் சவால்களும் இருக்கின்ற போது, எவ்வாறு இந்த கட்சிகளால் தனித்து விடயங்களை கையாள முடியும்? தமிழ் மக்களின் நலனை மட்டும் முன்னிறுத்தி சிந்திக்கும், செயற்படும் அனைவரும் இந்த ஆறு கட்சி கூட்டை பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நாம் ஒரு விடயத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றோம். இது கட்சி - அரசியலுக் கான காலமல்ல. கட்சிகளின் கூட்டரசியலுக்கான காலம்.

# பெருந்தொற்றை விடவும் மோசமானது மாசுபாடு!



*அண்மையில் வெளி வந்திருக்கும் ஐநாவின் சுற்றுச்சூழல் ஆய்வறிக்கை ஒன்று, உலக அளவில் கரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்புகளைக் காட்டிலும் சுற்றுச்சூழல் மாசுபாட்டால் அதிக உயிரிழப்புகள் ஏற்படு வதைக் கவனப்படுத்தியி ருக்கிறது.*

*பூச்சிக்கொல்லிகள், பிளாஸ்டிக், மின்சாதனக் கழிவுகள் ஆகியவை சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் மாசுபாட்டின் காரணமாக, ஆண்டொன்றுக்குக் குறைந்தபட்சம் 90 லட்சம் பேர் இறந்துள்ளனர் என்றும் ஆனால் அது குறித்து பெரிதும் விவாதிக் கப்படவில்லை என்றும் கூறுகிறது இந்த அறிக்கை. உத்தேசமான மதிப்பீட்டின்படி, கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 59 லட்சம். உண்மையான எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும். என்றாலும், பெருந்தொற்றுப் பரவலைத் தடுப்பதுபோலவே சுற்றுச்சூழல் மாசுபாடு களைக் கட்டுப்படுத்துவதற்கான அவசரத் தேவையும் உள்ளது என்பதை உணர முடிகிறது.*

*உலக அளவில் சராசரியாக ஆறில் ஓர் உயிரிழப்புக்குச் சுற்றுச்சூழல் மாசுபாட்டின் பாதிப்புகள் காரணமாக இருக்கின்றன. குறிப்பாக, காற்று மாசுபாட்டின் விளைவான உயிரிழப்புகளே எண்ணிக்கையில் அதிகம். ஆண்டொன்றுக்கு 70 லட்சம் பேர் காற்று மாசுபாட்டின் காரணமாக முன்கூட்டியே உயிரிழக்கிறார்கள். மாசுபாட்டின் விளை வான உயிரிழப்புகளைக் குறைவான மற்றும் மிதமான வருமானம் கொண்ட நாடுகளே மிகப் பெரிய அளவில் சந்திக்கின்றன. முன்களப் பணியாளர்கள் பாதிக்கப்படு வதற்கான அபாயங்களும் நிறையவே இருக்கின்றன. காற்றும் நீரும் மாசுபடுவதால் மனிதர்கள் மட்டுமின்றி விலங்குகள், பூச்சிகள், பறவைகள், நன்னீர் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் உள்ளிட்ட பன்மைச் சூழலும் பாதிப்புக்கு உள்ளாகின்றன.*

*மாசுபாடு அதிகரிப்பதற்கு அரசாங் கங்களும் நிறுவனங்களும் காரணமாக இருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் ஐநாவின் இந்த அறிக்கை, சில அபாயகரமான வேதியியல் பொருட்களுக்கு உடனடியாகத் தடைவிதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், மாசுபட்ட பகுதிகளைச் சுத்தம்செய்ய வேண்டும் என்றும் அந்தப் பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களைப் பாதுகாப்பான வேறு பகுதிகளில் குடியமர்த்த வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது. இந்த அறிக்கையின் வரைவாளரான சூழலியல் ஆர்வலரும் மனித உரிமைச் செயல்பாட்டாள ருமான டேவிட் பாய்ட், மாசுபாடு மற்றும் நச்சுக் கூறுகள் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதில் தற்போது பின்பற்றப்பட்டுவரும் அணுகுமுறை தோல்வியடைந்துவிட்டது எனக் குறிப்பிட்டிருக்கிறார். சுற்றுச்சூழலுக்கான உரிமை தொடர்ந்து மீறப்பட்டுவருவதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.*

**66**

**உலக அளவில் சராசரியாக ஆறில் ஒரு உயிரிழப்புக்கு சுற்றுச்சூழல் மாசுபாட்டின் பாதிப்புகள் காரணமாக இருக்கின்றன. குறிப்பாக, காற்று மாசுபாட்டின் விளைவான உயிரிழப்புகளே எண்ணிக்கையில் அதிகம்**

*அடுத்த மாதம் நடக்கவிருக்கும் ஐநா மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இந்த அறிக்கை விவாதிக்கப்படவிருக்கிறது. அக்கூட்டத்தில் பாதுகாப்பான, தூ ய்மையான, நிலையான சுற்றுச்சூழலும் அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட உள்ளது. தூய்மையான காற்று, பாதுகாப்பான பருவநிலை, சுகாதாரமான உயிர்க்கோளம், போதுமான நீர், நிறைவான உணவு, நச்சுத்தன்மையற்ற சுற்றுச்சூழல் ஆகியவை அந்த உரிமையின் உட்கூறுகளாக அமையும். சுற்றுச்சூழல் பிரச்சினைகளை மனித உரிமைச் சிக்கலாகவும் ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில், அதற்கான தீர்வுகள் இனிவரும் காலத்திலாவது சாத்தியமாகும் என்று நம்பலாம்.*

- இந்து

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு





# இந்தவார ராசிபலன் 20.02.2022 – 26.02.2022

பெப்ரவரி. 20 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - மாசி - 08

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | சதுர்த்தி |



## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

உடல் சோர்வு நீங்கி மனதிலும் தெளிவு பிறக்கும். வீண் கவலை நீங்கும். வீண் வாக்குவாதங்கள் செய்பவர்களிடமிருந்து தள்ளி இருங்கள். பெண்களின் மனதில் உற்சாகம் உண்டாகும். நிதி நிலைமை சாதகமாக இருப்பதால் சுக வாழ்க்கையாக நாட்கள் செல்லும். மனதின் உற்சாகம் செயல்களில் பிரதிபலிக்கும். வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வீர்கள். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்னை ஒன்று முழுமையாகத் தீரும். தொழில், வியாபாரம், லாபகரமாக நடக்கும். வீட்டில் சுப நிகழ்ச்சி பற்றிய பேச்சுவார்த்தை நடக்கும்.



## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய விஷயம் ஒன்று சாதகமாக பலன் தரும். முன்னேற்றப்பாதையில் எண்ணங்கள் விரிவாக்கம் பெறும். உற்சாகத்துடன் எதையும் செய்வீர்கள் என்பதால் நிதானமாகவேனும் நற்பலன்கள் இருக்கும். பழைய கடன்கள் வசூலாகும். குடும்பத்தின் நிதி நிலைமை உயரும். பணியில் இருப்பவர்கள் செயல் திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாக செய்து முடிப்பார்கள். உங்களின் வழிகாட்டியின் ஆலோசனை காரணமாக ஓரிரு விஷயங்களில் முன்னேற்றமான பலன்களைப் பெறுவீர்கள்.



## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

குழந்தைகளுக்கு நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு இருந்து வந்த எதிரிகளின் பலம் குறையும். கொடுத்துவிட்டு மறந்து போன தொகைகளும் பலநாள் காத்திருந்து வராது என்று நினைத்த நன்மைகளும் உங்களைத் தேடி வந்து மகிழ்ச்சியும் வியப்பும் அளிக்கும். வெளிநாட்டிலிருந்து பணி பற்றிய நல்ல செய்தி வரும். புத்திசாலித்தனமான செயல் ஒன்றின்மூலம் புகழும் பெருமிதமும் அடைவீர்கள். குறிக்கோளுக்கு இருந்து வந்த எதிர்ப்புகள் அகலும்.



## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

காதல் திருமண எதிர்ப்புகள் அகலும். அலுவலகப் பணியாளர்கள் கடினமான வேலைகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த அலுவலக இடமாற்றம் இப்போதைக்கில்லை. அதிக உழைப்பின் பேரில் சில முயற்சிகள் செய்ய வேண்டி இருக்கும். சொத்துக்கள் விற்பது பற்றி யாரிடமும் இப்போதைக்கு விவாதிக்க வேண்டாம். பணியிடத்தில் தேவையான உதவிகள் கிடைக்கும். கலைத்துறையில் உள்ளவர்கள் தங்களது திறமையை வெளிபடுத்த வேண்டி இருக்கும்.




## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

பழைய பாக்கிகள் வசூல் திடீரென்று துரிதமாக இருக்கும். குடும்பத்தில் உள்ள ஒருவரின் புத்திசாலித்தனமாக நடவடிக்கையால் முழுக்குடும்பத்திற்கும் நன்மை ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் சென்று உங்களின் செல்வாக்கை உயர்த்திக்கொள்வீர்கள். வாழ்க்கை துணையின் உடல் நலம் பற்றி மனதில் இருந்த டென்ஷன் அகலும். குடும்பத் தேவைக்கு எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தேவையற்ற செலவுகள் வந்தாலும் அவற்றால் மனதில் உற்சாகமும் சந்தோஷமும் ஏற்பட வாய்ப்புள்ளது.




## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

அக்கம்பக்கத்தினரிடமோ, நண்பர்களுடனோ, பொது இடங்களிலோ அரசியல் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். தாயார் மற்றும் அவர் வழிச் சொந்தங்கள் மூலம் மகிழ்ச்சியும் நன்மையும் உண்டாகும். மனதில் இருந்து வந்த விரக்தி மனப்பான்மை அகலும். உறவினரின் உற்சாக அரவணைப்பு மகிழ்ச்சி தரும். குழந்தைகள் பற்றிய பிரச்னைக்கு ஆறுதல் கிடைக்கும். தாயாரோடு அதிக நெருக்கம் ஏற்படும். வெளிநாட்டில் இருக்கும் உறவினர் மூலம் சந்தோஷமளிக்கும் தகவல் வரும் எலக்ட்ரானிக் சாதனங்கள் வாங்குவீர்கள்.



## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

பாராட்டும் பரிசும் கிடைக்கும் வேண்டிய ஒருவர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுத்து மகிழ்விப்பீர்கள். புதிய விஷயங்களைக் கற்று உங்களை மேம்படுத்திக் கொள்வதால் நிலைமை உயரும். நல்லவர், பெரியவர் ஒருவர் மூலம் நன்மைகள் நடைபெறும் நாள். பக்கத்தில் இருப்பவர்கள் பக்கபலமாக இருப்பர். கைமாற்றாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கலாம். ஆதாயம் தரும் வேலை யொன்றில் அக்கறை காட்டுவீர்கள். அரசியல் சார்ந்த பேச்சு திறமை அதிகரிக்கும்.ஆன்மிக சிந்தனைகள் அதிகமாகும்.



## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

தலைவலி போன்ற சிறிய உபாதைகளை உடனுக்குடன் கவனியுங்கள். குடும்பத்தில் உள்ள ஒருவரின் செயலால் மன அழுத்தம் குறையும். அக்கம்பக்கத்தினரின் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். முன்பைவிட வெற்றிக்கான அரிகுறி அதிகரிக்கும். தேவைகள் சுலபமாக நிறைவேறும். சகோதர சகோதரிகளின் பாராமுகம் பற்றிய கவலை தீரும். நண்பர்கள் சந்திப்பால் மன உற்சாகம் அதிகரிக்கும். சில முக்கியமான பெரிய விஷயங்களை அதிக உழைப்பினால் செய்து முடிப்பீர்கள்.



## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

குடும்பத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வு ஒன்றிற்கு, நண்பர்களும், உறவினர்களும் ஆதரவளிப்பார்கள். எந்தவிஷயத்துக்கும் உடனடிப்பாராட்டும் பரிசும் எதிர்பார்க்க வேண்டாம். தாயாரின் அரவணைப்பு நிம்மதி தரும். உயர் அதிகாரியின் அறிவுரைப்படி புதிய பணியை செய்வீர்கள். பெரிய விஷயங்களில் ஈடுபடுபவர்கள், முன்னேற்றம் அடைய சில காலம் பொறுமையாக இருப்பது அவசியம். நீங்கள் நன்மை செய்த உறவினரிடையே நன்றி உணர்ச்சி குறைந்தது பற்றிய ஆதங்கம் ஏற்படக்கூடும்.



## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பூர்வீக சொத்துக்களைப் பெற, நல்லவர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களின் உதவியை நாடுவீர்கள். பணியில் இருப்போர் பதவி உயர்வு பெற்று வெளியிடங்களுக்கு மாறுதலாக வாய்ப்புள்ளது. தொழில், பணி அதிக மாற்றமின்றிச் சீராக நடை பெற்று வரும். எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். உற்சாகம் காரணமாக உல்லாசம் இருக்கும். குடும்பத்தில் தனவரவு இருக்கும். தடைபட்டிருந்த வியாபாரம், தொழில் போன்ற ஒன்றை மறுபடியும் உயிர்ப்பிக்க முயற்சிப்பீர்கள். வார்த்தைகள் வெற்றி தரும். செலவுகள் நன்மையளிக்கும்.



## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

முக்கியமான பிரச்னை ஒன்றில், அனுபவசாலிகளின் உதவியுடன் நல்ல முடிவெடுப்பீர்கள். சகோதரர்களால் சந்தோஷம் ஏற்படும். கணவர்,மனைவி பற்றி இருந்து வந்த பயமும் கவலையும் நீங்கும். பணியில் ஏற்பட்ட தவறுக்காகக் கடந்த வாரங்களில் உயர் அதிகாரிக்கு ஏற்பட்ட கோபம் தீர்ந்து இப்போது அவரின் அன்புக்குப் பாத்திரமாவீர்கள். மகன், மகள் உங்களுக்குப் பெருமிதம் ஏற்படுத்தும்படியான சாதனை செய்வார். குழந்தைகள் பற்றிய கவலைகள் தீர்ந்து அவர்களாலேயே நிம்மதி ஏற்படும். வெற்றியும் உற்சாகமும் குறையாது.



## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

புதிய திட்டங்கள் தீட்டி மிகுந்த முயற்சி மற்றும் உழைப்பின் காரணமாக அதில் வெற்றியும் அடைவீர்கள். தோன்றி மறையும். பணப் பற்றாக்குறையால் கடன் வாங்குவதைக் கூடுமானவரை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் இருந்து வந்த சிறுசிறு பிரச்னைகளுக்கு உங்களின் முயற்சியால் முற்றுப்புள்ளி வைப்பீர்கள். தேவையற்ற குழப்பமும் விரக்தியும் கற்பனை பயமும் தோன்றாமல் மனதைக் காத்துக்கொள்ளுங்கள். அவசரப் பணிஒன்றை விரைந்து முடிக்க நேரிடும். பேச்சிலும் செயலிலும் கவனமாக இருங்கள்.

# நோவின் பகிர்வு

பகிர்வு -17

**கணபதி சர்வானந்தா**

**உடலில் ஊனம் சிறதளவே**
**மனதில் துணிவு கடலளவே...**

*வசந்த காலத்தில் பாடுகின்ற குயிலைப்போல.. சுகிர்தப்ரியா தனது இனிமையான குரலில் பாடிக் கொண்டிருந்தாள். அவள் தோப்பூர் ஸ்ரீ நாராயணபுரத்தைச் சேர்ந்தவள். வயது 55. அன்று மூதூர் நகரில் உள்ள நீரோடையின் அருகில் அமைந்துள்ள அந்த மண்டபத்தில் நாற்பது பேர்வரை அவள் பாடலைச் செவிமடுத்துக் கொண்டிருந்தோம்.*

*ஒகஸ்ட் 31 ஆம் திகதி. காணாமல் போனவர்களின் உறவுகள் அன்றைய பயிலரங்கில் கலந்து கொண்டிருந்தனர். அந்த நிகழ்விலேயே சுகிர்தப்ரியா பாடிக் கொண்டிருந்தாள். அவள் இளம் பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு மாற்றுத் திறனாளியாவர். அத்துடன் இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன்னர் திருமலையில் நடைபெற்ற கலவரத்தில் கால் உடைக்கப்பட்டு ஊனமாக்கப்பட்டவர்.அவரே மத்திய நலன்புரிச் சங்கத்தின் தலைவியாவர்.அவள் பாடிய பாடலில் ஒலித்த அந்த வரிகள் மனதை வருடின.*

**உடலில் ஊனம் சிறதளவே**
**மனதில் துணிவு கடலளவே...**

*அந்தப் பாடலை அவள் அருகில் இருந்து கைகொட்டி இரசித்துக் கொண்டிருந்தாள் கவிதா. கவிதா எமது உயிரிழை அமைப்பைச் சேர்ந்தவள். அவள் முள்ளந் தண்டு வடம் பாதிக்கப்பட்டவள். சக்கர நாற்காலியிலேயே பயணிப்பவள். அவள் அன்றைய தினம் புதுப் பொலிவுடன் முச்சக்கரவண்டியில் வந்திருந்தாள். அதனைக் கண்டபோது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியாக இருந்தது.*

*முன்பெல்லாம் கால்கடுக்கப் பேருந்துக்காகக் காத்திருந்து பயணத்தை மேற்கொள்பவள் கவிதா. கூடவே சக்கர நாற்காலியையும் காவிக்கொண்டு பயணிப்பதில் அவள் பல சிரமங்களை எதிர்கொள்வதை நாம் அறிவோம். அவ்வாறான சிரமங்களிலிருந்து விடுபட்டுத் தானே சாரதியாக விருந்து அதனை ஓட்டிக்கொண்டு ஒரு முச்சரவண்டியில் அவள் வந்திருந்தாள். துணைக்கு அவள் தாயாரும் அவளுடன் இருந்தார். அது மட்டுமல்ல தனது சக்கர நாற்காலியையும் அதில் ஏற்றிக் கொண்டு வந்திருந்தாள் - என்ற சாரப்படி மருத்துவர் எஸ்.சிவதாஸ் அவர்கள் தனது “மகிழ்வுடன்” என்ற நூலிலே குறிப்பிட்டிருக்கிறார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றுபவர்.*

*அவர் 2009 இல் எழுதிய “மகிழ்வுடன்” என்ற நூலை ஒரு நூல் நிலையத்தில் கண்டெடுத்தேன். அந்த நூலை நான் தேடிச் செல்லவில்லை. தேடலின் போது அது தற்செயலாக என் கண்ணில் பட்டது. அந்த நூல் என்னை ஈர்த்துக் கொண்டதாவே நான் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக இது போன்ற விடயங்களில் நூல் பற்றி அறிந்த பின் அதனைத் தேடிச் செல்வதென்பதே வழமை. ஆனால் மகிழ்வுடன் என்ற அந்த நூல் என்னைத் தேடிச் சரணடைந்ததாகவே குறிப்பிட விரும்புகிறேன். அந் நூல் எமது சமூகத்தின் அடி ஆழம்வரை சென்று பலருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அந்த நோக்கிலேயே எனது பத்தியை அமைத்துக் கொள்ளுகிறேன். அந்த வைத்தியருக்கு முன்பின் அறிமுகமில்லாத நான் அவரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலை அந்நூல் எனக்கு ஏற்படுத்தியது. அதனால் அவருடனான சந்திப்பு நிகழ்ந்தது. அதன் பயன் அந்நூல் சமூகத்தைப் பல வழிகளில் சென்றடையச் செய்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதென முடிவு செய்திருக்கிறோம்.*

*நான் ஒரு மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் நிர்வாகசபை உறுப்பினராக இருந்து பலரைச் சீர்படுத்திப் பார்ததவன் என்ற முறையில் எனக்கு அவர்கள் அனுபவிக்கின்ற வலியின் அளவை உணரமுடியும். வைத்தியர் சிவதாஸ் அவர்கள் தனது நூலிலே “மாற்றுத் திறனாளிகள் அதுவும் சக்கர நாற்காலிகளில் பயணிப்பவர்கள் பொதுப் பேருந்துகளில் பயணிப்பதிலே பல சிரமங்களை எதிர்கொள்வதாகச் சொல்லுவர். பொதுவாக அப்படிப்பட்டவர்களை ஏற்றிச் செல்லப் பொதுப் போக்குவரத்து வாகனங்கள் தயங்குவதைப் பார்த்திருக்கிறேன். அப்படி ஏற்றிச் சென்றாலும் அவர்கள் வசதிப்படி அவர்கள் விரும்பிய இடத்தில் இறக்கி விடுவதிலும் ஆர்வம் காட்டமாட்டார்கள்.” என்று எழுதியிருப்பதில் உண்மை உண்டு. இது பொது நடைமுறையாகக் காணப்பட்டாலும் அதிலும் சில புரட்சிகரமான நடைமுறையினை கருவி நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது என்ற விடயத்தையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.*

*கருவி மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையம் முன்பு கல்வியங்காட்டில் இயங்கியபோது மேற் குறிப்பிட்டவாறு பல துன்பியல் சம்பவங்கள் நடைபெற்றிருந்தன. அதனால் பல மாற்றுத் திறனாளிகள் பாதிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. பின்னர் அது பற்றி சம்பந்தப்பட்ட தரப்பினரோடு பேசினோம். தற்போது அந்த நிறுவனம் இடம் மாற்றம் பெற்றுப் பருத்தித்துறை வீதியிலுள்ள நீர்வேலிக் கிராமத்தில் தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது.*

*முன்பு கருவி நிறுவன வாயில் அருகே தரிப்பிடம் இல்லை. ஆனால் தற்போது பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பணியாற்றுகின்றவர்கள் மாற்றுத் திறனாளிகள் பற்றிய விழிப்புணர்வைப் பெற்ற தன் பலன் கருவி நிறுவன வாயில் அருகே தற்காலிகமாக தரிப்பிடம் தோன்றியுள்ளது. பருத்தித்துறையில் இருந்து அல்லது யாழ். நகரில் இருந்து புறப்படுகின்ற எந்த ஒரு வாகனமென்றாலும் கருவிப் பயனாளிகளை நிறுவன வாசலிலே பாதுகாப்பாகக் கொண்டு வந்து இறக்கி விட்டுச் செல்லுகின்றனர். அவர்களின் அக் கைங்கரியத்தை ஒரு சமூக மாற்றம் என்றே குறிப்பிட விரும்புகிறேன்.*

*எனவே சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற வகையில் தனது எழுத்துகளை படைத்திருக்கும் வைத்திய கலாநிதி அவர்கள் பாராட்டுக்குரியவர். அவர் எழுத்தில் உயிருண்டு என்பதை அவர் நூல்களை வாசிக்கின்றபோது அறிய முடிகிறது. அந்த எழுத்தின் பின்னால் உள்ள உழைப்பை நன்கு உணர முடிகிறது. அவற்றைப் பதிப்பித்ததன் பின்னால் எந்தவொரு வணிக நோக்கமும் அவருக்கு இல்லாதது தெரிகிறது. ஒரு சமூகத்தின் வலியையும், வேதனையையும், அவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளையும் அவர்கள் சார்ந்தவர்கள் அல்லது அவர்களைச் சுற்றி உள்ளவர்கள் அறிய மருத்துவர் எஸ்.சிவதாஸ் அவர்களின் எழுத்துகள் முன்னிற்கும் என்பதே அவர் நூல்கள் பற்றிய எனது வாசிப்பு அனுபவம்.*

# போரின்போது உயிரிழந்த உறவுகளை தனிப்பட்ட ரீதியில் நினைவு கூரலாம்!

## ஆணைக்குழு பரிந்துரை

கொழும்பு, பெப். 20

பயங்கரவாதிகளை நினைவு கூர அனுமதியில்லை என்றும், எனினும், போரின்போது உறவினர் ஒருவர் உயிரிழந்திருப்பாராயின், தனிப்பட்ட ரீதியில் அவரை நினைவுகூர அனுமதி வழங்க முடியும் என்றும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா என்பது குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

முந்தைய மனித உரிமைகள் ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய குழுக்களினது தீர்மானங்களின் மதிப்பாய்வு மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை, உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டீ. நவாஸால் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

மனித உரிமைகள், சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் அதுபோன்ற கடுமையான குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் அல்லது ஏனைய குழுக்கள் கண்டறிந்த தகவல்கள் தொடர்பான விசாரணைகள், ஆராய்ச்சிகள் மற்றும் அறிக்கையிடல்கள் அல்லது உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக, ஜனாதிபதியால் 2021 ஜனவரி 21ஆம் திகதி, உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டீ. நவாஸ் தலைமையிலான ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்த ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை, 2021 ஜூலை 21ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

போருக்கு முகங்கொடுத்த மற்றும் அது தொடர்பான அனுபவங்களைக் கொண்ட யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வசிக்கும் 75 பேர் வழங்கிய சாட்சியங்களின் அடிப்படையிலான பரிந்துரைகள் அடங்கிய 107 பக்கங்களுடன் இந்த இரண்டாவது அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு கண்டறிந்த விடயங்களை உடன் விசாரித்து, அது தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யவோ அல்லது நட்டஈடு வழங்கவோ பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் தலைநிமிர அரசின் உதவி அவசியம் என்று ஆணைக்குழு முன் சாட்சியமளித்துள்ள நபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் ஆணைக்குழு தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாதிகளை நினைவு கூர அனுமதியில்லை என்றும், போரின்போது உறவினர் ஒருவர் உயிரிழந்திருப்பாராயின், தனிப்பட்ட ரீதியில் அவரை நினைவுகூர அனுமதி வழங்க முடியும் என்றும் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன், ஜூன் மாதத்துக்குள் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்க முடியும் என்று அதன் தலைவரும் உயர்நீதிமன்ற நீதியரசருமான ஏ.எச்.எம்.டீ.நவாஸ் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்வும் இதன்போது பங்கேற்றிருந்தார். (அ)

# அரசின் உள்வீட்டு தகவல்களை அம்பலப்படுத்துகிறாரா லான்ஸா?

## குரல் பதிவு கசிந்ததால் தெற்கு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, பெப். 20

தெற்கு அரசியலில் சர்ச்சைக்குரிய அம்பலப்படுத்தலொன்றை வெகுவிரைவில் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா வெளியிடுவாரென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான நிமல் லான்ஸா, கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு பதவியை வகிக்கின்றார்.

எனினும், அமைச்சின் செயலாளரின் தலையீடு, அரசியல் காரணிகள் உட்பட மேலும் சில விடயங்களை அடிப்படையாகக்கொண்டு குறித்த அமைச்சுப் பதவியை துறப்பதற்கு நிமல் லான்ஸா தயாராகிவிட்டார் எனவும், இதன் ஆரம்பக்கட்டமாக தனது பிரத்தியேக பணியாளர்களை அமைச்சிலிருந்து விலக்கியுள்ளார் எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இராஜினாமாக கடிதத்தை தயார் நிலையில் வைத்துள்ள நிமல் லான்ஸாவை சமரசப்படுத்தும் முயற்சியில் மொட்டு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

பஸில் ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவராகக் கருதப்படும் நிமல் லான்ஸா ஏன் இத்தகையதொரு நகர்வை கையாள்கின்றார் என்பது ஆளுங்கட்சியினருக்கு வியப்பாக உள்ளது. அண்மைக்காலமாக அரசின் செயற்பாடுகளையும் அவர் கடுமையாக விமர்சித்துவருகின்றார்.

நிமல் லான்ஸாவை சமரசப்படுத்தும் முயற்சி தோல்வி அடையும் பட்சத்தில், முக்கியமான சில விடயங்களை அம்பலப்படுத்திவிட்டு, அவர் பதவி துறப்பாரென தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவுக்கு, மற்றுமொரு இராஜாங்க அமைச்சரான சனத் நிஷாந்த அச்சுறுத்தல் விடுக்கும் காணொலி தற்போது இணைய ஊடகங்களில் வைரலாகியுள்ளன. (அ)

# இராஜாங்க அமைச்சுகளுக்கான 2 புதிய செயலாளர்கள் நியமனம்!



கொழும்பு, பெப். 20

கிராமிய வயல்கள் மற்றும் அது சார்ந்த குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளராக கே.ஜீ.விஜேசிறியும், கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளராக எஸ்.டீ.பாடிகோராலவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து, புதிய செயலாளர்கள் தமக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர். (அ)

# திருக்கேதீஸ்வரம் மகா சிவராத்திரி நிகழ்வுக்கு சகல இடங்களிலிருந்தும் பக்தர்கள் செல்லலாம்

## மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

மன்னார், பெப். 20

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வுகளுக்காக நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தரவுள்ள நிலையில் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

எதிர்வரும் முதலாம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் அவசர கலந்துரையாடல் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலகர் சபை, திணைக்களத் தலைவர்கள் என பலரும் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், கடந்த வருடத்தை விட இவ்வருடம் நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தர அனுமதி வழங்கி உள்ளோம்.

வருகை தருகின்ற பக்தர்கள் முழுமையாக தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டமைக்கான ஆதாரமாக தடுப்பூசியை அட்டையை அல்லது தடுப்பூசி அட்டையை கையடக்கத் தொலைபேசியில் புகைப்படம் எடுத்துகொண்டு வரவேண்டும்.

கடமையில் ஈடுபடுத்தப்படும் பொது சுகாதார பரிசோதகர்கள் நுழைவாயிலில் பரிசீலனை செய்வார்கள். இதன் போது காண்பிக்கவேண்டும். திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு வருகை தருகின்ற சகல பக்தர்களும் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைபிடிக்க வேண்டும்.

அதற்கான சகல ஒழுங்குகளும் சுகாதார திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உணவு வழங்குவதற்கான வியாபார நிலையங்கள் அமைக்கப்படும். ஆனால் உணவை பெற்றுக் கொண்டு சென்று உண்ணவேண்டும்.

உணவகங்களில் இருந்து சாப்பிட முடியாது. பாலாவி தீர்த்தத்தில் இறங்கி குளிப்பதற்கு சுகாதார துறையினரால் அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் பக்தர்கள் பாலாவி தீர்த்தத்தை பெற்றுக் கொள்வதற்கு அங்கு கடமையில் இருக்கும் தொண்டர்கள் நீரை அள்ளி பக்தர்களுக்கு கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு வர முடியாத பக்தர்களுக்காக தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. தனியார் மற்றும் அரச வாகனங்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும் ஏனைய அவசிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ)

# வெளிநாடு செல்வோர் அந்தந்த நாடுகளுக்கு ஏற்றவாறு கோவிட் தடுப்பூசியை பெறலாம்

கொழும்பு, பெப். 20

வெளிநாடு செல்வோர் அந்தந்த நாடுகளுக்கு ஏற்றவாறு தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் சுகாதார அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்,

வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருப்பவர்களுக்கு, அந்தந்த நாடுகளின் தேவைக்கேற்ப கோவிட் தடுப்பூசி டோஸ்கள் பெறவேண்டும் எனின், அவற்றை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இது தொடர்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அதற்கான வசதிகளை செய்து கொடுக்க முடியும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இதேவேளை, வெளிநாட்டில் இருந்து வருகை தந்த ஒருவருக்கு இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், கோவிட் மற்றும் டெங்கு பரிசோதனைக்கு மேலதிகமாக மலேரியா பரிசோதனையையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் வலியுறுத்தினார். (அ)

# எரிபொருள் தட்டுப்பாட்டால் பஸ் சேவைகளும் பாதிப்பு!

கொழும்பு, பெப். 20

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பேருந்து உரிமையாளர்கள் வேறு பகுதிகளுக்கு சென்று எரிபொருளை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன், தனியார் பஸ் உரிமையாளர்கள் மேலும் பல பிரச்னைகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதற்கு தீர்வைக் கோரி எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார். (அ)

# இலங்கையின் எரிசக்தித்துறைக்கு உரிமைகோர முயல்கிறது இந்தியா!

## மின்சார சபை ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 20

**நீண்ட கால அடிப்படையில் எரிபொருளை கடனுக்காக பெற்றுக்கொள்வதற்கு லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் நிபந்தனைகளை விதித்துள்ளதாக இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

சங்கத்தின் தலைமைச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசுகையில்,

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 95 மில்லியன் ரூபாவை செலுத்த முடியாத இலங்கை மின்சார சபை எவ்வாறு லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்திடம் இருந்து எரிபொருளை கடனாக பெற்றுக் கொள்ள முடியும்.

லங்கா ஐ.ஓ.சி குறுகிய காலத்திற்கு கடனில் எரிபொருளை வழங்கும். கடன் ஒப்பந்தம் சில நிபந்தனைகளின் அடிப்படையில் இருக்கும்.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் போன்று கடன் திருப்பிச் செலுத்துவதில் ஏற்படும் தாமதங்களை லங்கா ஐஓசி பொறுத்துக் கொள்ளாது.

இலங்கையின் அனல் மின் நிலையங்களுக்கான கோரிக்கைகள் ஒரு நிபந்தனையை உள்ளடக்கியர்.

இலங்கையின் எரிபொருள் மற்றும் எரிசக்தித் தொழில்களுக்கு இந்தியா உரிமை கோர முயல்கிறது-என்றார். (அ)

## கொரோனா மரண வீதம் நாளாந்தம் உயர்கின்றது

கொழும்பு, பெப். 20

வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் கொரோனா தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைப் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஒட்சிசன் தேவைப்படும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும் அந்த எண்ணிக்கை தற்போது 12 வீதமாகக் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அன்றாடம் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், அந்த எண்ணிக்கை 17 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாள்தோறும் கொரோனா வைரஸ் தொற்று கரணமாக மரணிப்போரின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர்களில் 60 வீதமானோர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத வர்களென்றும் அவர் கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள தடுப்பூசிகளை முறையாகப் பெற்றுக்கொள்வதில் மக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)




## முல்லேரியா வைத்தியசாலையில் விமானப்படை புனர்நிமாண பணி

கொழும்பு, பெப். 20

முல்லேரியா தேசிய மனநல வைத்தியசாலையின் விடுதி இல 03 விமானப்படையினால் புனர்நிர்மாணம் செய்து நன்கொடைகளுடன் கடந்த 15ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

கொழும்பு விமானப்படைத் தளத்தினால் இந்த வைத்தியசாலைக்கான வைத்திய உபகாரணங்களும் இதன்போது வழங்ககப்பட்டன.

இந்த வேலைத்திட்டம் விமானப்படை சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி . சார்மினி பத்திரனவின் வழிகாட்டலின் கீழ் கொழும்பு விமானப்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் டில்ஷான் வாசகேயின் மேற்பார்வையின்கீழ் இடம் பெற்றதாக விமானப்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## ஷானி அபேசேகர உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல்

கொழும்பு, பெப். 20

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் வகையிலான உத்தரவொன்றை வழங்குமாறு கோரியே அவர் இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்துள்ளார். ஈஸ்டர் தாக்குதலை முன்னின்று நடத்திய சஹ்ரான் ஹாசிம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்கத் தவறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் குளியாபிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் அறிக்கையொன்று தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

இந்த நிலையில், குறித்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, தன்னைக் கைது செய்வதற்கான எந்தவொரு முயற்சியையும் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு ஷானி அபேசேகர தனது அடிப்படை உரிமை மனுவில் கோரியுள்ளார். (அ)

## பொலிஸ் கான்ஸ்டபிள் கொலை; பிரதான சந்தேகநபர் அடையாளம்

கொழும்பு, பெப். 20

தங்காலை-வித்தாரந்தெனிய பகுதியில், ஆயுதம் ஒன்றினால் தாக்கப்பட்டு, பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தின், பிரதான சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் 15 பேர் ஈடுபட்டிருந்தமை தெரியவந்துள்ளாக அவர் குறிப்பிட்டார்.

அவர்களைக் கைதுசெய்வதற்காக, விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. தனிப்பட்ட பிரச்னை காரணமாக இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மதுபோதையில் இருந்த, குறித்த 15 பேர் கொண்ட குழுவினர், பொலிஸ் கான்ஸ்டபிளின் வீட்டுக்கு சென்று தாக்குதல் நடத்தியுள்ளனர். குறித்த பொலிஸ் உத்தியோகத்தரும், அவரது சகோதரரும் வீட்டில் வைத்து தாக்கப்பட்டனர்.

பின்னர், சந்தேகநபர்கள் பொலிஸ் உத்தியோகத்தரை அருகிலுள்ள உணவகத்துக்கு அழைத்து சென்று தாக்குதல் நடத்தியதில் அவர் உயிரிழந்துள்ளாரென விசாரணைகளில் வெளிவந்துள்ளன.

சம்பவத்தில் காயமடைந்த அவரது சகோதரர் கராப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார் என தெரிவிக் கப்படுகின்றது. (அ)

## பிரதேச சபை உறுப்பினர்கள் ஏழு பேர் உடனடியாக நீக்கம்!

### ஐ.தே.க. அதிரடி நடவடிக்கை

கொழும்பு, பெப். 20

காலி மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய ஏழு உறுப்பினர்களை நீக்குவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் ஐந்து பிரதேச சபைகளைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவினால் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

இமதுவ பிரதேச சபையில் இருவரும் ஹபராதுவ, கரந்தெனிய பத்தேகம, யக்கலமுல்ல, பெந்தோட்டை ஆகிய பிரதேச சபைகளில் தலா ஒவ்வொருவரும் இவ்வாறு நீக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து காலி மாவட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அதிகாரி டபிள்யூ. எச். ஆர். விஜேகுமாரவுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்.

கடந்த தேர்தலின்போது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாக செயற்படாமல் ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு இவர்கள் உழைத்தனர் என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஒழுக்காற்றுக் குழுவின் விசாரணைகளின் பின்னர் இவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். (அ)

## சுற்றுலாத்துறை மூலம் இந்த வருடம் இலங்கை 1,800 மில்லியன் டொலர் வருவாய் எதிர்பார்ப்பு

கொழும்பு, பெப். 20

இந்த வருட இறுதிக்குள் சுற்றுலாத்துறை மூலம் 1,800 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் ஈட்ட மூடியும் என இலங்கை மத்திய வங்கி கணித்துள்ளது.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இவ்வருடம் சுற்றுலாத்துறை அதிக வருமானத்தை ஈட்டும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் சுற்றுலா மூலம் 682 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் ஈட்டப்பட்டது. இது 2021 இல் 260 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்ததாக அவர் கூறினார்.

2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டில் சுற்றுலா வருவாய் குறைவதற்கு நாடு முடக்கப்பட்டமை, பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டமை உள்ளிட்டவையே முக்கிய காரணங்கள் என்று கப்ரால் கூறினார்.

2021 நவம்பரில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 44,294 ஆக இருந்தது. இது டிசம்பரில் 89,506 ஆக அதிகரித்தது என புள்ளிவிவரங்களை மேற்கோள் காட்டி ஆளுநர் குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சுற்றுலாத்துறையில் மீண்டும் அதிகரிப்பு ஏற்படும் என நம்பிக்கை வெளியிட்ட மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இவ்வாண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிக அளவில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். (அ)




# இந்திய பிரதமரின் இலங்கை விஜயம்?

## தெளிவான அரசியல் புரிதலில் தமிழ் தலைவர்களின் மேம்பட்ட ஒற்றுமை ஏற்படுமா?

## எல்லோரும் இணைந்த ஜனநாயக எழுச்சி என்று தோன்றும்?

‘இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு செல்லப்போகிறாரா?’ என்று சில நாட்களுக்கு முன்பு என்னைப் பேட்டிகண்ட சென்னை பிபிசி தமிழின் என் இனிய நண்பர் முரளிதரனிடம் கேட்டேன். இந்தியாவிலிருந்து ஒரு விசைப்படகில் சென்றாலே ஒரு மணிநேரத்தில் சென்றடைந்துவிடக்கூடிய நாடான இலங்கையுடனான உறவைப் பலப்படுத்தவும், அரசியல், பொருளாதாரம் மற்றும் சராசரி மக்களின் வாழ்வின்மீதான சீன ஆதிக்கத்தை குறைக்கவும் இந்தியா என்ன செய்யவேண்டும்? மோடியின் பயணத்தில் என்னென்ன செய்யலாம்? என்று முரளி கேட்டிருந்தார். முகநூல் நேரலையிலும் பிபிசி இதை ஒளிபரப்பியது. பிபிசி என்பது ஈழத்தமிழர்களுக்கு விருப்பமான செய்தி ஊடகம் என்பதால் நீங்கள் பலரும் இதைப் பார்த்திருக்கக்கூடும்.


இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பெப்ரவரி 6-8 இல் டெல்லிக்கு சென்றிருந்தபோது அதுபற்றி செய்தி வெளியிட்ட ஊடகங்கள், பிரதமர் மோடி மார்ச் 31ஆம் திகதியில் பி.ஐ.எம்.எஸ்.டி.ஈ.ஸி உச்சி மாநாட்டுக்கு வருகை தருவார் என்று தெரிவித்தன. ஆகையால்தான் பிபிசி முரளி என்னைப் பேட்டி கண்டார். ‘இந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு அதிகாரபூர்வமாக வருகை தருமாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி. எல். பீரிஸ் அழைப்பு விடுத்தார்’ என்று கொழும்பின் இந்திய தூதர் தன்னுடைய அறிக்கையில் கூறியிருந்தார். மேலும் அவர் அதில், ‘மார்ச் 2022இல் நடக்கப்போகிற பி.ஐ.எம்.எஸ்.டி.ஈ.ஸி உச்சி மாநாட்டுக்கு இந்தியாவின் பிரதமர் வருகை தரப்போகிறார். இதை இலங்கை ஆவலுடன் எதிர் நோக்கியிருக்கிறது’ என்றும் கூறி யிருந்தார்.

பி.ஐ.எம்.எஸ்.டி.ஈ.ஸி அமைப்பு 18 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது. வங்காள விரிகுடா பகுதியில் பல்வேறு துறைகளில் தொழில்நுட்ப மற்றும் பொருளா தாரக் கூட்டுறவுக்கான இந்த அமைப்பில் வங்கதேசம், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய ஏழு நாடுகள் உறுப்பு நாடுகளாக இணைந்திருக்கின்றன. இந்த அமைப்பிற்கான தலைமைப்பொறுப்பு சுழற்சி முறையில் நிர்வகிக்கப்படுகிறது. இப்போதைய தலைமைப் பொறுப்பில் இருக்கும் இலங்கை, மார்ச் 31இல் நடக்கவிருக்கிற உச்சி மாநாட்டில் தாய்லாந்திடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைக்கும்.

பி.ஐ.எம்.எஸ்.டி.ஈ.ஸி உச்சி மாநாட்டுக்கு பிரதமர் மோடி வருகை தரப்போகிறார் என்பதுபற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் இந்திய அரசிடமிருந்து உறுதிப்படுத்தப்படவில்லை என்றாலும் அவர் இந்த மாநாட்டில் கலந்துகொள்வது இந்தப் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலையை நிலைகுலையாமல் காக்கும். மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை பலப்படுத்தும். இலங்கையின் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ சென்ற ஆண்டு டிசெம்பர் மாதம் டெல்லிக்கு வந்து, அந்நிய செலவாணி மேலும்மேலும் சரியாமலும், மருந்து, எரிபொருள் மற்றும் உணவுப்பொருட்களில் தட்டுப்பாடு வராமல் இருக்கவும் இந்தியாவிடமிருந்து உதவி தரப்படும் என்ற உறுதியைக் கேட்டுப் பெற்றார். அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவும் இலங்கையும் திருகோணமலை எண்ணெய்க் கிணறு தளங்களை மேம்படுத்துவதற்கான கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கின்றன.

சென்ற ஆண்டு செப்ரெம்பர் மாதம் நியூ யோர்க் நகரத்தில் ஐ. நா. பொதுக் குழு கூட்டத்தின்போது பீரிஸை ஜெய்ஷங்கர் சந்தித்தார். இந்த ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி, பஸிலுடன் இணையவழியில் சந்திப்பு நடத்திய ஜெய்ஷங்கர், பொருளாதாரம் மற்றும் பிற பிரச்னைகளை விவாதித்தார். “இந்தியா எப்போதும் இலங்கையுடன் துணை நிற்கும்” என்று உறுதியளித்தார். அடுத்த ஓரிரு வாரங்களில் மீண்டும் டெல்லிக்கு செல்லவிருக்கிற பஸில், இந்தியாவிலிருந்து கிடைக்கவிருக்கிற பொருளாதார நிவாரணத் தொகை பற்றிப் பேசுவார். கடந்த இரண்டு மாதங்களில் அவர் மேற்கொள்ளும் இரண்டாவது பயணமாக இது அமையும். இணையவழியில் அல்லாமல் பி.ஐ.எம்.எஸ்.டி.ஈ.ஸி உச்சி மாநாட்டுக்கு பிரதமர் மோடி நேரடியாக வருகைதந்து, பதிமூன்றாம் திருத்தச் சட்டத்திருத்தத்தை அமல்படுத்துவது, ஈழமக்களுக்கான அரசியல் உரிமைகள், பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்வது குறித்து பிரதமர் மோடிக்குக் கூட்டு அறிக்கை அனுப்பிய தமிழ்த் தலைவர்களையும் சந்தித்தால் அது இன்னும் பயனளிக்கும்.

ஒருவேளை அப்படி ஒரு சந்திப்பு நடந்தால், பிரதமர் மோடியுடன் அமர்ந்து விவாதித்து ஒற்று மையான, ஒரு மித்த



**- பகவான் சிங் -**
*தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்*

மனதுடன் தங்களது கருத்துக்களைத் தமிழ்த் தலைவர்கள் முன்வைப்பார்கள் என்று நாம் நம்பலாமா? அது நடக்கக்கூடும் என்று நான் நம்பிக்கொண்டிருந்தேன். ஆனால், புதன்கிழமை என்னை அழைத்த ஓர் உற்ற யாழ் நகர் நண்பர், “கூட்டு முயற்சிகள் குழம்பிப்போயின, மாவை சொதப்பிவிட்டார்” என்றார். அன்று நடந்த தமிழ்த் தலைவர்கள் கூட்டத்தில் மாவை குழப்பிவிட்டார் என்று கூறினார். “ஒருவேளை வெளியிலிருந்து எதாவது ஒரு சக்தி இவர்களை ஆட்டி வைக்கி றதோ என்ற சந்தேகம் எழுகிறது. அதுமட்டுமின்றி, சிலபேர் சரியான சுயநலத்திற்காக செயல்பட்டுக்கொண்டிருக்கி றார்கள். நம் தலைவர்கள் எப்போது மாறு வார்கள்? எப்போது மக்களைப் பற்றி சிந்திப்பார்கள்?” என்று புலம்பினார்.

எனக்கு மனம் சோர்ந்துவிட்டது. இந்த தலைவர்கள் எப்போது பாடம் கற்றுக்கொண்டு ஒற்றுமையாக செயல்படுவார்கள்? எப்போது தன்னலத்தை விட்டு மக்கள் நலனுக்காக இணைவார்கள்? எப்போது நம் ஈழமக்கள் கண் திறந்து அறிவைக் கூர்தீட்டி இவர்களின் சுயநலனை உணர்ந்து இவர்களை ஒதுக்குவார்கள்? மாணவர்கள், கல்வியாளர்கள், பலதுறையினர், புலம்பெயர்ந்தோர், பெண்கள், தன்னலமற்ற அரசியல் தலைவர்கள் என எல்லாரும் இணைந்த ஜனநாயக எழுச்சி என்றைக்குத் தோன்றும்?

“எங்களைக் காப்பாற்ற நல்லூர் கந்தனிடம்தான் பிரார்த்தனை செய்யவேண்டும்” என்று கசப்புடன் கூறிய என் யாழ் நண்பர், “ஆனால், கந்தரையும் கோபப்பட வைத்தார்களே” என்று சொல்லி நிறுத்தினார். தனக்குள் யோசிப்பது போல குரலைத் தாழ்த்திக் கொண்டு, “கோயிலை சுத்தப்படுத்தினார்களா? பிராயசித்த வழிபாடுகளை செய்தார்களா? நம்முடைய சடங்கு, சம்பிரதாயம் எதுவும் தெரியாத ஒருவர், ஏன் நமது பூசாரி கூறிய மந்திரங்களின் பொருள் புரியாத ஒருவருக்கு கருவறையில் ராஜ மரியாதை தரப்பட்டது?” என்றார். நல்லூர் கந்தன் கோயிலில் திறந்த மார் புடன் வேட்டி கட்டிக்கொண்டு வந்து வழிபட்டதாக நடித்த சீன தூதரின் வரு கையைத்தான் எனது நண்பர் அவ்வாறு விமர்சித்தார்.

கொழும்பு அரசாங்கத்தின் நெருங்கிய நண்பர் ஒருவருடன் சில வாரங்கள் முன்பு பல விஷயங்கள் பேசிக்கொண்டோம். சீனத் தூதர் ஜீ ஜென்ஹாங் சென்ற டிசெம்பரில் யாழ்ப்பாணம் சென்றதைப் பற்றியும் உரையாடல் நீண்டது. “அதிலிருந்து மீண்டு வந்துவிட்டோம்” எனவும், சீனாவின் பிடியிலிருந்து வெளியில் வந்துகொண்டிருப்பதாகவும் அவர் கூறினார். மேலும் அவர், “அது ஒரு ‘கமா’ கூட அல்ல, அதற்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது” என்று சிரித்தார். இதை எப்படி எடுத்துக்கொள் வது என்று எனக்குப் புரியவில்லை. சீனா உங்கள் தலையிலும் தோள்களிலும் வைத்திருக்கும் கடுமையான கடன் சுமையைப் பார்க்கும் போது இன்னும் இன்னும் குழப்பமாக இருக்கிறது. அவர் கூறியது மட்டும் உண்மையாக இருந்தால் அது உங்கள் சந்ததிக்கு, உங்கள் நாட்டுக்கு நன்மையைத் தரும் நிகழ்வாக இருக்கும்.

‘ஈழநாடு’இல் முன்பே பலமுறை சீனாவிடம் இருந்து வரும் கடன் சுழல் பற்றி எழுதியிருக்கிறேன். இந்தியாவிலிருந்து வரும் நிதி உதவிக்கும் சீனக் கடனுக்கும் உள்ள வேறுபாட்டைப் பற்றியும் விளக்கியிருக்கிறேன். இவை என்னுடைய கருத்துக்கள் மட்டுமல்ல. ஜனநாயக உலகின் பொருளாதார மேதைகள் பலரும் இதுபற்றிப் பேசியிருக்கிறார்கள். பல நாடுகளிடம் கடன் கொடுத்து சிக்கவைத்து முக்கியமான தேசிய சொத்துக்களை சீனா எப்படி அபகரித்து விழுங்கியது என்பதைப் பற்றிப் பல கட்டுரைகள் இருக்கின்றன. ‘டிராகனின்’ பிடி ஒரு நாட்டின் பொருளாதாரத்தையும், சொத்துக்களையும் மட்டும்தான் நசுக்குகிறது என்று சொல்லிவிடமுடியாது. அதோடு, மக்களின் அரசியல், கலாசாரத்தின் புகழையும், மொழிப் பற்று, சமுதாயத்தின் பெருமை, வாழ்வின் ஒழுங்கு என எல்லாவற்றையும் சேர்த்து நொறுக்கிவிடும்.

வெள்ளிக்கிழமையன்று ‘ரைம்ஸ் ஒவ் இந்தியா’வில் ஒரு சிறப்பான கட்டுரையைப் படித்தேன். மணிலாவைச் சேர்ந்த டி லா ஸலா பல்கலைக்கழகத்தின் சர்வதேசவியல் பேராசிரியரான ரெனாடோ குரூஸ் டி காஸ்ட்ரோவின் நேர்காணல் அது. செய்தியாளர் ருத்ரொனீல் கோஷிடம் பேசிய அவர், பல ஆண்டுகளாக சீனாவுக்கு ஆதரவாக இருந்த பிலிப்பைன்ஸ், இப்போது இந்தியாவிடமிருந்து அதிநவீன ப்ராமோஸ் ஏவுகணையை வாங்குவதற்காக ஒப்பந்தம் போட்டிருப்பது ஏன் என்றும், இந்த மனமாற்றம் தன் நாட்டிற்கு ஏன் வந்தது என்பது பற்றியும் விளக்கினார். “சீனா எங்களது தேர்தலுக்குள் தலையிடும். ராட்ரீகோ டுடெர்டேவின் ஆட்சிக்காலத்தின்போது ஆரம்ப கட்டத்தில் சீனா ஆதரவு மனநிலையில் இருந்தோம். சொல்லப்போனால், அப்போது சீனா பிலிப்பைன்ஸின் உற்ற தோழனாகக் கருதப்பட்டது. ஆனால், கடந்த ஓரிரு ஆண்டுகளில் எல்லாம் மாறிவிட்டது. எங்களது மனநிலையும் தலைகீழாகிவிட்டது. கடற்பகுதிகளில் சீனா வியாபிக்கத் தொடங்கியபோது, பெனிக்னோ ஆக்வினோவின் ஆட்சிக் காலத்தில் 2011ஆம் ஆண்டு தொடங்கி இந்த மனநிலையில் மெதுவாக மாற்றம் வந்தது” என்று கூறினார்.

அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான ‘க்வாட்’, இன்னும் செயலாற்றவேண்டும் என்று பேராசிரியர் காஸ்ட்ரோ வலியுறுத்தினார். அந்தப் பிராந்தியத்தில் உள்ள ஜப்பானுடனான பொருளாதாரப் பிணைப்பை அதிகப்படுத்தவேண்டும் என்றும் கூறினார். “பிலிப்பைன்ஸ் பிராந்தியத்தை விட்டுத் தள்ளி இருக்கும் அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் க்வாட் அமைப்பின்மூலம் இந்தப் பிராந்தியத்தில் ஜப்பான் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு தரவேண்டும்” என்று அவர் வாதிட்டார்.

என்னுடைய ‘ஈழநாடு’ கட்டுரைகளிலும் நான் இதுபற்றிப் பேசியிருக்கிறேன். இந்தியா உள்ள பிராந்தியத்தில்தான் இலங்கை இருக்கிறது என்பதால், டிராகனின் பிடியிலிருந்து இலங்கையை மீட்க, இந்தியா மூலமாகவே க்வாட் அமைப்பு செயல்படும் என்று கூறினேன். கடந்த ஆறு மாதங்களில் அமைச்சர்கள், உயரதிகாரிகளின் தொடர் சந்திப்புகள் மற்றும் வருகைகள் மூலமாக டெல்லிக்கும் கொழும்புக்கும் இடையில் அதிவேக பிணைப்பு ஏற்பட்டு வருகிறது. க்வாட் அமைப்பின் ஆதரவுடன் இலங்கைக்குக் கைகொடுத்து, பொருளாதார சிக்கலிலிருந்தும் சீனாவின் பிடியிலிருந்தும் மீட்பதற்கான முயற்சி இது.

அதேநேரம், இந்தியப் பெருங்கடலில் சீனா பரவாமல் தடுக்கவேண்டுமானால் க்வாட் அமைப்புக்கு இலங்கையின் ஆதரவு தேவை. இலங்கை மக்களுக்கு, குறிப்பாக ஈழமக்களுக்கு இது ஒரு பொன்னான வாய்ப்பு. தங்களது அன்றாட வாழ்வை முன்னேற்றிக்கொள்ளும் கோரிக்கைகளை அவர்கள் உரிமையுடன் கேட்டுப் பெறலாம். தெளிவான அரசியல் புரிதல், மேம்பட்ட ஒற்றுமை ஆகியவை இருந்தால்தான் இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் இந்த முயற்சியில் நல்ல பலன் கிடைக்கும்.

சுயநலமிக்க அரசியல்வாதிகளை எவ்வளவு விரைவாகக் கண்டுபிடித்து, அதிகார மையங்களிலிருந்து அவர்களை அகற்றிவிடுவோமோ, சவாலான இந்த சூழலில் அது அந்த அளவுக்கு நன்மை தரும். நமக்கு இருக்கும் நேரம் குறைவு.

மீண்டும் சந்திப்போம்.
வணக்கம்.

# இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கு என்ன தீர்வு?







**பானூ கார்த்திகேசு**

**கடந்த 30 ஆண்டுகளாக யுத்தத்தின் கோரப்பிடியில் இருந்து விடுபட்ட மக்கள் எவ்வித தொழில் நுட்ப வசதியுமின்றி பாரம்பரிய மீன்பிடிக்கின்றார்கள். அதேநேரம் பாரியளவிலான தொழில் நுட்ப வளர்ச்சியுடன் கூடிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கின்றார்கள்.**

இலங்கை இந்திய மீனவப் பிரச்சினையானது அண்மைக்காலமாக தீவிரம் அடைந்த வண்ணம் உள்ளது. இரு தரப்பு மீனவர்களும் ஒருவரை ஒருவர் சாடுவதுடன், நடுக்கடலில் மோதல்களும் நடந்துள்ளன. இரு தரப்பு அரசுக்களும் இந்தப் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவர ஆக்கபூர்வமாக எதனையும் செய்யவில்லை. இரு நாட்டு மீனவர்களின் பிரச்னையும் எதிர்காலத்தில் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் மத்தியிலும் பிளவினை ஏற்படுத்துமா என்ற சந்தேகம் எழுந்த நிலையில் இது குறித்து இரு தரப்பு புத்திஜீவிகளின் கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.

“இந்தப் பிரச்னை, இரு நாடுகளுக்கு இடையிலான பிரச்சினை. ஆனால் அதை தீர்ப்பதற்கு இருநாட்டு அரசாங்கங்களும் எவ்வித முயற்சியும் எடுக்காது. தமிழர் மத்தியில் பிரிவினை ஏற்படுத்துவதற்காகவென திட்டமிட்ட வகையில் செயற்படுவதாக நான் நினைக்கிறேன்“ என்று கூறுகின்றார் இலங்கையின் முன்னணி தனியார் தொலைக்காட்சி அலைவரிசையின் முன்னாள் செய்திப் பிரிவின் பணிப்பாளரும், இந்தியாவில் சென்னையில் சர்வதேச ஊடகங்களுக்கு செய்தியாளராக பணியாற்றும் ஏழுமலை பிரகாஸ்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், “இலங்கையின் எல்லைப் பகுதியிலேயே அதிகளவிலான மீன்கள் கிடைக்கின்றன. இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஜீ.பி.எஸ் உபகரணம் தரமானதாக இல்லை. அதிகளவிலான மீன் வளத்தை நாடி வருகின்ற மீனவன் சரியான எல்லைக் கோடுகளை நிர்ணயிக்க முடியாமையினால், இலங்கை இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு இலக்காகின்றான்.

தமிழக கடற்கரையில், கடற்பாறைகள், திட்டைகள் என்பன அதிகளவில் இருப்பதால், கடற்கரையில் இருந்து சுமார் 4 கிலோ மீற்றருக்கு அப்பால், சிறிய வள்ளம், படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடலாம். இந்திய மீனவர்கள் பெரிய லோன்சர் படகுகளைப் பயன்படுத்தி சுமார் 7- 8 கிலோமீற்றருக்கும் அப்பாற் சென்று மீன் பிடியில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான படகுகளில் சுமார் பத்துக்கும் மேற்பட்டவர்கள் பயணிக்கின்றனர். அவர்களுக்கான உணவு, சம்பளம், எரிபொருள் செலவு எனக் கணக்குப் பார்க்கும் போது கச்சைதீவில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடுவதே சிறந்தது. இருதரப்பு தமிழ் மக்களினதும் தமிழர் என்ற உணர்வியலுக்கு அப்பால் வாழ்வாதாரம் என்பது பாரிய பிரச்சினையாக எழுந்து நிற்கின்றது.

கடந்த 30 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஆனபோதிலும் வடக்கு வாழ் தமிழருக்கும் இந்தியத் தமிழர்களுக்கும் இடையிலான ஒற்றுமையுடன் கூடிய உறவுப்பாலமொன்று கட்டமைக்கப்பட்டது. தமிழக மீனவர்கள் பயன்படுத்துகின்ற இரட்டைமடி மீன் பிடிமுறையானது தவறானதுதான். கடலின் கற்ப வளத்தையே சுரண்டிச் செல்கின்ற செயற்பாடுதான். அது தவறு என்றால் இருநாட்டு அரசாங்கங்களும் சட்டங்களை கடுமையாக்குங்கள். கைது செய்யுங்கள் அதைவிடுத்து உயிர், பொருட்சேதம் விளைவிப்பது எந்தவிதத்தில் சரியானது.

இராமேஸ்வரம் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள மீனவர்களில் ஒரு பகுதியினர் கோழித்தீவின உற்பத்தியை தங்களது பாரம்பரிய சீவனோபாயமாக மேற்கொள்கின்றனர். அவர்களுக்கு இந்த இரட்டை மடி வலையைப்பயன்படுத்தி பிடிக்கின்ற மீன்களில் கழிவு மீன்கள், கடல் பாசிகள் என்பனவும், இலங்கையின் பேசாலை பகுதிக்கு அண்மையில் பிடிக்கப்படுகின்ற மீன்களுமே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. இரட்டை மடி முறையைத் தடைசெய்தால் நாளைக்கு அவர்களது நிலை என்ன?“ என்கிறார் ஏழுமலை பிரகாஸ்.

கடந்த 30 ஆண்டுகளாக யுத்தத்தின் கோரப்பிடியில் இருந்து விடுபட்ட மக்கள் எவ்வித தொழில் நுட்ப வசதியுமின்றி பாரம்பரிய மீன்பிடிக்கின்றார்கள். அதேநேரம் பாரியளவிலான தொழில் நுட்ப வளர்ச்சியுடன் கூடிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கின்றார்கள். இதுவும் ஒருவகையில் ஈழத் தமிழ் மக்களைச் சுரண்டும் செயற்பாடுதான். இப்பிரச்னையை வெறும் உளவியல் ரீதியாகப் பார்க்காது சமூக, பொருளாதார, அரசியல் ரீதியிலும் அணுக வேண்டியுள்ளது.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆர்ப்பாட்டமோ, பாத யாத்திரைகளோ பயன்படாது. இரு நாடுகளும் தங்களது மீனவர்களை முன்னிறுத்தி மாநாடுகள், கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து, இரு தரப்பு மீனவர்களும் தங்களது கருத்துக்களை சுமுகமாகப் பேசி தீர்க்க இடமளிக்க வேண்டும். இவ்விரு தரப்பினர் மத்தியிலும் சிறந்த உறவின் கூடிய புரிந்துணர்வு கட்டியெழுப்பட்டதன் பின்னரே அவர்களை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கான அனுமதியளிக்கப்பட வேண்டும். இந்நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இவ்விரு அரசாங்கங்களும் முயற்சிக்காது காரணம், கடத்தல் தொழிலை நிரந்தரமாக மேற்கொள்ளும் பொறுப்பற்றவர்கள் உள்ளூர் அரசியல்வாதிகளை தம்வசமாக்கிக் கொண்டு இப்பிரச்னையை தீர்ப்பதற்கு பதிலாக மேற்கொண்டு வளர்ப்பதற்கான நடவடிக்கையையே மேற்கொள்கின்றனர்.

இதனால் உண்மையில் பாதிக்கப்படுவது, சிறுப்பிட்டி, பேசாலை போன்ற பகுதிகளைச் சேர்ந்த சிறு மீன்பிடி மீனவர்களே. தமிழக, வடக்கு மீனவர்கள் சார்பில் இரு நாட்டு அரசாங்கங்களும் பேச்சு வார்த்தை நடத்துமா? என்றால் அது பகற்கனவே.

“நாங்கள் இருக்கின்றோம்“ என்பதை நினைவூட்டும் விதமாக அமையும் இலங்கை கடற்படையின் நடவடிக்கைகளானது இருநாட்டு மீனவர்களுக்கு இடையிலான உறவினைக் கட்டியெழுப்புவதற்கு குந்தகமாக அமைகின்ற மற்றைய விடயமாகும். எனவே எதிர்காலத்திலும் சட்ட விரோத கடத்தல் தொடரத்தான் போகின்றது, எல்லை மீறிய மீன்பிடி பிரச்சினை அப்படியேதான் இருக்கப்போகிறது,இலங்கை இராணுவமும் தங்களது செயற்பாடுகளை செய்யத்தான் போகின்றனர்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை நிலவிய காலகட்டத்தில், இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இந்திய எல்லைப்பரப்புக்குள் பிரவேசித்த போது அவர்களைத் ‘தமிழர்கள்’ என்ற உணர்வுக் கண்கொண்டு பார்த்தவர்களை விடவும் சந்தேகக் கண்கொண்டு பார்த்தவர்களே அதிகம். இன்றளவும் அப்படியான கண்ணோட்டத்திலே தான் பார்க்கின்றார்கள். பிரிவினை என்ற கருத்தில் பார்க்க வேண்டுமாயின் எமது வரலாற்றுப் பக்கங்களையும் கொஞ்சம் உற்றுப் பார்க்க வேண்டும். ராஜீவ் காந்தி கொலைப் பிரச்சினை, தமிழ் நாட்டில் வாழும் அகதிகள் பிரச்சினை என்று பல பிரச்சினைகள் உள்ளன. இப்பிரச்னையை ஒட்டுமொத்த தமிழர்களின் பிரச்சினை என்று வரையறுக்க முடியாது. அது இராமேஸ்வரம், நாகர் கோவில், இலங்கையின் வடக்குப் பகுதியில் வாழும் தமிழ் பேசும் மீனவ மக்களினது பிரச்சினை. அதேநேரம் அப்பகுதியில் தான் அதிகளவிலான சட்டவிரோத கடத்தல்கள் நடைபெறுகின்றன. எனவே இப்பிரச்னை மாத்திரம் தமிழர்கள் மத்தியில் பிளவினை ஏற்படுத்திவிடும் என்ற உளவியல் கருத்தியலில் பார்க்க முடியாது என்கிறார் இலங்கையில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவின் பயிற்றுவிப்பு உத்தியோகத்தராகப் பணியாற்றும் தவராசா தர்சன்.

போருக்குப் பின்னர் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டமைக்க வேண்டிய சூழ்நிலையில், இப்பிரச்னை சிறுபான்மை மக்களிலும் ஒரு பகுதியினரின் வாழ்வாதாரப் பிரச்னையாக உள்ளது. இதனால் பெரும்பான்மை மக்கள் பாதிக்கப்படுவதில்லை. அவர்களின் வாக்குப் பலத்தை கொண்டு ஆட்சியை அமைத்த தலைவர்கள் கண்டுகொள்ளப்போவதில்லை. இதற்கான தீர்வினை எட்டுவதற்கு தமிழ் மக்களின் வாக்குபலத்தால் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்த தலைமைகளே முயற்சிக்க வேண்டும். இன்றைய வடபகுதி அரசியல் தலைமைகள் தங்களது அரசியல் நகர்வுகளொவ்வொன்றிலும் இந்தியாவில் தங்கியுள்ளது. இதேவேளை இரு நாட்டு மத்திய அரசாங்கமும் சாணக்கியவாத அரசியலை மேற்கொள்கின்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க...)



# பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் 15 வயதேயான சிறுமியின் கனவு கலைந்ததற்கு யார் காரணம்?

**குளிர்கால ஒலிம்பிக் போட்டி போல இது தோன்றினாலும் அரசியல் பின்னணி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. சீனாவின் தற்காலிக நட்பு நாடுகள் இதில் கலந்து சிறப்பிப்பதையும், மனித உரிமை மீறல்களைக் காரணம் காட்டிச் சில நாடுகள் இந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் முதல் நாள் நிகழ்வைப் பகிஷ்கரித்து இருப்பதையும் பார்க்க முடிகின்றது. நாடுகள் குழுக்களாகப் பிரிந்திருப்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.**

குரு அரவிந்தன்




நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி இம்முறை சீனாவில் நடைபெறுகின்றது. கொரோனா- 19 பரவல் காரணமாக உலகம் ஒருபுறம் உறைந்து போயிருக்க, மறுபுறம் உறைபனியில் இடம் பெறும் விளையாட்டுக்களுக்கான ஒலிம்பிக் போட்டிகள் சீனாவில் ஆரம்பமாகி விட்டது. பனிப்பிரதேசங்களில் உள்ள நாடுகளே அனேகமாக இப்போட்டியில் கலந்து கொள்கின்றன.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி 24 வது குளிர்கால ஒலிம்பிக் போட்டி சீனாவின் பீஜிங்கில் உள்ள தேசிய விளையாட்டரங்கில் சீன அதிபர் ஜின்பிங்கினால் உத்தியோக பூர்வமாக தொடக்கி வைக்கப்பட்டது. இம்மாதம் 20 ஆம் திகதிவரை இப்போட்டிகள் தொடர்ந்து நடைபெறும். 20 ஆம் திகதி இறுதிநாள் கொண்டாட்டம் நடைபெறும். பீஜிங்கில் 2 ஆம் திகதியே சில போட்டிகள் ஆரம்பமாகி இருந்தன. இரண்டாவது தடவையாக ஒலிம்பிக் போட்டி பீஜிங்கில் நடைபெறுகின்றது. 2008 ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டி இங்கேதான் நடைபெற்றது. இந்த வகையில் இரண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய முதலாவது தலைநகரமாக பீஜிங் சாதனை படைத்திருக்கின்றது. 2026 ஆம் ஆண்டு அடுத்த குளிர்கால ஒலிம்பிக் இத்தாலியில் உள்ள மிலான் நகரத்தில் நடக்க இருக்கின்றது.

கிரேக்க தேசத்தில்தான் முதன் முதலாக ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அதனால் பொதுவாக கிரேக்க நாடுதான் எந்த நாட்டில் ஒலிம்பிக் போட்டி நடந்தாலும், ஆரம்ப விழாவில் முதலில் கொடிபிடித்து வருவார்கள். எந்த நாட்டில் போட்டி நடக்கின்றதோ, அந்த நாட்டு மொழியின் அகர வரிசைப்படிதான் நாடுகளின் பட்டியல் இருக்கும். இம்முறை சீனாவில் நடைபெறுவதால், சீன மொழியின் அகரவரிசையில் பட்டியல் அமைந்திருக்கின்றது. 1924 ஆம் ஆண்டு முதலாவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி பிரான்ஸில் உள்ள ஷாமோனிக்ஸ் என்ற இடத்தில் நடைபெற்றது. இம்முறை இந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் 91 நாடுகளைச் சேர்ந்த 2871 விளையாட்டு வீரர்கள் பங்கு பற்றுகிறார்கள். இதில் 1581 ஆண்களும், 1290 பெண்களும் கலந்து கொள்கிறார்கள். விளையாட்டு வீரர்களில் இதுவரை சுமார் 50 பேர்வரை கொரோனா தொற்றுக்கு உள்ளாகி இருப்பது பரிசோதனையில் தெரிய வந்துள்ளது. 15 வகையான விளையாட்டுக்கள் இடம் பெறுகின்றன. ஏற்கனவே உள்ள குளிர்கால விளையாட்டுக்களோடு சுமார் 7 புதிய குளிர்கால விளையாட்டுக்களை இம்முறை பீஜிங் போட்டியில் அறிமுகம் செய்திருக்கிறார்கள். இந்தப் போட்டியில் 223 அமெரிக்க வீரர்கள் இதில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய நிலையில் நோர்வே நாடு 12 தங்கப் பதக்கங்கள் உட்பட 26 பதக்கங்களைப் பெற்று முதலாவதாக நிற்கின்றது. கனடா 2 தங்கப்பதக்கம் உட்பட 17 பதக்கங்களை இதுவரை பெற்றிருக்கின்றது.

சில நாடுகள் உத்தியோக பூர்வமாக ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ள மறுத்து விட்டன. சீனாவின் நட்பு நாடுகளில் முக்கியமாக ரஸ்யா நாட்டு அதிபர் மற்றும் பாகிஸ்தான் நாட்டு அதிபர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா, பிரித்தானியா ஆகிய முக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் ஆரம்ப விழாவில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் விளையாட்டு வீரர்கள் போட்களில் பங்கு பற்றுகின்றார்கள். சீனாவில் நடக்கும் மனித உரிமை மீறல்களைக் காரணம் காட்டி இந்த நாடுகள் முதல்நாள் நிகழ்ச்சியைப் பகிஷ்கரித்தன. இந்தியா போட்டியில் கலந்து கொண்டாலும் சில காரணங்களுக்காக முதல் நாள் ஆரம்ப நிகழ்வுகளைப் புறக்கணித்து இருக்கின்றது. புறக்கணிப்புக்குக் காரணம் இந்திய சீன எல்லையான கல்வான் பள்ளத்தாக்கில் நடந்த சண்டையில் ஈடுபட்ட சீன நாட்டு இராணுவ கமாண்டர் ஒருவர் ஒலிம்பிக் பந்தத்தை ஏந்திச் சென்றதே காரணமாகும்.

விளையாட்டில் அரசியலைக் கலக்கிறார்கள் என்று இந்தியா குற்றம் சாட்டியிருந்தது. அரச தொலைக்காட்சியான தூரதர்சன் இந்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதில்லை என்றும் அறிவித்திருக்கின்றது. உலகிலேயே இரண்டாவது அதிக ஜனத்தொகையைக் கொண்ட நாடான இந்தியாவில் இருந்து வடக்கே உள்ள ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த ஆரிப்கான் என்ற ஒருவர் மட்டுமே இதில் கலந்து கொள்வது உங்களுக்கு அதிசயமாக இருக்கலாம், ஆனால் அரசியல் பின்னணி காரணமாக எத்தனையோ திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டிய இந்தியா இந்த நிலைக்கு வந்துவிட்டதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

2014 ஆம் ஆண்டு ரஸ்யாவின் சோச்சி நகரில் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி நடந்த குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் போது சுமார் 50 பில்லியன் யூரோக்கள் செலவிடப்பட்டது. 16 நாட்கள் நடைபெற்ற இந்தப் போட்டியின் போது 2900 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். இந்தப் போட்டிகளை நடத்திய ரஸ்யா மொத்தம் 13 தங்கப் பதக்கங்கள் உட்பட 33 பதக்கங்களை வென்று முதலிடத்தைப் பெற்றது. நோர்வே 11 தங்கப் பதக்கங்கள் உட்பட 26 பதக்கங்களைப் பெற்று இரண்டாவது இடத்தையும், கனடா 10 தங்கப் பதக்கங்கள் உட்பட 25 பதக்கங்களைப் பெற்று மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. அமெரிக்கா 9 தங்கப்பதக்கங்கள் உட்பட 28 பதக்கங்களைப் பெற்றிருந்தது. இந்தப் போட்டிக்கான நாட்டைத் தெரிவு செய்யும் இறுதிச் சுற்றில் தென்கொரியாவோடு ரஸ்யா போட்டி போட்டது. தென்கொரியா 47 வாக்குகளும் ரஸ்யா 51 வாக்குகளும் பெற்றதால், ரஸ்யா தெரிவானது.

2022 போட்டிகளை நடத்துவதற்காக மூன்று நாடுகள் போட்டியிட்டன. மலேசியா தலைநகரான கோலாலம்பூரில் நடந்த வாக்கெடுப்பின் போது, கசக்கஸ்தான் 40 வாக்குகளையும், சீனா 44 வாக்குகளையும் பெற்று சீனா இறுதியாகத் தெரிவானது. இந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு சீனா 3.9 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிட்டுள்ளது. முதலாவது தங்கப்பதக்கம் தெரேஸ் ஜோஹோக் என்ற நோர்வே நாட்டு வீரருக்குக் கிடைத்திருக்கின்றது. ஆஸ்திரியாவைச் சேர்ந்த ஜோஹனஸ் ஸ்டிரோள்ஸ் அல்பைன் பனிச்சறுக்கலில் தங்கப்பதக்கத்தைப் பெற்றார். இவரது தந்தையும் முன்பு தங்கப்பதக்கம் பெற்றிருந்தார். காமிலா வலீவா என்ற 15 வயதான ரஸ்ய சிறுமி, பெண்களுக்கான ஒற்றை ஸ்கேட்டிங் போட்டியில் முதலிடத்தைப் பெற்றிருந்தார். ஆனால் மருத்துவ சோதனையில் ஊக்க மருந்து அவர் பாவித்திருப்பது தெரிய வந்ததால் போட்டியில் இருந்து அவரை விலக்கியுள்ளனர். இதனால் உலக சாதனைக்கான அவரது நீண்டகாலக் கனவு கலைந்துபோய் விட்டது. இதற்குக் காரணம் தானில்லை, எனக்கு மருந்து கொடுத்த மருத்துவக் குழுவினரும், பயிற்சியாளருமே காரணம் அவர்கள்தான் தண்டிக்கப்பட வேண்டும் என்று அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். சில சமயங்களில் பெரியவர்கள் எடுக்கும் முடிவுகள் எப்படி இளையோரின் எதிர்காலத்தைப் பாதிக்கின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.


பீஜிங்கில் நடக்கும் இந்தக் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் சீனா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, பிரேசில், நோர்வே, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான் போன்ற முக்கியமான சில நாடுகளும் பங்கு பற்றுகின்றன. கனடாவில் இருந்து 215 வீரர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். 109 ஆண்களும், 106 பெண்களும் இம்முறை 14 வெவ்வேறு போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். கனடாவின் அதிக வீரர்கள் கலந்து கொள்ளும் மூன்றாவது போட்டி இதுவாகும். கனடாவில் இருந்து 2014 ஆம் ஆண்டு 222 வீரர்களும், 2018 ஆம் ஆண்டு 225 வீரர்களும் குளிர்கால போட்டியில் கலந்து கொண்டிருந்தனர். இதில் ஐஸ்ஹொக்கி வீரர்கள் 48 பேரும், பிறிஸ்ரைல் பனிச்சறுகலில் 32 பேரும் அடங்குவர். வேகப்பனிச்சறுக்கு வீரரான சாஸ்ஸ் ஹமிலின் மற்றும் ஹாக்கி வீரரான மாரி பிலிப் பௌலின் ஆகியோர் அணிவகுப்பின் போது கனடியக் கொடியை ஏந்திச் சென்றார்கள்.

ஆபிரிக்க நாடுகளில் பனிச்சறுக்கல் விளையாட்டுகளுக்கு வசதிகள் இல்லை என்பதால் அவர்கள் குளிர்கால ஒலிம்பிக்கில் கலந்து கொள்வதில்லை. ஆனால் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 வது ஆபிரிக்க விளையாட்டுப் போட்டி கானா நாட்டில் நடைபெற இருக்கின்றது. 2024 ஆண்டு பிரான்ஸ், பாரிஸில் நடைபெற இருக்கும் கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கு இதிலிருந்துதான் ஆபிரிக்க வீரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.



# தொலைபேசிக்குள் மூழ்காமல் புதியவர்களுடன் பழகுங்கள்...

முன்பின் தெரியாதவர்களுடன் பழகுவதன் மூலம் கிடைக்கும் லாபங் கள் என்ன என்பது பற்றிச் சொல்லும் புத்தகத்தை இந்த வாரம் நாம் பார்க்கப் போகிறோம். ஏன் நாம் முன்பின் தெரியாதவர்களிடம் பேச மாட்டேன் என்கிறோம், எப்போது பேசுவோம், அப்படிப் பேசினால் என்னவாகும் என்ற மூன்று விஷயங்களுக்கான விடைகளைத் தருவதுதான் இந்தப் புத்தகத்தின் நோக்கம். இந்தப் புத்தகத்தை எழுதியவர் இறுதிச் சடங்குகளைத் தலைமையேற்று நடத்தும் (Funeral Director) பணியில் இருந்தவரின் பேரனாவார்.




“என்னுடைய தாத்தாவின் தொழிலானது என்னுடைய வளர்ப்பு முறை மற்றும் வளர்ந்த சூழல் என்னுடைய பொதுவான உணர்வுகள், நகைச்சுவை மற்றும் உலகம் குறித்த பார்வை போன்றவற்றை ஒரு மாதிரியாகக் கட்டமைத்து இருந்தது. மனிதர்கள் அனைவரிடமே ஒரு சில மதிப்புமிக்க விஷயங்கள் இருக்கவே செய் கிறது. ஒவ்வொருவரிடமும் உங்களை ஆச்சர்யப் படுத்தும் விஷயமோ, மகிழ்ச்சியடையச் செய்யும் விஷயமோ, திகிலடையச் செய்யும் விஷயமோ, திருந்தவைக்கும் அளவிலான விஷயமோ இருக்கவே செய்யும்.

அவர்களுடன் பழகினால் மட்டுமே நம்மால் அந்த விஷயம் குறித்துத் தெரிந்து கொள்ள முடியும். இவற்றையெல்லாம் நான் எங்கே யிருந்து கற்றுக்கொண்டேன் தெரியுமா..?” என்று கேட்கும் ஆசிரியர் அந்த நிகழ்வையும் சொல்கிறார்.

ஒரு நாள் வாடகை காரில் செல்லும் போது அதன் பெண் சாரதி அந்த காரை ஓட்டினாராம். சாதாரணமாக வாடகை கார் சாரதியிடம் பேசும் பேச்சான இதே ஊர்தானா, எவ்வளவு நாளாக இந்தத் தொழிலில் இருக்கிறீர்கள், எப்படிப் போகிறது தொழில் என்ற கேள்விகளைக் கேட்டு முடித்தபோது, அந்த சாரதி அவருடைய கதையைச் சொன்னாராம்.

அந்தப் பெண்மணி ஒரு பெரும் பணக்கார வீட்டில் பிறந்தவராம். பிறந்த சிறிது நாள்களில் அவர்கள் முறைப்படி ஒரு சடங்கு செய்யும் போது ஏற்பட்ட விபத்தில் காலில் சிறிய குறைபாடு உருவாகிவிட்டதாம். அந்தக் குறை பாட்டுக்காக அவரை அனைவரும் கிண்டல் செய்வார்களாம். அவருடைய பெற்றோரும் கூட அந்த பிரச்னையை ஆரம்பத்தில் கவனிக்காமல் விட்டு விட்டார்களாம். வளர ஆரம்பிக்கையில் இந்தக் குறைபாட்டால் அவரால் அவ்வப்போது சரியாக நடக்க முடியாமல் அடிக்கடி கீழே விழுந்தும் விடுவாராம். அதற்கு என்னுடைய பெற்றோர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? என்று கேட்டாராம்.

“பெரிய டொக்டரிடம் அழைத்துச் சென்றார் களா? தெரபிஸ்ட்டிடம் கூட்டிச் சென்றார்களா?” என்று ஆசிரியர் கேட்டதற்கு, அவர் சிரித்தாராம். “என்னை நடன வகுப்பில் சேர்த்துவிட்டார்கள் என்றாராம். “காலில் பிரச்னைக்கு ஏன் நடன வகுப்பு…” என்று கேட்டதற்கு, “நான் கீழே விழும்போது நளினமாக விழ வேண்டும் என்று என்னுடைய பெற்றோர்கள் நினைத்தார்கள்” என்றாராம்.

“பிரச்னையைச் சரிசெய்ய வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் என்ன இது முட்டாள் தனமான முயற்சி என்று நினைத்தேன். ஏற்கெனவே கூறியபடி, என்னுடைய தாத்தாவின் தொழில் ரீதியாகப் பல்வேறு விதமான மனிதர்களின் கதையைக் கேட்டிருந்த எனக்கு முற்றிலும் புதிய நபர் ஒருவர் இப்படியெல்லாம் வாழ்க்கையில் நடக்கும் என்று சொன்னது மிகுந்த ஆச்சர்யத்தைத் தந்தது. அந்தப் பெண் சாரதியிடம் பேசிய பின்னர்தான் முன்பின் தெரியாதவர்களிடம் பேசிப் பழகுவதன் அவசியத்தை நான் உணர்ந்தேன்” என்கிறார் ஆசிரியர்.

“எட்டு மணி நேர வேலை, பராமரிக்கைக்குழந்தை, வேலை சம்பந்தப்பட்ட நபர்களிடம் பேச்சு, வேலை சம்பந்தப்பட்ட விஷயங்களைப் படித்தல், வெட்கத்தை விட்டுச் சொன்னால் நிறையைத் தொலைபெசியை நோண்டுதல் என்ற எல்லைக்குள்ளேயே சக்கர வளையம் வந்துகொண்டிருந்த எனக்கு, புதியவர்களிடம் பழக வாய்ப்பே இல்லாமல் இருந்தது. அதை உடனடியாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இந்த வாடகைக்கார் சாரதியான பெண்மணியிடம் பேசிய பின்னர் எனக்குத் தோன்றியது” என்கிறார் ஆசிரியர்.

ரிச்சர்ட் சென்னட் எனும் சோஷியாலஜிஸ்ட், ‘வாழ்க்கை யில் சிக்கல்கள் வரும்போது மட்டுமே நாம் முன்பின் தெரியாதவர்களிடம் பேச முயல்கிறோம்’ என்கிறார். உதாரணத்துக்கு, வழிதெரியாமல் சிக்கிக்கொண்டபோது வழிகேட்டல், தொலைபெசியில் பேசி பீட்சா போன்ற உணவுகளை ஆர்டர் செய்தல் போன்ற நிகழ்வுகளின்போது மட்டுமே. அதுவும் இன்றைக்கு திறன்பெசிகள் (ஸ்மார்ட்போன்கள்) நம் வாழ்வை ஆக்கிரமித்த பின்னால், முன்பின் தெரியாத வர்களுடன் பேசுவதற்கு இருந்த கொஞ் சநஞ்ச வாய்ப்பும் மிகவும் குறைந்துபோய் விட் டது. தெரிந்தவர் களிடம்கூட பேசும் பேச்சின் அளவே குறைந்து போனதற்கு காரணம் இதுதான் இல்லையா” என்று கிண்டலாகக் கேட்கும் ஆசிரியர், “முன்பின் தெரியாத வர்களிடம் பேசினால் சிக்கல்கள் வரக்கூடும் என்று நினைத்து, தொலைபேசிக்கள் மூழ்கி சமூக ஊடகங்களில் இருக்கும் அதிக அளவிலான சிக்கலான விஷயங்களில் நாம் நம்மை மூழ்கடித்துக்கொள்கிறோம்” என்கிறார்.

அது சரி, நாம் ஏன் முன்பின் தெரியாதவர்களிடம் போய் பேசுவதில்லை? அதற்குப் பல காரணம். “நாம் என்ன அவர்களிடம் போய் பேசுவது? அவர்கள் வந்து பேசி னாலே எனக்கு எரிச்சலாக வரும். ஒரு கடையில் பொருள்கள் வாங் கிக்கொண்டு பில் போடும்போது பில் போடும் நபர் சாதாரணமாக “அப்புறம், எப்படி இருக்கீங்க, ஊருக்குப் போனீர்களா” என்று கேட்டால், ‘இந்த ஆளுக்கு என்ன கவலை…’ என்று எனக்கு எரிச்சலே உருவாகும். ஆனாலும், வாடகைக் கார் சாரதியிடம் பேசியது போன்ற தருணங்களும் என் வாழ்வில் இருந் தது. அந்த மாதிரி சூழல்களில் நான் எதையாவது புதியதாகத் தெரிந்து கொண்டேன். ஒரு நுட்பமான பார்வை, ஒரு ஜோக், ஒரு விஷயம் குறித்த மாற்றுச் சிந்தனை என முன்பின் தெரியாத நபர்களுடன் செய்யும் உரையாடலின் முடிவில் ஏதாவது ஓர் உதவியான விஷயம் இருக்கவே செய்தது” என்கிறார் ஆசிரியர்.

> “வாடகைக்கார் சாரதியிடம் பேசியது போன்ற தருணங்களும் என் வாழ்வில் இருந்தது. அந்த மாதிரி சூழல்களில் நான் எதையாவது புதியதாகத் தெரிந்து கொண் டேன். ஒரு நுட்பமான பார்வை, ஒரு ஜோக், ஒரு விஷயம் குறித்த மாற்றுச் சிந்தனை என முன்பின் தெரியாத நபர்களுடன் செய்யும் உரையாடலின் முடிவில் ஏதாவது ஓர் உதவியான விஷயம் இருக்கவே செய்தது…“

“இதையெல்லாம்விட முன்பின் தெரியாதவர்களிடம் உரையாடிய பின்னால் எனக்கு ஒரு நிம்மதி கிடைத்ததைப் போன்ற உணர்வு மேலிட்டது. இந்த உணர்வு எதனால் என்பதை நான் ஆராய விரும்பினேன். இது குறித்து ஆராய்ச்சியாளர்களுக்கு தொடாபாடல் (கம்யூனிகேஷன்) குறித்து வகுப்புகள் எடுக்கும் ஒரு நிபுணரிடம் கேட்டேன். “அதுதான் முன்பின் தெரியாத நபர்களுடன் செய்யும் உரையாடலின் மகத்துவமே. முன்பின் தெரியாத நிறைய நபர்களுடன் இன்னும் பழகிப் பாருங்கள். இந்த உணர்வு இன்னும் மேம்படும்” என்றார்.

“இவ்வளவு நிம்மதி உணர் வைத் தரக்கூடிய ஒரு விஷயத்தை நாம் ஏன் வேண்டி விரும்பி செய்வதில்லை? ஏனென்றால், புதியதாக முன்பின் தெரியாதவர் களிடம் உரையாட முனைபவர்களுக்கு எக்கச் சக்கமான பயம் மனதில் இருக்கும். ஹிட்ச்காக்கின் ‘ஸ்ட்ரேஞ்சர்ஸ் ஆன் எ ட்ரெயின்’ படம் மனதின் முன் ஓடும். முன்பின் தெரியாதவர்களிடம் எதையாவது உளறிக் கொட்டி, அந்த சினிமாவில் நடந்ததைப்போல் கொலை ஏதாவது நடந்துவிட்டால்..? என்றெல்லாம் தோன்றும்.

இந்த பயம் இன்று, நேற்று என்றில்லை. காட்டில் மனிதன் வேட்டையாடிப் பிழைத்த காலத் திலிருந்து இருந்து வந்துள்ளது. இப்படி பயந்து பேசாமல் பழகாமல் இருந்தால், தனிமையைத் தவிர வேறு எதுவும் நம்முடன் இருக்காது. வளர்ந்த நாடுகளில் இந்தவித பயம் அதிகமாக இருப்பதால்தான் அமெரிக்கா மற்றும் யுகே போன்ற நாடுகளில் வயது முதிர்ந்தவர்கள் பலரும் தனிமையில் தவிக்கின்றனர் என்கின்றன ஆய்வுகள். மேலும், புகைபிடித்தல் அளவுக்குத் தனிமை என்பதும் உங்களுடைய உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய ஒன்று என்கின்றன ஆய்வுகள்” என்கிறார் ஆசிரியர்.

“ஏன் தனிமை இன்று அதிகமாகிவிட்டது? தொழில்நுட்ப வளர்ச்சி என்பது முன்பின் தெரியாதவர் களை நாம் தவிர்ப்பதற்கான முழுமுதல் கேடயமாக இருக்கிறது. இதனால் நம்முடைய சோஷியல் ஸ்கில் (மனிதர்களுடன் உறவாடும் திறன்) வெகுவாகக் குறைந்து போகவும் புதியவர்களைச் சந்திக்காமலேயே போகவும் செய்கிறோம். நாடு விட்டு நாடு, கண்டம் விட்டு கண்டம் போனாலுமே தொழில்நுட்பம் வாயிலாக நாம் நமக்குத் தெரிந்தவர் களுடனேயே இணைந்திருக்கிறோமே தவிர, அக்கம்பக்கம் வசிக்கும் முன்பின் தெரியாத நபர்களைக் கண்டுகொள்வதே இல்லை.

ஒரே காலனியில் அடுத்தடுத்து வசித்தாலுமே பழக்கம் என்பது பெரிய அளவில் இல்லாதுபோய் விடுவது இதனால்தான். இதைவிட முக்கியமான காரணம், முன்பின் தெரியாத நபர்கள் குறித்து நம்முள் விதைக்கப்பட்டிருக்கும் (முன்பின் தெரியாதவர்கள் மோசமான வர்களாக இருப்பார்கள் என்கிற எண் ணம்) மிகவும் மோசமான அபிப்பராயம் இந்தவித தொடர்பின்மையை அதிக அளவில் ஊக்கு விக்கிறது” என்கிறார் ஆசிரியர்.

“முன்பின் தெரியாதவர்களிடம் பழகுவதன் மூலம் நாம் மேம்பட்ட, மற்றும் மகிழ்ச்சியான நபராக வாழ்வோம். இதையெல்லாம் தாண்டி நமக்கு இந்த உலகம் குறித்து குறைந்த அளவு பயமே இருக்கும். மேலும் முன்பின் தெரியாதவர்களுடன் உரையாடுவது நமக்கு புதிய வாய்ப்புகளையும் உறவுகளையும், உலகம் குறித்த புதிய பார்வை யையும் தரவல்லது என்கின்றன சமீபத்திய ஆய்வுகள்” என்கிறார் ஆசிரியர்.

“முன்பின் தெரியாதவர் என்று நினைத்து ஒதுங்கி இருக்காமல், புதிதாகச் சந்திக்க இருப்பவரின் குணம், அவரும் நாமும் எப்படிப்பட்ட விஷயங்களில் இணக்கமாகப் போகிறோம் அல்லது எதிரும்புதிருமாக இருக்கிறோம் என்பது போன்ற விஷயங்களை நாம் புரிந்து கொள்ள முடியும். இது நம்முடைய நட்பு வட்டத்தை அதிகரித்துக் கொள்ளவும் இந்த உலகத்தில் வெற்றிகரமாக இயங்க வும் பெருமளவு நமக்கு உதவும்” என்கிறார் அவர்.

பல்வேறு நிஜவாழ்க்கை உதாரணங்களைக் கொண்டும், ஆராய்ச்சி முடிவுகளை மேற்கோள் காட்டியும் எழுதப்பட்டுள்ள இந்தப் புத்தகத்தை அனைவரும் ஒருமுறை படித்துப் பயன்பெறலாம்.

**- நாணயம்**

# இரத்தக்கொதிப்பு எப்படி ஏற்படுகிறது? தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

## வைத்தியர் ஏ.சி.டில்சாட் நேர்காணல்



**இன்றைய அவசர குழப்பமயமான வாழ்க்கை முறையே இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. இதனை இன்னுமொரு முறையில் கூறப்போனால், எமக்கு ஏற்படப்போகும் பாரிய நோயின் முன்னறிவித்தல் என்றுகூடச் சொல்லலாம்.**

**பைஷல் இஸ்மாயில்**

**இரத்தக்கொதிப்பு எப்படி ஏற்படுகிறது? அதனை வராமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? என்பது குறித்து நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை வைத்தியர் ஏ.சி. டில்சாட் வழங்கிய நேர்காணல்:**

**குருதி அணல்வாதம் என்றால் என்ன?**

இரத்தக்கொதிப்பை தமிழில் குருதி அணல்வாதமென்றும், ஆங்கிலத்தில் ஹைபெர்டென்சன் (Hypertension) என்று அழைக்கின்றனர். மேலும், இரத்தச்சூடு, இரத்த அழுத்தம், இரத்த மிகுதி, இரத்த அமுக்கம், இரத்தப் பெருக்கம், இரத்தாதிக்கம், நரம்பிறுக்கம், நாடி இறக்கம், போன்ற பெயர்களாளும் அழைக்கப்படும். அதாவது, காரணம் கண்டுபிடிக்க முடியாத மிகையான இரத்தழுத்தம் என்பது இதன் பொருளாகும்.

உணர்ச்சிகள் கட்டுப்பாடற்று கொந்தளிப்பு அடையும்போது இரத்த ஓட்டம் தடைப்படும் நிலையில், மூளையின் சில பகுதிகளுக்கு பிராணவாயு சரியான முறையில் கிடைக்காமல் மூளையின் செயற்பாட்டு விசை நரம்புகள் செயல் இழக்கின்றன. இந்த உணர்ச்சி அலை மோதல் எல்லை கடக்கும் நிலையில் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

பொதுவாக, இன்றைய அவசர குழப்பமயமான வாழ்க்கை முறையே இந்நோய் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. இதனை இன்னுமொரு முறையில் கூறப்போனால், எமக்கு ஏற்படப்போகும் பாரிய நோயின் முன்னறிவித்தல் என்றுகூடச் சொல்லலாம். இரத்த அழுத்தம் உடலில் அதிகரிக்கும்போது, ஆரம்பத்தில் அதுபற்றி பெரும்பாலாநோருக்கு வெளியே தெரிவதில்லை.

**இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?**

உணர்ச்சிகள் அல்லது மனப்பளு, மனக்கொந்தளிப்பினாலும், இதயம் இரத்தத்தை வாயுவின் வேகத்தால் உந்தித்தள்ளும் வேகத்தின் இயல்பில் மாற்றம் ஏற்படும்போதும் ஏற்படுகின்றது.

நெடு நாட்கள் தொடரான மலச்சிக்கல், மதுபானை, புகையிலை பாவனை, மாப்பொருட்கள், கொழுப்பு, இறைச்சி போன்றவற்றை அதிகமாக உண்பதனாலும், மிகுந்த உழைப்பு, மனக்களிப்பு, நாடியின் மிகுந்த துடிப்பு, அதிக சிந்தனை, காமம், மேக நோய்கள், தொண்டை நோய், பித்தப்பை நோய், ஈரல் மற்றும் நீர்பபை போன்றவற்றில் ஏற்படும் புண்கள், மனக்கவலை, பயம், பதட்டம் காரணமான உறைப்புக்களை உண்ணுதல், நச்சுள்ள உணவுப் பொருட்களை உண்ணுதல் போன்ற காரணங்களால் இந்நோய் ஏற்படுகின்றது.

இந்நோய் இயல்பாகவே கூடவும், குறையவும் செய்யும். நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது இரத்த அழுத்தம் குறைவடைகின்றது. திடீரென ஏற்படும் மன எழுச்சி இரத்த அழுத்தத்தினை திடீரென உயர்த்துகின்றது. உடலியல் மற்றும் மனவியல் காரணங்கள் ஆகிய இரண்டு விதமான செய்கைகளே குருதி அணல்வாதத்திற்கு காரணிகளாக அமைகின்றன.

**நீங்கள் குறிப்பிட்ட இரு காரணிகளையும் தெளிவுபடுத்த முடியுமா?**

ஆம், உடலியல் காரணி என்றால் - புகை பிடிப்பவர்களுக்கும், மதுபோதை, போதை மருந்துகள் அருந்தும் பழக்கமுடையவர்களுக்கும் இரத்த நாளங்கள் குறுகி விடுகின்றன. அதாவது, இரத்த நாளங்கள் விரிந்து சுருங்கும் தன்மை சிறிது சிறிதாக குறையத் தொடங்குகின்றது. இதனால் இந்நோய் ஏற்பட ஏதுவாகிறது. மேலும், அதிகமாக மீன், இறைச்சி உண்பதினால் இரத்தத்தில் கொழுப்பு அதிகமாகி இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிகின்றது. இதனாலும் இந்நோய் ஏற்பட ஏதுவாகிறது.

எந்தவித வேலைகளையும் செய்யாமல் உடற்பயிற்சியின்றி சோம்பேறித்தனமாய் இருப்பவர்களுக்கு உணவு அதிகமாகி உடல் எடை கூடுகின்றது, இதனால் உடல் உழைப்புக் குறைந்து கொண்டே போவதால் உடலில் கொழுப்புப்படிவு அதிகமாகி நோயைத் தோற்றுவிக்கின்றது.

உடலைப் பொறுத்த மட்டில் வரவு செலவுக் கணக்கு சரியாக இருக்க வேண்டும். சேமிப்பு ஒரு போதும் இருக்கக் கூடாது. நாம் உண்ணும் உணவில் உப்பு, சீனி கூடினாலும் இரத்தத்தின் கெட்டித்தன்மையை அதிகமாக்கி பாயும் தன்மையைக் குறைக்கின்றது. இரத்த ஓட்டத்தில் பலத்த மாறுபாடுகளை இவை உண்டாக்குவதால் அவற்றை அளவுடன் சேர்த்துக்கொள்வதே நல்லது.



மனவியல் காரணி என்றால் - கோபம், பகைமை, வெறுப்பு, வஞ்சம் போன்ற தீய குணங்கள் எமது நாளமில் லாச் சுரப்பிகளையும், தானியங்கி நரம்பு மண்டலத்தையும் தாக்குவதால் இரத்த அழுத்தம் கூடுகின்றது. ஆகவே, தீய எண் ணங்கள் மற்றும் குணங்கள் எம்மை நோயாளிகளாக மாற்றுகின்றது. பயம், பதற்றம், கவலை போன்ற குணங்கள் எமது உடலின் இயக்கத்தில் பல மாற்றங்களைத் தோற்றுவித்து இரத்த அழுத்தத்தைக் கூட்டுகின்றன. சில சில நேரங்களில் கவலைப்படுவார்கள், சிலர் எப்போதும் கவலைப்படுபவதை பழக்கப்படுத்தி தொழிலாக வைத்துக்கொள்வார்கள். அவர்களில் சிலருக்கு இந்நோயின் வாய்ப்பு அதிகமாகின்றது.


உணர்ச்சிகளினால் ஏற்படும் மனப்போராட்டம் மற்றும் தொடராக இருக்கும் மனப்போராட்டம் போன்றன நரம்பு மண்டலத்தை தாக்கும்போது கூடுதல் இரத்த அழுத்தம் உருவாகிறது. சிலருக்கு பொருளாதாரப் பிரச்னைகள், பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் தோன்றும்போது வாழ்க்கை துன்பகரமாகத் தோன்றி மனப்பளு தோன்றுகிறது. மனப்பளுவும் இந்நோய்க்கு மூல காரணமாகின்றது.

பெண்கள் கருவுற்ற காலங்களில் உடலில் நச்சுநிலை கூடுவதால் இரத்த அழுத்தம் கூடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. நாளமில்லா சுரப்பிகளின் இயக்கம் மாறுபடுவதால் இரத்த அழுத்த நோய் உண்டாகிறது. உதாரணமாக, கணையம் வேலை செய்யாதபோது நீரிழிவுநோய் உண்டாகிறது. அந்த நீரிழிவு நோயினால் இரத்த அழுத்த நோய் உண்டாகும் வாய்ப்பும் அதிகரிக்கின்றது.

இரத்த அழுத்த நோய் வந்தவர்களுக்கு சிறுநீரக் கோளாறுகள் உண்டாவதற்கும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. அதாவது, சிறுநீரகம், இரத்தத்தில் அதிகளவில் உள்ள உப்புச்சத்தை சிறுநீர் மூலம் வெளிப்படுத்துகின்றது. சிறுநீரம் பழுதடையும்போது இரத்தத்தில் உப்புச்சத்து கூடுகிறது. உப்புச்சத்து கூடும்போது இரத்த ஓட்டத்தில் பலத்த மாறுபாடுகளை உருவாக்குகிறது. சரியான ஊட்டச்சத்து உட்கொள்ளாமை உழைப்புக் குறைவான சோம்பேறி வாழ்க்கை, தொழிற்சாலைகள், ரயில் மற்றும் பஸ் நிலையங்கள், குவாரி போன்ற இடங்களில் கேட்டும் பேறிரைச்சல் காரணமாக அமைதியான நிதானமான வாழ்க்கையை கழிக்க முடியாமல் அன்றாடம் எந்த நேரமும் பரபரப்புடன் இயங்க வேண்டிய நிர்ப்பந்த நிலை, பல்வேறு காரணங்களால் வாழ்க்கையில் போராடியாக வேண்டிய சங்கடம், தவிர்க்க முடியாத நிலையில் ஏற்படும் கோபத்தால் உண்டாகும் ஆபேச உணர்வுகள், கவலை, ஏமாற்றம் காரணமாக மனதில் ஏற்படும் அதிர்ச்சிகள் போன்ற காரணிகளும் உயர் இரத்த அழுத்த நோய்க்கு காரணமாக அமைகின்றன.

**இந்நோயின் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன?**

நாடி நரம்பும்புகளில் இரத்தக் குழாய்கள் முறுக்கேறி இயற்கையாக ஓடிக்கொண்டிருக்கும் இரத்த வேகம்






குன்றி சிறு குழாய்களில் இரத்தம் கசிந்து விடும். அதனால் மயக்கம், தலைச்சுற்று, கை மற்றும் கால் சோர்வு, ஞாபக மறதி போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தி முளையில் இரத்தக் கசிவை ஏற்படுத்தி விடும். அதனால் திடீரென பேச்சும் ஞாபக மறதியும் ஏற்பட்டு படுக்கையில் வீழ்த்திவிடும் ஒரு நோயாக இருக்கிறது.

மூளையின் பகுதிகளில் கை, கால், வாய், முகம் போன்ற பாகங்கள் தொடர்புபட்டுள்ளதால் அது செயலிழந்துபோய் விடுகின்றன. இதை தமிழில் பாரிசவாதம் என்றும் ஆங்கிலத்தில் Paralysis என்றும் கூறுகின்றனர்.

**இந்நோயிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்ள நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

இரத்த அழுத்தநிலை சீராக இருக்கும் வரை உடல்நலம் சீராக இருக்கின்றது. இரத்தவேகம் குறைந்தாலோ அல்லது கூடினாலோ இரத்த அழுத்த நோய் உருவாகிவிட்டது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். கூடியவரை இரத்த அழுத்த நோய் வராமல் தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும். வந்தால் மருத்துவ சிகிச்சை மூலம் முற்றிலும் குணப்படுத்திக்கொள்வது சாத்தியமில்லை என்று 'கூறினாலும் மனவியல், உடலியல் தொடர்பான சில நடைமுறைகளை கையாள்வதினாலும் இயற்கையுடன் ஒத்து நடப்பதன் மூலமும் இரத்த அழுத்த நோயினை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

குறிப்பாக, உடலியல் மற்றும் மனவியல் ரீதியாக கவலையற்று மனமகிழ்வுடன் வாழும் வாழ்க்கையை நடாத்திச் செல்லுதல், எந்தக் காரியத்தையும் அவசரமின்றி நிதானமாக செய்வதற்கு கற்றுக்கொள்ளல், நேரம் கிடைக்கும்போதேல்லாம் ஓய்வு எடுத்தல், உடற்பயிற்சியை தினமும் செய்தல், அளவான உணவை உட்கொள்ளல் போன்ற விடயங்களை கடைப்பிடிப்பதன் மூலமே நாம் இந்நோயிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும்.



## ஏப்ரலில் 'விக்ரம்'

கமல்ஹாசன் நடிக்கும் 232ஆவது திரைப்படமான 'விக்ரம்' படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்குகிறார். இந்த படத்தை கமலின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்ரர்நேஷனல் தயாரிக்கிறது. அனிருத் இசையமைக்கிறார்.

விஜய் சேதுபதி, பகத் பாசில், காளிதாஸ் ஜெயராம், சந்தான பாரதி உள்ளிட்ட பலர் நடித்து வரும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில் விக்ரம் படத்தை ஏப்ரல் மாதத்தில் வெளியிடவுள்ளனர். விஜயின் பீஸ்ட் ஏப்ரல் 14ஆம் திகதி வெளியாகும் என்பதால் ஏப்ரல் 29இல் விக்ரம் வெளியாகும்.

## பிரபுதேவாவின் முசாசி



பிரபுதேவா நடிப்பில் தயாராகும் படத்திற்கு 'முசாசி' என பெயரிடப்பட்டு, அதன் முதல்பார்வை வெளியிட்டுள்ளனர். அறிமுக இயக்குநர் ஷாம் ரோட்ரிக்ஸ் இயக்கத்தில் தயாராகும் இந்தபடத்தில் பொலிஸ் அதிகாரி வேடத்தில் நடித்துள்ளார்.

இவருடன் நடிகர்கள் ஜோன் விஜய், வி. டி. வி. கணேஷ், ஜோர்ஜ் மரியான், மலையாள நடிகர் பினு பப்பு, அருள்தாஸ், நடிகர் 'மாஸ்டர்' மகேந்திரன், 'பழைய ஜோக்' தங்கதுரை, மகேஷ், மலையாள நடிகை லியோனா லிஷாய் உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள்.

## வருத்தத்தில் ஹூமா

வினோத் இயக்கத்தில் அஜித் நடித்துள்ள வலிமை படம் எதிர்வரும் வியாழக்கிழமை தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம் ஆகிய 4 மொழிகளில் வெளியாகிறது. இந்தப் படத்தில், ஹிந்தி நடிகை ஹூமா குரேஷி முக்கிய வேடத்திலும் நடித்துள்ளனர்.

வலிமை படத்தில் முதன்முறையாக பொலிஸ் வேடத்தில் நடித்துள்ளேன். எனது மோட்டார் சைக்கிள் சாகச காட்சிகள் ரசிகர்களை மிகவும் கவரும். இந்தப் படத்தில் அஜித் உடன் டூயட் பாடாதது, வருத்தமாக உள்ளது. தமிழ், ஹிந்தி படங்கள் இரண்டில் நடிப்பதற்கு வித்தியாசம் தெரியவில்லை. எந்த மொழியிலும் நடிப்பு மட்டுமே பேசும், என்றார்.



## வெங்கட்பிரபுவுடன் பூஜா

மாநாடு படத்தையடுத்து அசோக் செல்வன் நடிப்பில் மன்மதலீலை என்ற படத்தை இயக்கி வரும் வெங்கட்பிரபு, இதையடுத்து தெலுங்கு நடிகர் நாக சைதன்யாவை வைத்து தமிழ் தெலுங்கில் ஒரு படத்தை இயக்கவுள்ளார். இந்த படத்தில் பூஜா ஹெக்டேவை நாயகியாக நடிக்க வைக்க பேச்சு நடைபெற்று வருகிறது.

தமிழில் மிஷ்கின் இயக்கிய முகமூடி படத்தில் நடித்த பிறகு நாகசைதன்யாவுடன் 2014இல் தெலுங்கில் ஒக்க லைலா கோஷம் என்ற படத்தில்தான் அவர் அறிமுகமானார். இப்போது மீண்டும் அவருடன் இணைந்து நடிக்கிறார்.





## 3 மொழி படத்தில் தமன்னா

சமீபகாலமாக அதிக படங்களின்றி இருந்த முன்னணி நாயகியான தமன்னா தமிழில் கடைசியாக விஷாலுடன் ஆக்சன் என்ற படத்தில் நடித்திருந்தார். தற்போது தற்போது சிரஞ்சீவியுடன் போலா ஷங்கர் படத்தில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் உருவாகும் படத்தில் ஒப்பந்தமாகி நடித்து வருகின்றார். ஹிந்தி இயக்குநர் மதூர் பண்டார்கர் இயக்கும் இந்த படத்திற்கு பாப்லி பவுன்சர் என்று ஹிந்தியில் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

தமன்னாவுடன் சவுரப் சுக்லா, அபிஷேக் பஜாஜ், சாகில் ஆகியோரும் இணைந்து நடிக்கின்றனர். இந்தப் படத்தின் தமிழ், தெலுங்கு பெயர்கள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளன.

# திரை விமர்சனம்

| | | |
|---|---|---|
| திரைப்படம் | - | மகான் |
| இயக்கம் | - | கார்த்திக் சுப்புராஜ் |
| இசை | - | சந்தோஷ் நாராயணன் |
| நடிப்பு | - | விக்ரம், துருவ் விக்ரம், பாபி சிம்ஹா, சிம்ரன் |




நாடு சுதந்திரம் அடைந்த பின் மது ஒழிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட பாரம்பரியம் மிக்க காந்திய வழி குடும்பம் விக்ரம் உடையது. காந்திமீதுள்ள பற்றால் விக்ரமுக்கு காந்தி மகான் எனப் பெயர் வைக்கிறார் அவரின் அப்பா. ஆசிரியரான விக்ரம் தனது 40ஆவது பிறந்தநாளில் தன் விருப்பப்படி ஒருநாள் வாழ நினைக்க, அதனால் ஏற்படும் சண்டையில் மனைவி சிம்ரன் மகனை அழைத்துக் கொண்டு கணவரை விட்டே செல்கிறார்.

தனது பால்ய கால நண்பனான சாராயக் கடை உரிமையாளராக பாபி சிம்ஹாவை எதேச்சையாக சந்திக்கும் விக்ரம் அவருடன் சேர்ந்து இணைகிறார். இருவர் கூட்டணியும் சாராய சாம்ராச்சியமாக உருவாகிறது. அந்தக் கூட்டணியை உடைக்க பல வருடங்களுக்குப் பிறகு விக்ரமின் மகன் துருவ் விக்ரம் சிறப்பு பொலிஸ் அதிகாரியாக வருகிறார். அப்பாவுக்கும் மகனுக்கும் நடக்கும் போராட்டத்தில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பதுதான் மீதிக் கதை.

கதையில் பழைய வெற்றிப் படங்களின் சாயல் தெரிகிறது. மொத்த படத்தையும் விக்ரம் தான் தாங்கி நிற்கிறார். அதேசமயம் மற்றவர்களுக்கும் சரியான முக்கியத்துவம் தருவதிலும் தனித்து நிற்கிறார். துணை முதல்வரை சந்திக்கும் ஒரு காட்சியில் அவர் அமைதியாக இருந்து நண்பன் பாபி சிம்ஹா ஆவேசமாகப் பேசவும் வாய்ப்பு தருகிறார். படத்தில் பலவித வேடங்களில் வருகிறார் விக்ரம்.

மகனுடன் சேர்ந்து நடிக்கும் காட்சிகளில், சண்டை போடும் காட்சிகளில் நிஜ அப்பா, மகன் சண்டை போடுகிறார்கள் என்றே தெரியவில்லை. அந்தக் கதாபாத்திரங்களாகவே தெரிகிறார்கள். விக்ரமின் நடிப்புக்கு அவ்வளவு தீனி போட்டிருக்கிறார் இயக்குநர்.

மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத் தர வேண்டுமா என்பது போல் உள்ளது துருவ் விக்ரம் நடிப்பு. அப்பா, மகன் இருவரும் வரும் காட்சிகளில் கண்ணை மூடிக் கொண்டு கேட்டால் யார் பேசுகிறார்கள் என்று வித்தியாசப்படுத்த முடியாத அளவுக்கு இருவர் குரலும் ஒலிக்கிறது. சில காட்சிகளில் துருவின் நடிப்பு கொஞ்சம் மிகையாகவே உள்ளது.

இப்படியான கதாபாத்திரத்தில் நடிக்க சம்மதிப்பதற்கே பாபி சிம்ஹாவிற்குப் பாராட்ட வேண்டும். வழக்கை தலை அவருக்குப் பொருத்தமில்லாமல் இருக்கிறது. ஆனாலும், ஒவ்வொரு காட்சியிலும் அவர் அழுத்தமான நடிப்பு அனைத்தையும் பொருத்தமாக்கி விடுகிறது.

சிம்ரனுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் இல்லை. ஆரம்பத்திலும், கடைசியிலும் மட்டுமே வந்து போகிறார். படத்தோடு பார்க்க ஓரளவுக்குப் பொருத்தமாக இருந்தாலும் தனியாகக் கேட்டால் ரசிக்க முடியவில்லை. இருந்தாலும், பின்னணி இசையில் குறை வைக்கவில்லை.

ஒளிப்பதிவாளர் ஷ்ரேயாஸ் கிருஷ்ணா, கலை இயக்குநர் மோகன் படத்தின் முக்கிய தூண்கள்.

படத்தின் நீளம் கொஞ்சம் சோதனையைத் தருகிறது. துப்பாக்கி, கத்தி, ரத்தம், சிகரெட், மது, அடிதடி, சண்டை என இருப்பதால் பெண்கள் ரசிக்க முடியாத ஒரு படமாகவும் இருக்கிறது.

# கைவிடப்பட்ட கனவு நாயகன்




ஐ.பி.எல் அரங்கின் முடிசூடா மன்னன். ஆள இராச்சியமின்றி ஒதுங்கியிருக்கிறார். பல இளைஞர் களின் வாழ்க்கைக்கு முன்னுரையாய் அமைந்த ஐ. பி. எல். ஏலம், மிஸ்டர் ஐ. பி. எல்லுக்கு முடிவுரை எழுதியிருக்கி றது. சுரேஷ் ரெய்னா இந்த ஐ. பி. எல் தொடரில் ஆடப்போவதில்லை. இனி கிரிக்கெட் அரங்கில் அவரை நாம் காணப்போவதில்லை.

என் பால்ய நினைவின் இடுக்குகளெங்கும் இந்தப் பெயரும் அவரின் ஜெர்ஸி எண்ணும், நீங்காத இடம் வகிக்கின்றன. சச்சின், டோனி முகம் பதித்த அடையாளங்கள் எளிதில் கிடைத்துவிடும். ஆனால், “ரெய்னா முகம் பதித்த பரீட்சை அட்டை, கொப்பி மட்டைகள் மட்டும்தான் வேணும்!” என்று அழுது புரண்டு வாங்கிய துண்டு.

விளம்பரங்களின் ஓரத்தில் ரெய்னா இருந்தால்கூட ஓடி வந்து சனல் மாற்ற விடாமல் பார்த்ததுண்டு.

ரெய்னா என்னும் பெய ருக்கு உற்சாகம், கொண்டாட் டம், என்று ஏராளமான புனைபெயர்களைச் சொல்லலாம். யார் விக்கெட் எடுத்தாலும், ஓடிவந்து முதுகிலேறி பிறர் வெற்றியையும் தன் வெற்றியாகக் கொண்டாடும் அற்புதம். ரெய்னாவை ஒவ்வொருவருக்கும் பிடித்துப்போகக் காரணம் அதுதான்.

48ஆம் இலக்க பதித்த நீல உடை யில் ரெய்னா ஓர் அணி வீரர்தான். அணிக்கு என்ன தேவையோ அதை மட்டுமே செய்து கொண்டிருந்தார். முதல் வரிசையில்தான் இறங்குவார். அங்கு வேறொருவருக்கு இடம் வேண்டுமென்றால், நடுவரிசையில் இறங்க, அங்கிருந்து கீழ் வரிசைக்கும் நகரத் தயாராகவே இருப்பவர். அங்கு அவர் துணைக் கதாபாத்திரம் மட்டும் தான். அதனால்தானோ என்னவோ, சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்தபோது பெரிய தாக்கம் ஏற்படவில்லை.

ஆனால், 3ஆம் இலக்கம் பதித்த மஞ்சள் உடையில் ரெய்னா ஒரு நாயகன். தமிழகமே கொண்டாடிய சின்ன தலை! 2019 வரை சுப்பர் கிங்ஸுக்காக அதிக போட்டிகளில் விளையாடியவர் ரெய்னாதான். கெய்லை போல் இமாலய சிக்ஸர்களோ, டோனியை போல் கடைசி பந்து சிக்ஸர்களோ ரெய்னா அடித்ததில்லை. ஆனால், அணியைத் தன் தோள்களில் தாங்கிக்கொண்டே இருந்திருக்கிறார்.

ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் சச்சின் கொடுத்த நம்பிக்கையை, சுப்பர் கிங்ஸ் ரசிகர்களுக்கு ஒவ் வொரு முறையும் ரெய்னா கொடுத்திருக்கிறார். வெற்றிக்கு வாய்ப்பே இல்லை என்று நினைத்த தருணங்களில் சுப்பர் நாயக னாக மாறி சாகசமும் செய்திருக்கிறார்.

2014 இறுதி போட்டிக்கான தகுதிப் போட்டியில் பஞ்சாப்புக்கு எதிராக அவர் ஆடிய ஆட்டத்தை யாரால் மறக்க முடியும்?! கெய்ல், டி வில்லியர்ஸ், மக்கலம் போன்ற அதிரடி வீரர்களுக்கு இணையாக வாண வேடிக்கை நடத்தினார் ரெய்னா. ஒவ்வொரு ஷொட்டுக்கும் தட்டித் தட்டி சிவந்துபோன கரங்கள், இப்போது இதை எழுதும்போது கலங்கவே செய்கின்றன.

2022 ஐ. பி. எல் தொடருக்கான ஏலத்தில் நிச்சயம் ரெய்னா சென்னை அணியால் வாங்கப்படுவார் என்றே அனைவரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், எதிர்பார்த்தது நடக்கவில்லை. அடுத்த நாளும் நடக்கவில்லை. ரெய்னா, இப்போது மஞ்சள் உடை அணியப்போவதில்லை. புதிய வீரர்களில் யாரேனும் ஒருவர் அந்த மூன்றாம் இலக்க உடையை அணியும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் சக்தியும் சென்னை ரசிகர்களுக்கு இருக்கப்போவதில்லை.

அந்த 2020 தொடரை ரெய்னா விளையாடாமல் விட்டபோது, அது இப்படியொரு முடிவை ஏற்படுத்தும் என்று நினைத்திருக்கவில்லை. அன்று விழுந்த விரிசல், இந்த உறவை பலவீன மாக்கிவிட்டது. கடந்த தொடரில் விளையாடும் பதினொருவர் அணியிலி ருந்து ஒதுக்கியது. உள்ளூர்ப் போட்டி களில் விளையாடாததால் மற்ற அணிகளும்கூட இவரை ஒதுக்கிவிட் டனர். சுரேஷ் ரெய்னா - விற்பனையாக வில்லை என்ற வார்த்தைகள் இன்னும் எதிரொலித்துக்கொண்டே இருக்கின்றன தாள முடியாத வலியுடன். ●

# வலுக்கும் எதிர்ப்பு




**2013**இற்குப் பிறகு முதல் முறையாக இலங்கை வீரரைத் தெரிவுசெய்துள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சமூகவலைத் தளங்களில் ரசிகர்களின் எதிர்ப்பை எதிர்கொண்டுள்ளது.

ஐ. பி. எல். ஏலத்தில் இலங்கை வீரர் மஹீஸ் தீக்ஷனாவைத் தெரிவு செய்த மைக்காக சென்னை அணியைப் அணி யைப் புறக்கணிப்போம் என ரசிகர்கள் பலரும் ருவிட்டரில் கருத்துகளைப் பதிவு செய்துள்ளார்கள்.

2013இல், இலங்கை அரசுக்கு எதிராகத் தமிழ்நாட்டில் போராட்டங்கள் நடைபெற்றன. ஐ. பி. எல். போட்டியில் இலங்கை வீரர்கள் பங்கேற்றால் போட்டியை நடத்த விட மாட்டோம் எனச் சில அமைப்புகள் எச்சரிக்கை விடுத்தன. இதையடுத்து, சென்னையில் நடைபெறும் ஐ. பி. எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் கொண்ட அணியை விளையாட அனுமதிக்க மாட்டோம், இலங்கை வீரர்கள், நடுவர்கள், அலுவலர்கள் கொண்ட ஐ. பி. எல். அணிகளை அனுமதிக்க வேண்டாம் என்று ஐ. பி. எல். அணி அமைப்பா ளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று அப்போது தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா, பிரதமராக இருந்த மன்மோகன் சிங்குக்குக் கடிதம் எழுதினார்.

அப்போது சென்னை அணியில் குலசேகர, அகில தனஞ்சய என இரு இலங்கை வீரர்கள் இருந்தார்கள்.

இதையடுத்து ஐ. பி. எல். நிர்வாகக் குழு ஒரு முடிவை எடுத்தது. உள்ளூர் மக்களின் உணவுர்பூர்வமான விஷ யத்துக்கு மதிப்பளித்து, சென்னையில் நடைபெறும் ஐ. பி. எல். ஆட்டங்களில் எந்த அணி சார்பிலும் இலங்கை அணி வீரர்கள் விளையாட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டது. அணியில் உள்ள இரு இலங்கை வீரர்களும் சென்னையில் விளையாட மாட்டார்கள் என சென்னை அணியும், அறிவித்தது. அந்த வருடம் குலசேகரவும் அகில தனஞ்சயவும் எந்தவோர் ஐ. பி. எல். ஆட்டத்திலும் விளையாடவில்லை.

2013இல் 11 இலங்கை வீரர்கள் ஐ. பி. எல். போட்டியில் இடம்பெற்றார்கள். ஆனால் அந்த வருடம் சென்னையில் இடம்பெற்ற குலசேகரவும் தனஞ்சயவும் ஓர் ஆட்டத்திலும் விளையாடவில்லை. அடுத்த வருடம் இருவரும் சென்னை அணியில் இடம்பெறவில்லை. 2013இற்குப் பிறகு கடந்த வருடம் வரை எந்தவோர் இலங்கை வீரரையும்சென்னை அணி தெரிவு செய்யவில்லை. (2013-க்கு முன்பு வருடம் தவறாமல் இலங்கை வீரர்கள் சென்னை அணியில் இடம்பெற்றார்கள்.)

இந்நிலையில் இப்போது நடந்துமுடிந்துள்ள ஐ. பி. எல். ஏலத்தில் இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் மஹேஷ் தீக்ஷனவை 70 இலட்சம் இந்திய ரூபாய்க்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தேர்வு செய்துள்ளது. இதையடுத்து சென்னை அணிக்குக் கண்டனம் தெரிவித்து ருவிட்டரில் பலரும் பதிவுகளை பதிவிடுகின்றனர்.

2013இல் இலங்கை வீரர்களுக்கு தமிழ்நாட்டில் விதிக்கப்பட்ட தடை முடிந்துவிட்டதா, தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காமல் இலங்கை வீரரை சென்னை அணி தெரிவு செய்ததால் அதனைப் புறக்கணிப்போம் எனப் பலரும் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார்கள்.

சென்னை அணியில் இலங்கை வீரர்கள்

2008 - முரளிதரன், சாமர கப்புக்கெதர
2009 - முரளிதரன், திலன் துஷார
2010 - முரளிதரன், திஸர பெரேரா, திலன் துஷார
2011 - குலசேகர, சூரஜ் ரந்தீவ்
2012 - குலசேகர, சூரஜ் ரந்தீவ்
2013 - குலசேகர, அகில தனஞ்சய
2014 -
2015 -
2016 - சென்னை பங்கேற்கவில்லை
2017 - சென்னை பங்கேற்கவில்லை
2018 -
2019 -
2020 -
2021 -
2022 - மஹேஷ் தீக்ஷன ●

## சிறு மூலதனம்: சிறு கைத்தொழில்: பெரு வருமானம்! வழி என்ன?

# வாழைநார் பிரித்தெடுப்பு



**வி. சிவலிங்கம்**

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடி களைகளைச் சமாளிக்கவும், உலக அள வில் இயற்கை மூலவளங்களைப் பயன் படுத்தி பொருட்களை உற்பத்தி செய் வதன் மூலம் சுற்றுப்புறச் சூழல் அசுத்த மடையாமல் காப்பாற்றலாம் என்ற எண்ணத்திற்கும் பலம் சேர்க்கும் வகை யில் புதிய யோசனைகள் அதிகளவில் பரவி வருகின்றன.

இலங்கையின் பொருளாதார தேவை களை நிறைவேற்ற வெளிநாட்டுச் செலா வணிப் பற்றாக்குறை காணப்படுகிறது. கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையிலிருக்கும் திறந்த பொருளா தாரம் உள்ளூர் உற்பத்தியின் அதிகரித்த செலவினங்கள் காரணமாக உள்நாட்டின் மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களைக்கூட இறக்குமதி செய்தது. இதனால் ஏற் கெனவே உள்நாட்டில் செயற்பட்ட சிறு கைத்தொழில் அமைப்புகள் கைவிடப் பட்டன. பல வேலைவாய்ப்புகளும் இல்லாதொழிந்தன. தற்போது ஏற்பட் டுள்ள வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை உள்ளூர் உற்பத்திகளை மீண்டும் தொடங்கவேண்டிய நிலைக் குத் தள்ளியுள்ளன.

இவ்வாறான பொருளாதார நெருக்க டிகளுடன் நாட்டில் நிலவும் இனவாத மற்றும் அரசியல் குழப்ப நிலமைகள் தமிழ்ப் பிரதேச மக்களின் வாழ்வில் மேலும் பல நெருக்கடிகளைத் தோற்று வித்துள்ளன. இந் நிலையில் மீண்டும் உள்ளூர் உற்பத்தியில் கவனம் செலுத் துவது அவசியமாகிறது. தற்போது காணப்படும் தொழில் நுட்ப வளர்ச்சி இவ்வாறான தொழில் வாய்ப்புகளை இலகுவாக்கியுள்ளதோடு, சிறிய மூல தனச் செலவுடன் தொழில் வாய்ப்பு களைப் பெருக்கவும் சாத்தியப் படுத்து கிறது. உள்நாட்டில் மட்டுமல்லாது, புலம்பெயர் தேசங்களிலும் வாழும் எமது மக்கள் உள்நாட்டில் இத்தகைய கைத்தொழில்களை உருவாக்க அல்லது ஊக்குவிக்க இது மிக நல்ல தருணமாகும்.

**வாழை நார்**

அவ்வாறான சிறு கைத்தொழில் துறையில் நாம் வாழை நாரின் உப யோகத்தின் மூலம் பல பொருட்களை உற்பத்தி செய்யமுடியும் என்பது தெரிய வருகிறது. உதாரணமாக, வாழை பயி ரிடும் இந்தியா, பங்களாதேஷ், லத்தீன் அமெரிக்க நாடுகளில் வாழை நாரின் மூலம் தரம் வாய்ந்த புடவை வகை களும், வாழைப் பழத்திலிருந்து வைன் போன்ற தரமான குடிபானங்களும் தயா ரிக்கப்படுகின்றன. வாழை நாரிலிருந்து பெறப்படக்கூடிய உற்பத்தி வகைகள் குறித்த சில விபரங்களை இக் கட்டுரை தருகிறது.

வாழைப் பயிர்ச் செய்கையில் பழங் களை அறுவடை செய்தபின் தண்டுகள் கழிவுகளாக வீசப்படுகின்றன. இத் தண்டிலிருந்தும், வாழை மரத்தின் சில கழிவுகளிலிருந்தும் இந்த நார்ச் சத்து பிரித்தெடுக்கப்படுகிறது. இவ்வாறு பிரித்தெடுத்து அவை பாவனைக்கான மூலப் பொருளாக மாற்றப்படுகிறது.

குறிப்பாக, பெற்றோலியம் பொருட் களிலிருந்து பிளாஸ்டிக் பெறப்படுகிறது. அதுபோலவே வாழை நாரில் வலிமை யான இழுவிசையுடைய அல்பா - செலு லோஸ் எனப்படும் பொருள் உள்ளது. இவை நீரை உறிஞ்சுதல், ஈரப்பதத்தினை விரைவாக வெளியிடுதல், தீயைத் தடுக்கும் பண்புகள் எனப் பல வகைச் சக்திகளைக் கொண்டுள்ளன. வாழை நாரிலுள்ள இப் பண்புகள் காரணமாக பின்வரும் பொருட்களைத் தயாரிக்க முடியும்.

காகிதங்கள், காகித அட்டைகள், திசுக்கள், கோப்பைகள், வீட்டு அலங்கா ரப் பொருட்கள், கயிறு, பாய், திரை மறைப்புகள் எனப் பல.

வாழை நாரில் உள்ள ஊட்டச் சத்து திரவ உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. அதனால் மண்ணில் வாழும் பல நுண் உயிரினங்களைப் பராமரிக்க உதவுகிறது.

**வாழை நாரைப் பிரித்தெடுத்தல்**

வாழை பயிரிடும் இடங்களுக்கு அண்மையில் இப் பிரித்தெடுக்கும் இயந்திரத்தைப் பொருத்தலாம். இவ் வியந்திரத்தினால் நார் பிரித்தெடுக்கப் பட்ட பின் அம் மூலப் பொருளை உப யோகித்து தேவையான கைத்தொழில் களை ஆரம்பிக்கலாம். இயந்திர மூலம் பிரித்தெடுப்பது வேகமானது மட்டு மல்ல, இதற்கு அதிகளவு தொழில்நுட்ப அறிவும் தேவையில்லை.

வாழைத் தண்டுகள் விவசாய நிலங் களிலிருந்து தூர இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டால் உற்பத்தி செலவு அதி கரிக்கும். எனவே, கிராம குடிசைக் கைத் தொழிலாக மேற்கொள்ள முடியும். பழங்கள் அறுவடை செய்யப்பட்ட பின்னர் தண்டுகள் கைவிடப்படுவதால் அவற்றைச் சேகரிப்பதற்கான அறிவுறுத் தல்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படு மானால் அல்லது சிறிய தொகை வழங் கப்படுமானால் அவர்களே கைத்தொழி லிடங்களில் அவற்றை வழங்க முடியும். கூட்டுறவு முறை விரும்பத் தக்கது.



**உற்பத்திச் செலவு**

வேவ்வேறு பகுதிகளில் வாழை பயிரிடப்படுவதால் வாழை நாரின் தர மும் வேறுபட வாய்ப்பு உண்டு. சில நார்கள் மிகவும் பிரகாசமான தோற்றத் தையும், பலத்தையும் அளிக்கும். ஒரு கிலோ நார்ச் சத்தைப் பிரித்தெடுக்க அவற்றின் தரம் மற்றும் அதிலுள்ள நீரின் அளவைப் பொறுத்து சுமார் 5 - 6 தண்டுகள் தேவையாகலாம். இது கழி வாக உள்ளதால் மூலப் பொருளுக்கான செலவு அதிகமாக இருக்காது.

**தொழிலாளர்**

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, சிறிய பயிற்சியுடன் ஒருவர் அதனை இயக்க முடியும். ஆரம்ப பயிற்சி அளிப் பவருக்கு வழங்கப்படும் ஊதியத்தைத் தவிர மேலதிக செலவுகள் இல்லை. இவ்வாறான பயிற்சி அளிப்பவர்கள் தமிழ் நாட்டில் உள்ளனர். இந்த உற்பத் தியில் ஆர்வமுள்ளவர்கள் இணைந்து அத் தொகையைப் பகிர்ந்து கொள்ள லாம். அல்லது தமிழக அரசின் உதவி யைக் கோரலாம்.

**மூலதனம்**

தமிழகத்திலிருந்து இவ்வாறான இயந்திரங்களைத் தருவிக்க முடியும். ஒரு சில இயந்திரங்களைக் கொள்வனவு செய்தால் கப்பல் செலவும் குறைய வாய்ப்பு உண்டு. இலங்கையில் இதற் கான வரி குறைவாக இருக்கலாம்.

இந்த இயங்திரங்கள் மின் மோட் டர்களால் இயக்கப்படுகின்றன. இந்திய நாணயத்தில் இது சுமார் 180 ஆயிரம் ரூபாய்கள். இந்த இயந்திரங்களைக் காலப் போக்கில் இலங்கையிலுள்ள பொறியிய லாளர்கள் மேலும் சிறந்த இயந்திரங்களாக தயாரிக்க முடியும். ஒரு நாளில் 25 கிலோ வரையில் நார் பிரித்தெடுக்கலாம்.

சிலர் இந்த இயந்திரங்களை அன்ப ளிப்பாக வழங்கலாம். அல்லது குறுகிய கால கடன்களாகவும் வழங்கலாம்.

வாழை நார் விவசாயப் பகுதிகளிலேயே தயாரிக்கப்படு வதால் உற்பத்தி மற் றும் போக்கு வரத்து செலவு மிகக் குறைவு.

**வருமானம்**

பிரித்தெடுக்கப்படும் நார்கள் கூட்டு றவு அடிப்படையில் செயற்படுத்தப்பட்டால் அவ்வப் பிரதேசங்களிலிருந்து பெறப்படும் நார்களின் தரத்திற்கு ஏற்ற வாறு சந்தை விலைகள் தீர்மானிக்கப்பட லாம். இலங்கையில் அந்த நார்களைப் பயன் படுத்தி பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இருந்தால் அவற்றுக்கு வழங்கலாம் அல்லது ஏற்றுமதி செய்யலாம். வாழை நாரைப் பிரித் தெடுப்பது மட்டுமல்ல, அந்த நாரின் மூலம் கோப்பை தயாரித்தல், நூல் முறுக்கு இயந்திரம், பாய் நெசவு இயந்திரம் என்பனவும் சந்தையில் உள்ளன.

வாழை நார் திட்டம் மட்டுமல்ல, இவ்வாறான பல திட்டங்கள் சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் அரச ஆதரவு டன் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அப்போதிருந்த பொருளாதார நில மைகள் அதற்கான ஊக்குவிப்பைத் தர வில்லை. இப்போது நிலமைகள் மிகவும் மாறியுள்ளன. இலங்கையின் விவசாயப் பகுதிகளில் பெறப்படும் பல உற்பத்திகள் மிகத் தரமான புதிய வகைப் பொருட் களை உற்பத்தி செய்வதற்கு தொழில்நுட் பம் உதவுகிறது. அத்துடன், தனியார் மற் றும் அரச அணுகுமுறை மாற்றமடைந் துள்ளதால் அவர்களின் உதவிகளும் கிடைப்பதற்கு அதிக வாய்ப்பு உண்டு. ஆரம்பத்தில் இவ்வாறான மிக குறைந்த செலவும், விவ சாய கழிவு பொருட்களை பணமாக மாற்றவும் வாய்ப்புகள் உள்ள தால், மக்கள் இவை குறித்து ஆழ்ந்த கவ னம் செலுத்தி வருமானத்தை உயர்த்திக் கொள்ளமுடியும்.

---

## இரு நாட்டு மீனவர்...

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

இலங்கையின் ஒவ்வொரு அரசியல் நகர்வும் இந்தியாவை ஊடறுத்திருக்க வேண்டும் என இந்தியா நினைக்கின்றது. அதேநேரம் இந்தியா, ஆசியாவின் பிராந்திய வல்லரசாவதற்கு முயற்சிக் கின்றமை அண்மைய அரசியல் போக்கு களில் அறிய முடிகின்றது. அதேநேரம் இந்திய மீனவர்களை ஆதரிக்கும் வகையில் மீனவ சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல் பின்னணிகள் செயற்படுகின்றன. அவர்களது செயற்பாடுகள் சரியானதே என்பதை சமூக வலைதளங்களின் ஊடாக உலகறியச் செய்ய முனைகின்றனர். இதற்கு அவர்களது தொழிநுட்பத் திறன், மக்கள் தொகையென்பன கைகொடுக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை இலங்கையின் வடபகுதியில் வாழும் தமிழ் மீனவ அமைப்புக்களோ மக்களோ மேற்கொள்ளவில்லை.

இந்தியா மீன்பிடி தொழிலில் பாரிய தொரு வளர்ச்சி பெற்று வரும் நாடு. மீன்பிடி யைச் சார்ந்து பல கிளைக் கைத்தொழில்களும் உருவெடுத்துள்ளன. அதற்கென தொழிற்சாலைகள், ஊழியர்கள், தொழிநுட்பம், உபகரணம் என வளத்தைப் பெருக்கியவண்ணம் உள்ளது. இலங்கையில் மீன்பிடி கைவிடப்பட்டு வருகின்ற ஒரு தொழிலாக மாறியுள்ளது. மீன்பிடி தொழிலை மேருகூட்டுவதற்குப் பதில், தொழில் தேடி இலங்கை மீனவர்களில் பலர் வெளிநாடு செல்கின்றனர். மீன்பிடிக்கெனப் பயன் படுத்திய உபகரணங்களை விற்றுவிட்டனர். இன்றைய இளைஞர்களும் சரி எதிர்கால சந்ததியினரும் சரி கடலுக்குச் செல்வது சாத்தியமில்லை என்ற மனநிலைக்கு வந்துவிட்டனர். வஞ்சிற, வரால், இறால் கள் என்பன இலங்கையின் வடபகுதியில் அதிகளவில் கிடைக்கப்பெறுகின்றன. இவற்றுக்கான கிராக்கி இந்தியாவில் அதிகளவில் உள்ளது. கொவிட் காலங் களில் பிடிக்கப்பட்ட மீன்களில் பல ஐரோப் பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இயலாத நிலையில், குறித்த மீன்கள் கரைக்குக் கொண்டு வராது இந்திய மீனவர்களிடம் கைமாற்றப்பட்டு பணமாக்கப்பட்டமை சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தல், இலங்கையின் வடபகுதி யில் கருவளம் சிதைக்கப்படல், என்பது ஒருபுறம் இருக்க, மஞ்சள் கடத்தலும் கஞ்சா கடத்தலும் இந்தப் பின்னணியிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

மீன்பிடி தொழிலை ஒரு மூலோபாயத் தொழிலாகக் கைக்கொண்டு மாற்று வழியாக கடத்தல் மாபியா நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. சுருக்கமாக கூறுவதானால் இலங்கை இந்திய தமிழ் மக்களிற்கு இடையில் இதுசார்ந்த பிரிவினை ஒன்று ஏற்படும் சாத்தியக்கூறு தற்போதைய நிலையில் இல்லை. எதிர்காலத்திலும் ஏற்படுமா என்றால் சந்தேகமே- என்கிறார் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஆய்வுப் பிரிவு, சிரேஸ்ட ஆய்வுத்துறை உத்தியோகத்தர் ஹரிகர தாமோதரன்.

# நெஞ்சில் இட்ட கோலங்கள்

வீ.ஜீவகுமாரன்- டென்மார்க்



இராமாயணத்தில் வனவாசம் 14 ஆண்டுகள்.. மகாபாரதத்தில் வனவாசம் 12 ஆண்டுகள்.... எனக்கோ மொத்தம் 14 + 12= 26 ஆண்டுகள்.

ஆம்!

டென்மார்க்கில் என்னை ஒத்த நண்பர்கள் சேர்ந்து சென்ற ஆண்டு வெள்ளிவிழாக் கொண்டாடி மகிழ்ந்த பொழுது.. என் கனவும் நினைவும் என் நாடும் என் கிராமமும் இந்த யாழ்ப்பாண நகரும்... குறிப்பாக யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்டும் தான்.

எண்ணை தடவி கொப்பியினுள் வைத்த மயிலிறகு குட்டி போடும் என்றும்... அம்மா உருண்டித்தரும் கடைசி உருண்டைச் சோற்றில் தான் எல்லாச் சத்தும் இருக்கிறது என்று நம்பிய வயதில் இருந்து யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்ட் பற்றிய நினைவுகள் என்றும் அழியாத தண்ணிப்படங்கள் போல என்றும் என் நெஞ்சில் ஒட்டியிருக்கும். என் கொப்பிகளையும் புத்தகங்களையும் நிறைத்திருக்கும் அதிக தண்ணிப்படங்கள் வெவ்வேறு விதமான பஸ்களின் படங்களாகவே இருக்கும்.

உலகப்பிரசித்தி பெற்ற தாஜ்மகால் காலையில் இளம் சிவப்பு நிறத்திலும்.. மதியத்தில் வெள்ளை நிறத்திலும்.. மாலையில் தங்க நிறத்திலும் நிலவு வெளிச்சத்தில் பளிங்கு போல மின்னுவது போல.. யாழ்ப்பாண பஸ் ஸடாண்டிற்கும் அதிகாலையில் ஓர் அழகும்... காலையில் இன்னோர் அழகும்... வெய்யிலில் வேர்த்து வியர்க்கும் மதியத்தில் வேறோர் அழகும்... மாலையையும் அதனைத் தொடர்ந்து வரும் இரவின் அழகு அத்தனையையும் இன்றும் என்றும் மறையாத நெஞ்சில் இட்ட கோலங்களாக நிலைத்திருக்கின்றன.

ஒவ்வோரூரின் முதல் பஸ்கள் எந்தெந்த ஊர்களில் இருந்து புறப்பட்டாலும் அதிகாலை ஐந்து மணிக்கு யாழ்ப்பாணம் வந்து விடும். அதேபோல் கொழும்பு.. கண்டி..மட்டக்களப்பு... திருகோணமலைக்கு என புறப்படும் அதிகாலை பஸ்கள் ஐந்தரைக்குப் புறப்படத் தயாராக இருக்கும்.

முதல் வணக்கம் எங்கள் முருகனில் தொடங்கி அத்தனை தேத்தண்ணிக் கடைகளிலும் பக்திக் கீதங்களுடன் தேனீரில் ஆவி பறக்கும்.

சுட்டிப்புரத்திற்கு சீர்காழி கோவிந்த ராஜன் வந்து இரவு நடாத்திய கச்சேரியை அதிகாலையில் ஒலிபரப்பிய பெருமை யாழ்ப்பாண பஸ்ஸ்டான்டையே சாரும்.

பனிஸ் என்றும்.. பிஸ்கட் என்றும்.. காலைப் பேப்பர் அவசரப்பயணிகள் என்றும் வாங்கிக் கொண்டு நிற்பார்கள்.

இது பூபாள இராகம் என்றால் காலை எட்டு மணிக்கு தன் முழுச்சோம்பலையும் போர்வையையும் விலக்கிவிட்டு பஸ் ஸ்டான்ற் ஒரு முழிமுழிக்கும்!

நோ சான்ஸ்!

வேலையாட்கள்... பள்ளி மாணவர்கள் - மாணவிகள்..பஸ்களில் இருந்து கொட்டிக் கொண்டு இருப்பார்கள்... வெள்ளை ஆடைகளும் விதவிதமான கழுத்துப் பட்டிகளும் பாடசாலையின் விலாசத்தை சொல்லிக் கொண்டிருக்க வீதிகளில் விரைந்து கொண்டு இருப்பார்கள்.

கவலையில்லாத அவர்களின் வயது யாழ் நகரத்திற்கே ஒரு இளமையைக் கொடுத்துக் கொண்டிருக்கும்.

அலுவலகத்திற்குப் போக முதல் பேப்பர் கடைகளிலும் புத்தகக்கடைகளிலும் ஒரு பகுதி கூடுவது போல இன்னோர் புறத்தில் காலை ஆஸ்பத்திரிக்குப் போவோர்கள் அதிகம் கிறீம் கிறாக்கற் பிஸ்கட்டுகளையும் யானைச் சோடாக்களையும் செவ்விளனிகளையும் வாங்கிக் கொண்டு நிற்பார்கள். அவர்களினது அல்லது அவர்களைச் சாந்தவர்களினது நோய்களின் வேதனைகள் முகங்களில் தெரியும்.

நகரசபை ஊழியர்கள் வீதியை சுத்திரித்திக் கொண்டு முன்னால் செல்ல தெருக்கடை வியாபாரிகள் பின்னால் தங்கள் கடைகளை விரிக்கத் தொடங்குவதைப் பார்க்க கவிதை வந்து என் பேனா முனையில் குந்தும்.

அடுத்த அத்தியாயம் காலை பத்து மணி தொடக்கம் மாலை சுமார் 3 மணி வரை.

காலைத் திரைப்படக்காட்சிக்கான பஸ்களில் வந்திறங்கும் கூட்டம்.. உடுப்பு - நகைக் கடைகளுக்கு போவதற்கு வந்து இறங்குபவர்கள்.. இத்தியாதி இத்தியாதி தேவைகளுக்கு வருபவர்கள்.

ராணித் தியேட்டரில் அடிமைப் பெண் எம்.ஜி. ஆரும்.. பட்டிக்காடா பட்டணமா சிவாஜியும் வானுயர்ந்து நிற்பார்கள். ஒவ்வோர் இரசிகர் மன்றத்தின் கொடிகள் வேறு.

பின்னாளில் மினிவான்கள் கோலோச்சக் தொடங்கிய காலத்தில் அவர்கள் மக்களை கூவி அழைக்கும் அழகு.. "அக்கா வாங்கோ... அண்ணா வாங்கோ... ஆச்சி வாங்கோ" பாசமழை பொழியும்.

கடைகளில் பக்திப்பாடல்களில் வீச்சு மெல்லிசைப் பாடல்களுக்கு மாறிக் கொண்டிருக்க மணிக்குரல் விளம்பர சேவையில் ஸ்பீக்கர்கள் அனைத்து பஸ் ஏறும் தரிப்பிடதினுள் ஒலிக்கத் தொடங்கும்.

மாலைப்படலம் இது மிகவும் ரம்மியமானது.

இரைதேடப் போனவை இரைமீட்க வீட்டுக்குப் போகும் ஆறுதலும் அமைதியும்.

காலையில் மட்டக்களப்பு பஸ்களின் கூரைகளில் தயிர் முட்டிகள் நிறைந்திருப்பது போல... மாலையில் முல்லைத்தீவு பக்கத்தால் வரும் வரும் பஸ்களின் கூரை முழுவதும் பாலைப்பழக் கூடைகளைச் சுற்றி காகங்களும் குருவிகளும் ஊர்வலம் வரும் அழகு யாழ்ப்பாண பஸ்ஸ்ராண்டிற்கு மேலும் அழகு சேர்க்கும்.

அதிகமானோர் கைகளில் அந்த அந்த சீசனுக்குரிய பழப்பைகள் இருக்கும். அல்லது மலையான் கபேயில் வீட்டுக்கு கட்டிக் கொண்டு போகும் பெரிய வடை - போண்டா ... போளிப் பாசல்கள் இருக்கும்.

அனைத்தும் அழகே.

அடுத்த கட்டம் யாழ் பஸ்ஸ்டாண்ட் தூங்கச் செல்லும் நேரம்.

இரவுக்காட்சி முடிந்து படபஸ் என்று சொல்லும் கடைசிபஸ் கிளம்ப பஸ்ஸ்டான்டும் தூங்கச் சென்று விடும்.

முதல் பஸ்ஸில் கடை திறக்க வந்த அதினமான கடைக்காரர் வீடு திரும்புவதும் இந்தப் படபஸ்ஸில் தான்.

சுமார் 18 மணித்தியால விழிப்பு... 6 மணித்தூக்கம்... மீண்டும் நகரம் விழித்துக் கொள்ளும்.

எல்லாப் பெரிய இதிகாசங்களிலும் சின்ன சின்னக் கிளைக்கதைகள் இருப்பது போல மகிழ்வு நிறைந்த பஸ் ஸ்டாண்டைச் சுற்றி சின்ன சின்ன கறுத்தப் புள்ளிகளும் கண்ணீர் தோய்ந்த பக்கங்களும் உண்டு.

யுாழ். நூலகமும் ஈழநாடும் பஸ்ஸ்டான்ற் கடைகளும் எரிந்த தினம் - யாழ்ப்பாணத்தினை மரணம் வந்து முத்தமிட்டுச் சென்ற நாள்.

கொள்ளிக்குடம் இன்றியே மரணவீடுகளாய் எங்கள் தெருக்கள் மாறிய நாள்.

எங்கள் நகருக்கு கறுப்பு மை பூசப்பட்ட நாள்.

'யாழ்ப்பாணம் எரிந்தநாள்' ... 24 மணி நேரத்துள்.

இத்தனையையும் தாண்டி என் பஸ்ஸ்டான்ட் என்றும் எனக்கு முதல் காதலிதான்.

சின்னக் கதைகள் காதுகளில் வந்து விழுவதுண்டும்.

பின்பும் சில சில சண்டித்தனங்கள... சில சில தப்புத்தாளங்கள்... சில சில அஜோக்கியத்தனங்கள்... என சின்னக் கதைகள் காதுகளில் வந்து விழுவதுண்டு.

அங்கே போகத்தான் போறீர்களா என என் மனைவி நச்சரிப்பாள்.

அவள் கொழும்பு சினமன்கார்டின் பெண்.

அவளுக்கு என்ன தெரியும் என் யாழ்ப்பாண மண் வாசனை பற்றி.

அவளுக்குச் சொன்னேன், "எங்குதான் தவறுகள் நடக்கவில்லை... எங்குதான் அநீதிகளும் அடக்கு முறைகளும் இல்லை... இதிகாசகாலங்களில் இருந்து இது எல்லாம் நடக்குதுகள்... ஆனால் கல்கி அவதாரத்திற்கு பிறகு அனைத்துமே அழிந்து போகும்"

"நீங்கள் வர வரச் சாமியாராய்ப் போய்க் கொண்டு இருக்கின்றியள்"

நான் சிரித்துக் கொண்டேன்.

▼ ▼ ▼

திட்டமிட்ட மாதிரி விமானப்பயணம்.

பின் கொழும்பில் இருந்து அதிகாலை இன்ரசிற்றியில் சுன்னாகம் போய் அங்கிருந்து அத்தாரின் காரில் தங்கை வீட்டையும் போயாயிற்று.

போய் வீட்டினுள் பைப் பூட்டி இருந்தாலும்... கிணற்றில் ஆசை தீர குளித்து விட்டு தங்கை செய்து வைத்திருந்த நண்டுக் கறியுடனும் கத்தரிக்காயுடனும் புழுங்கல் அரிசிச் சோறை சுவைத்துக் கொண்டு சொன்னேன், "நாளைக் காலை நான் தனியே முதல் பஸ்சிலை யாழ்ப்பாணம் போறன். கடைசி பஸ்சிலை தான் வருவன்".

தங்கச்சியும் அத்தாரும் மருமக்களும் அதிர்ந்து போனார்கள்.

"நீ வேண்டித்தந்த இந்தக் கார் வீட்டு முற்றத்திலை நிற்க நீ பஸ்ஸிலை ரவுணுக்கு போறீயா? அக்கம் பக்கம் என்ன நினைக்கும்"

சிரித்துக் கொண்டு என் விரும்பத்தை விளங்கப்படுதததது அனை வரையும் சமாதானப்படுத்தினேன்.

▼ ▼ ▼

அடுத்த நாள் அதிகாலை - முதல் பஸ்.

கிட்டத் தட்ட என் 16 வயதுக்கே திரும்பி விட்டேன்.

என் மனதில் ஒட்டி இருந்த தண்ணீர்ப்படங்களை ஒவ்வொன்றாகத் தொட்டுப் பார்த்தேன்.

எல்லாமே கிட்டத்தட்ட அப்படியே தான்.

காலம் சின்ன சின்ன மாற்றங்களைச் செய்திருந் தாலும் அனைத்தும் அவ்வாறே தான்.

சக்கரை வியாதி இருந்தாலும் பஸ்ஸ்டான்ட் கடை முன்னே நின்று கிளாசில் சீனி போட்ட சூடான தேனீருடனும் பணிசுடனும் சிறிய கப்பல் வாழைப்பழத்துடனும் என் காலை ஆரம்பமாகியது.

மயிலிறகால் மனத்தை தடவியவு போல இருந்தது.

எனது யாழ்ப்பாண பஸ்ஸ்டாண்டை சுற்றிவர உள்ள றோட்டுகளை காதலி யுடன் கைகோர்த்து செல்வது போல ரசித்து வந்தேன்.

நேரம் போனது தெரிய வேயில்லை.

இரவு ஒன்பது மணியாகியது.

இனி பட பஸ்தான்.

பஸ்ஸ்டான்ற் அமைதியாக இருந்தது.

அதிக சனநடமாட்டம் இல்லை.

என் இரட்டை மகள்களின் வயதொத்த இரண்டு 16 வயதுப் பெண்கள் எனக்கு கிட்ட வந்தார்கள்.

"குட் ஈவினிங் அங்கிள்...

யூ மே ரேக் போத் ஒவ் அஸ்...

ஒன்லி தவுஸன்ட் பேர் கெட்...

போர் வன் அவர்..."

அதிர்ந்து போனேன்.

போதை வஸ்துக்கு அடிமையாகி இருக்கின்றார்கள்.

என் மகள்கள் முன்னால் நின்று அப்பா அப்பா என அழுவது போல் இருந்தது.

ஓடிச் சென்று ஒரு காரை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு தங்கச்சி வீட்டுக்கு வந்து விட்டேன்.

படபஸ்சுக்கு காத்திருக்கவே இல்லை.

இது என் பஸ்ஸ்டான்டே இல்லை.

தோல்வியை மனம் ஒத்துக் கொள்ள மறுத்தாலும் நிஜம்தான் உண்மை.

தண்ணீர்ப்படங்கள் நிஜங்கள் இல்லை என்பதை உணர எனக்கு இத்தனை வருடங்கள் ஆகியிருக்கு.

# சிட்னி பாராளுமன்றத்தில் தமிழ் மரபு தினம்

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்றத்தில் திருவள்ளுவர் தினம், தமிழ் மரபு தினம், தாய் மொழி தினம் மூன்றையும் தமிழ் வளர்ச்சி மன்றம் முப்பெரும் விழாவாகக் கொண்டாடியது.

விழாவில் முக்கிய நிகழ்வாக முனைவர் சந்திரிகா சுப்ரமணியன் எழுதிய திருக்குறள் ஓர் உலக வழிகாட்டி THIRUKKURAL A UNIVERSAL GUIDE என்ற ஆங்கில நூலை மாநில நாடாளுமன்ற உறுப்பினர் ஹியூ மெக்டர்ட் அறிமுகம் செய்து , மாண்புமிகு அமைச்சர் ஜெப் லீ வெளியிட முதல் பிரதியை மேதகு கம்பர்லாந்து மேயர் லிசா லேக் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் இளைய தலைமுறையினர் பங்கேற்று உரையாற்றினர்.







## விருது விழாவும் நூல் வெளியீடும்

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைதமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடாத்தும் வவுனியூர் இரா.உதயணன் இலக்கிய விருது விழாவும் ஊடகவியலாளர் கே.பொன்னுத் துரையின் அகவை நூல் வெளியீடும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

சாகித்திய ரத்னா பேராசிரியர் சபா. ஜெயராசா முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட இந்நிகழ்வில், இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் முன்னிலையில் நடைபெற்றது. இதன்போது பல படைப்பாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.

# சிதைந்த சிவனாலயத்தின் சிவலிங்க பீடத்திற்கு அடிக்கல்!



கிழக்கு மாகாணத்தில் சோழர் காலத்தில் நிருமாணிக்கப்பட்டு தற்போது தூர்ந்துசிதைந்துகிடக்கின்ற மடத்தடி சிவன் ஆலய முன்றலில் சிவலிங்கம் நிறுவுவதற்கான பீடமொன்றுக்கு அடிக்கல்நடும் வைபவம் பௌர்ணமியன்று நடைபெற்றது. கூடவே அருகிலுள்ள மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் புதிதாக அம்மன் அன்னதான மண்டபத்தை அமைப்பதற்கான அடிக்கல் நடுவிழாவும் நேற்றைய பௌர்ணமி தினத்தில் நடைபெற்றது.

சிவனருள் பவுண்டேசன் ஆதரவில் ஆலயத்தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிவனருள் பவுண்டேசன் நிறுவன மாவட்டச்செயலாளர் கே.வாமதேவன் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம், மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபக இயக்குனர் மு.ஜெய பாலன்.சிவனருள் பவுண்டேஷன் தலை வர் பேராசிரியர் அனுசியா சேனாதிராஜா செயலாளர் கே.வாமதேவன். பொருளா ளர் ஜனார்த்தனன், ஆலயபரிபாலன சபைஆலோசகர்களான வி.ரி.சகாதேவ ராஜா,வா.குணாளன். வ.ஜெயந்தன் மாவட்டகலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு அடிக்கல் நட்டனர்.

பௌர்ணமி தினமாகையால் நேற்று பெருந்தொகையான அம்மன் அடியார்களும் கலந்துகொண்டு பொங்கிப்படைத்து அன்னதானம்வழங்கி அம்மனை வழிப் பட்டனர்.

# அளவெட்டி ஞானோதய வித்தியாலய புதிய திறன்வகுப்பறைத் திறப்பு விழா

யாழ் அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தினுடைய புதிய திறன்வகுப்பறை திறப்பு விழா அண்மையில் கல்லூரி அதிபர் தி. பிரதீபன் தலைமையில் நடைபெற்றதுடன் பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் அவர்களும், சிறப்பு விருந்தினரான தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம நிர்வாக உத்தியோகத்தர் வை.சுரேஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

ரட்ணம் அறக்கட்டளை நிறுவனத்தினுடைய அனுசரனையிலும் பாடசாலை பழைய மாணவரான திரு. சு.உருத்திரேஸ்வரன்(சுவிஸ்) அவர்களினுடைய பங்களிப்பினாலும் மாணவர் பயன்பாட்டிற்கு என திறந்து வைக்கப்பட்ட வகுப்பறை ஆனது மாணவர்களுக்கு வீடியோக்கள், ஓடியோக்கள் மற்றும் இணையம் மூலம் பாடப்பரப்புகள் தொடர்பான பூரண அறிவைபெற உதவியாக இருக்கும் என்பதுடன் வறுமையான மாணவர்களுக்கு இணையவழிக் கற்றலுக்கும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் பாடசாலையில் கல்விபயிலும் 90ற்கும் அதிகமான மாணவர்கள் இதன்மூலம் பயனடையபோகின்றார்கள் என்றும் பாடசாலை அதிபர் தனது உரையில் தெரிவித்தார்.







# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

19) ரமணி தனது பிறந்த நாளுக்காக ஒரே மாதிரியான கேக் பெட்டிகளை வாங்கினாள். ஒரு பெட்டியில் உள்ள கேக்கை 12 சம துண்டுகளாக வெட்டினால் எல்லாக் கேக்குகளிலும் இருந்து 180 துண்டுகள் கிடைக்கும். எனின், கேக் ஒன்றை 8 சம துண்டுகளாக வெட்டினால் கிடைக்கும் கேக் துண்டுகளின் எண்ணிக்கை யாது?
(1) 120 (2) 150 (3) 160

20) என்னிடம் ஒரேயளவான நீளமுள்ள 27 ஈர்க்குத் துண்டுகள் இருந்தன. அதில் இரு சதுரமுகிகள் செய்தேன். அதன்படி என்னிடம் மீதியாகவுள்ள ஈர்க்குத் துண்டுகளின் எண்ணிக்கை.
(1) 3 (2) 5 (3) 4

21) உரு A யிலுள்ள தராசின் இரு தட்டுக்ளிலும் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிறைகள் சமமாகும்.



உரு – A உரு – B

உரு B யிலுள்ள தராசின் இரு பக்கங்களிலும் உள்ள பொருட்களின் நிறைகளைச் சமன் செய்வதற்கு நிறை குறைந்த தராசுத் தட்டில் வைக்க வேண்டிய பொருள் எது?
(1) □ (2) ● (3) ▲

22) நோய்க்கு – சிகிச்சை எனின் அறிவுக்கு - ……………………..
(1) கல்வி (2) பாடசாலை (3) புத்தகம்

- **இரண்டு மாணவர்கள் விளையாடிய விதம் கீழே தரப்பட்டுள்ளது.**
மாணவன் ஒருவன் எழுத்துக்கள் சொல்ல மற்றொரு மாணவன் தகவலுக்கேற்ப பையொன்றில் நிற மாபிள்களை இடுதல் வேண்டும். மாணவன் எழுத்துக்கள் சொன்ன விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து 23 ஆம் 24ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A B C C B A D B C A D B B C C

A. எனச்சொல்லும் போது 1 வெள்ளை நிற மாபிளையும்
B. எனச் சொல்லும் போது 1 நீல நிற மாபிளையும்
C. எனச் சொல்லும் போது 1 கறுப்பு நிற மாபிளையும் பையில் போட வேண்டும்.
D. எனச் சொல்லும் போது பையில் போட்ட மாபிள்களில் 1 வெள்ளை நிற மாபிளையும் 1 நீல நிற மாபிளையும் வெளியே எடுக்க வேண்டும்.


23) இதகேற்ப விளையாட்டின் இறுதியில் பையில் எத்தனை மாபிள்கள் இருக்கும்?
(1) 9 மாபிள்கள் (2) 11 மாபிள்கள் (3) 10 மாபிள்கள்

24) இறுதியில் பையிலிருந்த வெள்ளை நிற மாபிள்களினதும் நீல நிற மாபிள்களினதும் எண்ணிக்கை முறையே,
(1) 1 வெள்ளை 3 நீலம் (2) 2 வெள்ளை 2 நீலம் (3) 2 வெள்ளை 2 நீலம்

25) கமலி 6 பூக்கள் செய்யும் நேரத்தில் அமலி 8 பூக்கள் செய்வாள் பரணி 5 பூக்கள் செய்யும் நேரத்தில் கமலி 3 பூக்கள் செய்வாள் எனின் வேகமாகப் பூக்களை செய்பவர் யார்?
(1) அமலி (2) பரணி (3) கமலி

26) தாராக்களின் எண்ணிக்கையானது $\frac{1}{3}$ பங்கு குயில்களின் எண்ணிக்கைக்கு சமனாகும். குயில்களானது புறாக்களின் எண்ணிக்கை $\frac{2}{5}$ பங்கிற்கு சமனாகும். புறாக்களின் எண்ணிக்கை 30 எனின் தாரக்களின் எண்ணிக்கை யாது?
(1) 4 (2) 3 (3) 5

27) கீழுள்ள உருக்களில் சமபக்கமுள்ள நான்கு முக்கோணத் துண்டுகளை வெட்டி எடுக்கக்கூடிய உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

28) அவன் உனக்கு உதவி செய்தால் கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்கும் என்னும் தொடரின் அர்த்தம்.
(1) அவன் எப்போதும் உதவி செய்வான். என்பதை
(2) அவனுக்கு உதவி தேவைப்படுகிறது. என்பதை
(3) அவன் உதவி செய்யமாட்டான். என்பதை

### விடைகள்

19) 1
20) 1
21) 1
22) 1
23) 1
24) 1
25) 2
26) 1
27) 3
28) 3

## கல்வி tv CHANNEL-1

**06.02.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**06.02.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சுயாதீனமாக செயற்பட தயாராகும் ஆளும்தரப்பு உறுப்பினர்கள் 15 பேர்!

## அரசின் செயற்பாடுகளால் அதிருப்தி

கொழும்பு, பெப். 20

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 15 பேர் சுயாதீனமாக செயற்படும் முடிவுவை எடுக்க தயாராகி வருகின்றனர் என்று சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தியடைந்துள்ள இவர்கள், எதிர்காலத்தில் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் சம்பந்தமாக அவ்வப்போது சந்தித்து பேச்சு நடத்தி வருகின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது.

அரசுக்கு எதிராக செயற்படுவதை தவிர தற்போதைய நிலைமையில் மாற்று வழியில்லை என கலந்துரையாடியுள்ள இவர்கள், அரசு தொடர்பாக வாக்காளர்களிடம் இருந்து கிடைக்கும் அழுத்தங்கள் காரணமாக ஏதாவது ஒரு முடிவை எடுக்க வேண்டும் எனவும் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, டொலர் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு,விவசாயிகளின் பிரச்னைகள், அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற காரணங்களால், மக்கள் மத்தியில் அரச எதிர்ப்பு அலை உருவாகியுள்ளது. (அ)

# கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை வேண்டும்

## ஜனாதிபதிக்கு சந்திரகுமார் கடிதம்

கிளிநொச்சி, பெப். 20

கிளிநொச்சி மாவட்டத்தில் சமீப காலமாக இடம்பெற்று வருகின்ற பாரியளவிலான

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தி மாவட்டத்தை எதிர்கால ஆபத்திலிருந்து பாதுகாக்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 2 வீதம் குறைவான பிரதேசத்தை தன்வசம் வைத்திருக்கும் கிளிநொச்சி மாவட்டம், தீவின் மொத்த நெல் உற்பத்தியில் முதல் பத்து இடங்களுக்குள் எப்போதும் தேர்வாகியிருக்கிறது.

அரிசி உற்பத்தி தவிர்ந்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிறுதானிய உற்பத்தியும் தேசத்தின் உணவு விநியோகத்திற்கு கணிசமான பங்களிப்பினை வழங்கி வருகின்றது. கிளிநொச்சியில் இருக்கக்கூடிய நீர்ப்பாசன வசதியுடைய 9 பெரிய - மத்தியதர குளங்களும், மழை நீரினை சேமித்து வைக்கக்கூடிய, இயற்கையாக உருவாகியுள்ள 359 சிறு குளங்களும் மேலே சொல்லப்பட்ட விவசாய நடவடிக்கைகளின் உயிர் நாடியாக விளங்குகின்றன.

போருக்கு பின்னரான காலங்களில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சடுதியாக அதிகரித்திருந்த கட்டுமான வேலைகள், மிகப்பெரும் அளவில் மண்ணுக்கான தேவையை உருவாக்கிட, எவ்வித திட்டமிடலும் இல்லாத பாரிய மண்ணகழ்வு கிளிநொச்சியில் இருக்கக்கூடிய குளங்கள் மற்றும் நீர்வடிந்தோடும் வாய்க்கால்களை இலக்காக வைத்து வசதியுடைய தனிநபர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆசியுடனும் ஒரு சில அரசியல்வாதிகளின் அரவணைப்பிலும் மேற்கொள்ளப்படும் மேற்படி சட்ட விரோத மண்ணகழ்வு மாவட்டத்தின் வாழ்வாதாரமாக இருக்க கூடிய நீர் நிலைகளின்

நிலவியல் அமைப்பினை சீர்குலைத்துள்ளதோடு, நெல்லுற்பத்திக்கு நீர் வழங்கக்கூடிய பெரும் நீர்தேக்கங்களின் கட்டுமானங்களை பாதிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

கடந்த 24.01.2022 அன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் அரச அதிபர், மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வால், கிளிநொச்சியின் மிகப்பெரும் வளமான இரணைமடுக்குளம் எதிர்நோக்கும் ஆபத்துக்களை பட்டியலிட்டதோடு, விவசாயத்தின் மூலாதாரமாக இருக்கும் அதனை பாதுகாக்க வேண்டிய தேவையையும் வலியுறுத்தி இருந்தார்.

இரணைமடு நீர்த்தேக்கம் மட்டுமின்றி மாவட்டத்தில் அமைத்திருக்கும் அனைத்து குளங்களும் வாய்க்கால்களும் தொடர்ச்சியாக மண் மாபியாகளினால் சுரண்டப்பட்டு வரும் நிலையில் அவற்றினை பாதுகாக்குமாறு சூழலியலாளர்கள்,

பொது அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் என பல தரப்பிடமிருந்தும் அரச நிர்வாகத்திற்கு வேண்டுதல்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், மணல் அகழ்வைக் கண்டித்து ஒருசில இடங்களில் மக்கள் போராட்டங்களை

நடத்தியுள்ளதோடு, உள்ளூர் மட்டத்தில் வீதிகளை மறிப்புச் செய்தும் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

எனினும், சட்டவிரோத மணல் அகழ்வுக்கு இன்றுவரை எவராலும் முற்றுப்புள்ளி வைக்க இயலவில்லை.

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, இராணுவத்தினரின் உதவியுடன் அண்மையில் இரணைமடு குளத்தில் மேற்கொண்ட கள ஆய்வொன்றில், குளத்தின் பிரதானமான அணைக்கட்டுக்கு அண்மையில் இடம்பெறும் அதிர்ச்சி தரக்கூடிய மண்ணகழ்வை ஆவணப்படுத்தியதோடு, அணைக்கட்டில் விரிசல் ஏற்படக்கூடிய எதிர்கால சாத்தியங்களையும் சுட்டிக் காட்டியிருந்தது. இந்த அணைக்கட்டில் ஏற்படக்கூடிய எந்தவொரு உடைப்பும், இந்திய பெருங்கடலில் ஏற்பட்டிருந்த 2004 டிசெம்பர் சுனாமியை விட மிகப்பெரும் மனித பேரவலம் ஒன்றை கிளிநொச்சிக்கு விட்டு செல் லும் என என பொறியியலார்கள் ஏற்கனவே எச்சரித்திருக்கிறார்கள்.

நன்னீர் நிலைகளுக்கு சமாந்தரமாக, கரையோர கிராமங்களில் குறிப்பாக கௌதாரிமுனை, கிளாலி மற்றும் பளையில் இடம்பெறும் சடட விரோத மணல் அகழ்வு, கடல் நீரை மனித குடியிருப்புக்களினுள் வரவழைத்து நிலத்தை உவராக்குவதன் ஊடாக கிளிநொச்சியின் ஆன்மாவான விவசாய முயற்சிகளை அழிக்கத் தொடங்கியிருப்பதோடு ‘குஞ்சுக்குளம்’ போன்ற கிராமங்களில் இருந்து குடியிருப்பாளர்களை இடம்பெயரவும் செய்திருக்கிறது.

சட்டவிரோத மண்ணகழ்வில் ஈடுபட்டிருக்கும் நபர்கள், தங்களது அகழ்வு நடவடிக்கைகளில் இளைஞர்களையும் சிறுவர்களையும் கணிசமான அளவில் உள்வாங்கியிருக்கின்றார்கள். மேற்படி அகழ்வின் ஊடாக கிடைக்கப் பெறும்

சராசரிக்கும் அதிகமான வருமானம், இளம் மற்றும் பால்ய வயதினரை மது, போதை மருந்துகளின் பக்கம் நாடச்செய்வதோடு, சட்டத்துக்கு எதிரான குழுக்களை உருவாக்கி வளர்ப்பதற்கும் துணை நிற்கின்றது. மண் அகழ்வு தொடர்பாக போலீஸ்

நிலையங்களில் முறைப்பாடு செய்யும் பொதுமக்கள், இத்தகைய குழுக்களால் தாக்கப்படும் சம்பவங்கள் கிளிநொச்சியில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

ஏற்கனவே இயக்கத்தில் உள்ள, மண் அகழ்வுடன் தொடர்புடைய முறைசார் திணைக்களங்கள், பாதுகாப்பு தரப்பு மற்றும் மாவட்ட- பிரதேச தலைமைஅரச நிர்வாகிகள் இடையூறின்றி தொடரும் மேற்படி சட்ட விரோத மண்ணகழ்வை தடுப்பதற்கு வழியின்றி தவிக்கின்றனர். மேலும், மாவட்டத்திலிருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளாலும் இது தொடர்பில் தீர்வொன்றை காண இயலவில்லை. தயை கூர்ந்து, கண் முன்னே அரங்கேறும் இந்த பேரவலத்தை முடிவுக்கு கொண்டுவர உடன் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட மக்கள் - நலன் விரும்பிகள் சார்பில் தங்களை வேண்டிக்கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)

# மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கு சைக்கிள்கள் வழங்கல்

முல்லைத்தீவு, பெப். 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

புலம்பெயர் தமிழர்களின் அமைப்பான ”விதையினை தெரிந்திடு” அமைப்பினரின் நிதி அனுசரணையுடன் ஈஸ்ட் லைட் நிறுவனத்தாரின் ஒருங்கிணைப்பில் தேவையுள்ள பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் இவை வழங்கப்பட்டன.

பொருளாதார ரீதியாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வரும் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட ஏழு மாணவர்களும் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட ஏழு மாணவர்களுமாக 14 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் நோக்கோடு குறித்த சைக்கிள்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமல நாதன், மேலதிக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன், மாவட்ட செயலக சிறுவர் மேம்பாட்டு பெற்றோர்கள், குறித்த சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 08 - 1946



உதிர்வு 02 - 03 . 2021

## அமரர் அரியரத்தினம் கந்தசாமி

**(கந்தசாமி அன் சன்ஸ் உரிமையாளர்)**
**சங்கானை - யாழ்ப்பாணம்**

கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும்
கொண்ட நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
எத்தனை ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்காது.
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழி காட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவராய்
வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்து ஆண்டு ஒன்று
மறைந்ததைய்யா!
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை இன்று (20.02.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**(கந்தசாமி அன் சன்ஸ் குடும்பத்தினர்)**

**தொடர்புகளுக்கு : 077 339 3372**

மாளியாவத்தை,
சங்கானை.

## தமிழரிடம்...

வெளிக்காட்டியுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய இரு அமைப்புக்களும் இணைந்து வெளி ஸ்ரீயிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித் ஸ்ரீதுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கொரோனா வைரஸ் தொற்று நோயின் இரண்டாம் அலையைக் கட்டுப்படுத்தும் பணியானாலும், சாதி மற்றும் பாலியல் பாகுபாடுகளைத் தகர்த்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தினைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்தும் நோக்கத்தினைக் கொண்ட சமூக நீதி வேலைத்திட்டமாகிலும் சரி அல்லது 2030 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் ஆக மாற்றும் ஆணித்தரமான இலட்சியத்தினைச் செயற்படுத்துவதிலும் முதல்வர் ஸ்டாலின் இந்தியாவின் ஏனைய தலைவர்கள் பார்த்துப் பொறாமை கொள்ளும் ஒரு தலைவராக மிளிருகிறார்.

அண்மைக்காலத் தமிழ்த் தலைமைகளை விஞ்சி, "தமிழால் இணைவோம்" என்ற தொனிப்பொருளில் முதல்வர் ஸ்டாலின் உலகத் தமிழர்களிடையேயான பொதுமையையும், ஒருமையையும் மேம்படுத்துவதில் பல்வேறு அர்த்தமுள்ள பணிகளை முன்னெடுத்திருக்கின்றார்.

குடியுரிமை இல்லாத தமிழர்களின் நலன் மற்றும் புனர்வாழ்வு போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்திய ஒரு அமைச்சுப் பதவிக்கு கே. எஸ். மஸ்தான் போன்ற அர்ப்பணிப்பு மிக்க ஒருவரை நியமித்தமை, ஜனவரி 12ஆம் திகதியை உலகப் புலம்பெயர் தமிழர் தினமாக அறிவித்து அதனை முதலமைச்சர் ஸ்டாலினே அங்குரார்ப்பணம் செய்து வைத்தமை, சர்வதேச பல்கலைக்கழகங்களில் தமிழ்க் கல்வியை ஊக்குவிப்பதற்காக எடுத்த முயற்சிகளில் ஹார்வர்ட் பல்கலைக்கழகம் மற்றும் டொரோண்டோ பல்கலைக்கழகம் போன்றவற்றில் தமிழ் இருக்கைகளை அமைப்பதற்கு வழங்கிய நன்கொடை போன்றவை இவரின் சீரிய பணிகளுக்கான சில உதாரணங்கள்.

இலங்கையின் வடக்கு, கிழக்கிலுள்ள மக்களைக் காத்திரமாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், உலகின் பல்வேறு நாடுகளிலும் இலங்கைத் தமிழர் நலன்களைப் பல்வேறு செயற்பாடுகள் மூலம் முன்னெடுத்து வரும் உலகத் தமிழர் பேரவையுமான நாங்கள் உலகத் தமிழ் மக்களுக்கு முதல்வர் ஸ்டாலின் வழங்கும் செழுமையான தலைமைத்துவம் நிமிர்த்தம் அவரில் உயர்ந்த மதிப்பு வைத்துள்ளோம்.

இலங்கையில் வாழும் தமிழர்களினதும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களினதும் கண்ணோட்டத்தில் தற்போதைய தமிழ் நாட்டு அரசின் அணுகுமுறையானது போற்றுதற்குரியது.

கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கைத் தமிழர் அகதி முகாம்கள் குறித்து முதலமைச்சர் ஸ்டாலின் கூறிய பின்வரும் கருத்துக்கள் வரவேற்கத்தக்கவையும் முக்கியத்துவம் வாய்ந்தவையுமாகும். "அவர்கள் அநாதைகள் அல்ல, அவர்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். இனிமேல் அவை இலங்கைத் தமிழர் புனர்வாழ்வு முகாம்கள் என அழைக்கப்படும்" - இந்த அறிக்கையானது அவரது வாழ்க்கைத் தரத்தினை மேலும் உயர்த்தும் முகமாக ஒதுக்கப்பட்ட 317 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் அறுதியாக உறுதி செய்யப்பட்டது.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் தங்களின் வரலாற்று அடிப்படையினாலான வாழ்விடப் பகுதிகளில் (வடக்கு மற்றும் கிழக்கு) ஒரு சுய ஆட்சியை விரும்புகின்றனர். மேலும், இந்த அதிகாரச் செழுமையானது இலங்கையில் தங்களின் சமமான குடியுரிமைக்கும், இத்தீவில் தங்களின் தனித்துவ அடையாளத்தைப் பாதுகாப்பதற்கும் அடிப்படையானது என்றும் நம்புகின்றார்கள் - இது தமிழக மற்றும் இந்தியக் கொள்கை நோக்குகளுடன் ஒத்திசைவான நிலைப்பாடே- என்றுள்ளது.

## ஆட்சியில்...

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

வன்னி மாவட்டத்துடன் நான் சம்மந்தமுள்ளவானாக இருக்கின்றேன். இதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. நான் ஜனாதிபதியாக முன் பல அமைச்சுப் பொறுப்புக்களில் இருந்தேன். சுகாதாரம், நீர்பாசனம், விவசாயம் என பல பொறுப்புக்களில் இருந்தேன். அதன்போது வன்னி பிரதேசத்திற்கு வந்து பல சேவைகளை செய்துள்ளேன். 2015 ஆம் ஆண்டு என்னை ஜனாதிபதியான தெரிவு செய்ய அதிக வாக்குகளை நீங்கள் வழங்கி னீர்கள். நான் ஜனாதிபதியாக இருந்த போதும் பல சந்தர்ப்பங்களில் வன்னிக்கு வந்தேன்.

ஜனாதிபதியாக இருந்தபோது இந்த மாவட்டத்தில் பல அபிவிருத்திகளை செய்துள்ளேன். வடக்கு, கிழக்குக்கு என ஒரு அமைப்பை நான் நிறுவினேன். யுத்தம் நடந்த பகுதிகளில் அபிவிருத்திகளை துரிதப்படுத்துவதற்கு அந்த அமைப்பை நிறுவினேன். என்னால் பல அபிவிருத்திகளை செய்ய முடிந்தது. சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என்ற வேறுபாடு என்னிடம் இல்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற எந்த வேறுபாடும் இல்லை. அனைவரையும் இந்த நாட்டு மக்கள் என்று தான் பார்கின்றேன். எனது நெஞ்சிலே இருந்து சொல்கின்றேன். நிரந்தர சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்று தான் நினைத்து கொண்டிருக்கிறேன்.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பித்து வைத்தேன். சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி நிதியம் மூலம் நிதி வழங்கினேன். சீனாவில் இருந்து அதற்கு உதவிகளை பெற்று பொலனறுவையில் சிறுநீரக வைத்தியசாலையை நிறுவினேன்.

எனது ஆட்சிக்காலம் ஏழை மக்களுக்கு சுபீட்சமுள்ள ஒரு காலமாக இருந்தது. அன்றாட தேவைக்களுக்கான பொருட்களின் விலை அதிகரிக்க வில்லை. விவசாயத்திற்கு தேவையான பொருட்களுக்கு தட்டுப்பாடு இருக்க வில்லை. வவுனியா போன்றே மற்றைய பிரதேசங்களிலும் விவசாயம் செய்யக் கூடிய மக்கள் இருக்கிறார்கள். விவசாயிகளுக்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். உங்களிடத்தில் பல பிரச்னைகள் இருக்கின்றன. விலை வாசி அதிகரிப்பு பிரச்னை இருக்கிறது. மின்சாரத் தடை ஏற்படுகிறது. பெற்றோ லுக்கு நீண்ட வரிரைசயில் நிற்கவேண்டி யுள்ளது. இப்படி பல பிரச்னைகள் உள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வளர்த்து மக்களுக்கு சிறந்த ஆட்சியை ஏற்படுத்த மாவட்டம் மாவட்டமாக செல்கின்றோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துங்கள். உங்களுடன் சகோதரமாக வேலை செய்ய இன்னும் பல சகோதர கட்சிகளை இணைத்துக் கொண்டு உங்களிடத்தில் வர இருக்கின்றோம். வருகின்ற தேர்தலுக்காக இவ்வாறு செயற்படுகின்றோம்.

நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற கட்சியாக இருக்கின்றோம். தற்போது உள்ள ஆட்சியாளர்களுக்கு எந்த கஷ்டத்தையும் கொடுக்கமாட்டோம். நாங்கள் மக்களது பிரச்னையை கதைப்போம். மக்களுக்கு பிரச்னை ஏற்பட்டால் அதனை பேச முன்னிற்போம். பாராளுமன்றத்திலும், பாராளுமன்றத்துக்கு வெளியேயும் இதையே பேசுகின்றோம். எமது கட்சியின் அங்கத்தர்வர்கள் ஒன்று சேர்ந்து ஒரு தீர்மானத்தை எடுத்து ஆட்சியாளர்களுக்கு கொடுத்துள்ளோம். இந்த அரசாங்கத்தின் நல்ல விடயங்களுக்கு மாத்திரம் ஆதரவு கொடுக்கின்றோம். மக்களுக்கு பிரச்னை ஏற்பட்டால் அதனை தட்டுடிக் கேட்கப் பின்னிற்கமாட்டோம் - என்றார்.

இந்த நிகழ்வில், அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, துமிந்த சில்வா, நிமால் சிறிபாலடி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் உள்ளிட்ட உயர்மட்ட உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## எல்லைப்...

என்ற போர்வையில் முல்லைத்தீவு கொக்கிளாயில் பொது மக்களின் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கை வடக்கு மாகாண சபை ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

கொக்கிளாய்-முல்லைத்தீவு பிரதான வீதிக்கு அருகில் 44 ஏக்கர் பொதுமக்களுக்கு செந்தமான காணிகளே இவ்வாறு சுவீகரிப்புச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இதனைத் தடுத்து நிறுத்த வடக்கு மாகாண சபையூடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

கனிய வளம் என மக்களின் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதை மாகாண சபைக்கு தெரியப்படுத்திய நிலையில், அது தொடர்பில் ஆராய்வதற்காக மாகாண சபை ஒரு குழுவை நியமித்தது. அந்தக் குழுவில் நானும் உள்ளடங்கியிருந்தேன்.

மக்களின் காணிகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும், புல்மேட்டையில் அமைந்துள்ள கனிய வளத் திணைக்களத்திலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

அப்போது காணிகளை சுவீகரிப்பதற்கு எதிராக நாம் குரல் கொடுத்தோம். இதனால் காணிகள் சுவீகரிக்கப்படாத நிலைமை காணப்பட்டது.

ஆனால் 2018ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் காணி உரிமையாளர்களுக்கு எதுவித அறிவிப்புக்களையும் வழங்காது, காணிகள் எல்லையிடப்பட்டு, கனிய வள கூட்டுத் தாபனத்தின் தேவைக்காக 44 ஏக்கர் காணி கையகப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு நிற்காது தற்போது மேலும் பல ஏக்கர் காணிகளை கையகப்படுத்த என நில அளவைத் திணைக்களம் அளவீட்டுப் பணிகளை முன்னெடுத்துள்ளது.

கொக்கிளாய் கிழக்கு கடற்கரைப் பகுதியில் இருந்து பிரதான வீதி வரையான பிரதேசங்களே கனிய வள கூட்டுத் தாபனத்தின் தேவைக்காக சுவீகரிப்புச் செய்யப்படவுள்ளது. இந்தப் பகுதிகளில் மக்களின் பயிர்ச்செய்கை நிலங்கள், குளங்கள், குடிமனைகளும் உள்ளடங்குகின்றன-என்றார். (அ)

## மேலும்...

வரை 15,969 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். (அ)

## ஜெனிவா...

உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்டு, ஊடகவியலாளர் மீது இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் இது மிகவும் மோசமான செயற்பாடு என்றும் அவர் கண்டனம் வெளியிட்டார். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள இந்த சந்தர்ப்பத்தில், இடம்பெறும் இவ்வாறான சம்பவங்கள், இலங்கை தொடர்பாக நிலைப்பாடு எடுக்கும் போது பாரதூரமானதாக அமையக் கூடும் என்றும் தயாசிறி ஜயசேகர எச்ச ரித்தார். (அ)

## இலங்கை...

முன்தினம் மாலை பேச்சு நடத்தினர். இதன் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்தி ரன் எம்.பி. தெரிவிக்கையில்-

இந்தச் சந்திப்பில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெய்ஷங்கர் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் அடுத்த மாதம் இலங்கைக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிப் பேசப்பட்டன. அத்தோடு வடக்கு - கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இந்தியாவின் பங்களிப்பு பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் இலங்கையின் தமிழ்த் தேசிய பிரச்சினை தீர்வு சம்பந்தமாக தொடர்ந்து வந்த இலங்கை அரசுகள் இந்தியாவுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறையை உருவாக்குவதாக இருந்தது.

இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் பண்ணுவதில் இந்தியா தொடர்ச்சியாக எடுக்கும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கின்ற அதேவேளையில் தொடர்ந்தும் இந்தியா அந்தப் பங்களிப்பைச் செய்து இலங்கையில் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் சம்பந்தன் முன்வைத்தார்.

ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் நடந்த இந்தக் கூட்டத்தில் வேறும் பல விடயங்கள் தீர்க்கமாக ஆராயப்பட்டன - என்றார். (அ-2)

## போதையில்...

அவற்றில் 2 ஆயிரத்து 470 பேர் உயிரிழந்தனர் அத்துடன் குறித்த விபத்துகளில் 14 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.

நாளாந்தம் வாகன விபத்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. எனவும் சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (அ)

## காரைநகர்...

இந்தியாவைச் சேர்ந்த ஒரு படகையும் அதில் இருந்த 6 மீனவர்களையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களையும் படகையும் கடற்படையினர் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றனர். (அ)

## ஈஸ்டர்...

தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் வணக்கத்திற்குரிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய அரசாங்கம் சட்டத்தை கேலிக்கு உள்ளாகி இருப்பதா கவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகளின் பாகங்களை அரசாங்கம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பன மறைத்து வைத்துள்ளன எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கத்தோலிக்க தொடர்சாதன பிரிவின் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான நூல் வெளியிட்டு நிகழ்வில் இணையத்தளம் வழியாக இணைந்துகொண்டு உரையாற்றும்போதே பேராயர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சம்பவம் நடந்து மூன்று ஆண்டுகள் நெருங்க போகுகிறது. நியாயம் நிறைவேற்றப்பட்டது என்பதை எம்மால் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி ஆணைக்குழுவில் வழங்கப்பட்ட சாட்சியங்களை அரசாங்கமும், சட்டமா அதிபரும் ஒழித்து வைத்துள்ளனர்.

விசாரணை அறிக்கையில் பாகங்களை எமக்கு வழங்குமாறு கேட்டு நாங்கள் கடிதம் அனுப்பியுள்ளோம். தெளிவுபடுத்துமாறு கோரியுள்ளோம். அந்த கோரிக்கைகள் எதுவும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இதற்கு மாறாக சாட்சியங்களை தற்போதைய அரசாங்கமும், கடந்த அரசாங்கமும் மறைத்து வைத்துள்ளன. சட்டமா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகிய தரப்பின் தவறான செயற்பாடுகள் காரணமாக நியாயம் கிடைக்காத நிலைமை உருவாகியுள்ளது.

இவை தொடர்பில் தாம் மிகவும் கவலைப்படுகிறோம். இதனடிப்படையில் தற்போதைய அரசாங்கம் எமக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை என்பதை தெளிவாக கூறுகிறோம்.

சம்பவம் நடக்க போவதை அறிந்து அதனை தடுக்க நடவடிக்கை எடுக்காத அரச தலைவர்கள், உயர் அதிகாரிகளை பாதுகாத்து அவர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்கி, சட்ட செயற்பாடுகளை கேலிக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த விடயத்தில் நேரடியாக நான் தற்போதைய அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துகிறேன். தற்போதைய அரசாங்கம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொள்ள முடியாது என்பது தெளிவாக தெரிகிறது. இதன் காரணமாக நாங்கள் துக்கமடைந்துள்ளோம்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மரண அறிவித்தல்

பிறப்பு
11 - 06 - 1920



இறப்பு
16 - 02 - 2022

## அம்பலவி சின்னையா நல்லையா

**முன்னாள் வட்டார கல்வி அதிகாரி- தீவு பகுதி, முன்னாள் கல்வி அதிகாரி- வவுனியா மற்றும் யாழ்ப்பாணம்**

யாழ். நயினாதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, கனடா Mississauga ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவி சின்னையா நல்லையா அவர்கள் 16.02.2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவி சின்னையா – மங்களநாயகம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கணபதிப்பிள்ளை தையலம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சொர்ணாம்பாள்(கல்லூரி அதிபர்) அவர்களின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்ற Dr.சிவானந்தன், சிவநாதன், சிவநேசன், சிவராணி, சிவமணி, சிவராசன், சிவாஜி, சிவவாணி, சிவவேணி, சிவரமணி, சந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஸ்வரி, திருமகள், நிர்மலன்நாதன், பாலசந்திரன், விமலாவதி, திருவதனா, சிவபாதசுந்தரம், விக்னேஸ்வர ராஜா, னுச.சிவேந்திரன், விமலதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், வல்லிபுரம், கமலாதேவி, பத்மாவதி ஆகியோரின் அன்பு அண்ணனும், காலஞ்சென்றவர்களான பாகீரதி, விஸ்வலிங்கம்( கல்லூரி அதிபர்), பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்ற செல்வநாயகம்– மனோன்மணி, சீவநாயகம்– காலஞ்சென்ற சரோஜினி, செல்வராணி– சற்குணம், சபாநாயகம்– நல்லம்மா ஆகியோரின் அருமை அத்தானும், விஷ்வமாலினி வைஜந்தி, பிரபாகரன், சிவானந்தி, காலஞ்சென்ற பிரதீபன், சாந்தினி, சந்திரிகா, சக்தி, முகுந்தன், ஜெயஸ்ரீ, சிவேந்திரன், செல்வேந்திரன், ரவீந்திரன், ராஜேந்திரன், சர்வேந்திரன், சத்தியேந்திரன், ஞானேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்பு பெரிய மாமாவும்,மல்லிகா, காலஞ்சென்ற ஜெயம், சுசீலா, சாந்தன், ரவி, அபி, மணிமேகலை ஆரணி, ஜனனி, அருணன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அனுஷா– ஸ்ரீ, அபிராமி– முரளி, அதிதா– கிரிஷ், அருள்– கவிதா, சத்தியா– தாரணி, ஜெகா– மீரா, அகிலா, நிஷாந்த்– கிறிஸ்டி, கிரிசாந்த்– கார்த்திகா, ஐங்கரன், ஆஷா, ஹரிஹரன் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், மீரா– ஜெகா, சுசி– ஆன்ட்ரூ, ஆரபி– நவீட், அசோகன், அரன்– கேற்றீ, காலஞ்சென்ற அகிலன், ஆதிரை– மயூரன், அம்பிகை, ஆர்த்தி– ஆண்ட்ரூ, ஆனந்தி, பைரவி, மயூரி, சிந்து, வாசுகி ஆகியோரின் அன்புத் தாத்தாவும், சிவகாமி, அபிராமி, சுருதி, அருஜுன் அரி, ஆரணி ஆகியோரின் பாசமிகு பெரிய தாத்தாவும், ஆதன், ருக்மணி, ஆதவன், அன்பன், இசானி, ஜனவி, திலன், சகானா, அமரா, சூரியன், கிரன், நோலன், இப்ராஹிம், முகமட், கியூகோ, அரன், அகிலன், கிருஷ்ணா, அஞ்ஜனா, சேயோன், மைதிலி, நிக்கலஸ், மடலின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 19 Feb 2022 5:30 PM - 8:30 PM
Sunday, 20 Feb 2022 7:00 AM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

தகனம் :
Sunday, 20 Feb 2022 9:00 AM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**நேசன் - மகன்**
**Mobile : +61409956640**

தகவல்:
**குடும்பத்தினர்**

# வவுனியாவில் சு.க மாநாட்டால் உயர்தரப் பரீட்சைக்கு இடையூறு

*வவுனியா, பெப். 20*

*ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வன்னி மாநாட்டால் சைவப்பிரகாச மகளீர் கல்லூரியில் இடம்பெற்ற உயர் தரப்பரீட்சைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது .*

*நகர சபையினருக்கு கிடைக்க பெற்ற முறைப்பாட்டையடுத்து கட்சியின் மாநாட்டை ஏற்பாடு செய்தவர்களுக்கு ஒலிபெருக்கியின் சத்தங்களை குறைத்து மாணவர்களின் பரீட்சைக்கு இடையூறின்றி கட்சியின் மாநாட்டை நடத்துமாறு அறிவித்தல் வழங்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.*

*நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வன்னி மாநாடு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் இடம்பெற்றன. எனினும் மண்டபத்தில் ஒலிபெருக்கியின் அதிக சத்தத்தினால் அருகிலுள்ள வைசப்பிரகாச மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற உயர்தரப் பரீட் சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தப் பட்டது .*

*இதையடுத்து குறித்த கட்சியின் மாநாட்டை ஏற்பாடு செய்தவர்களிடம், பாடசாலையில் உயர்தர பரீட்சை இடம்பெற்று வருகின்றது. எனவே ஒலி பெருக்கியின் சத்தங்களை குறைத்துக்கொண்டு மாநாட்டை நடத்துமாறு நகரசபையினரால் அறிவித்தல் வழங்கப்பட்டது.*

*ஒரு சில மணித்தியாலயத்தின் பின்னர் கட்சியின் மாநாடு முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமாகியது.*

*இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான நிமால் சிறீபால டி சில்வா, தயாசிறி ஜயசேகர, துமிந்த திஸாநாயக்க, முன்னாள் மத்திய மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்கா, பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் மற்றும் நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் , பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.*

*(அ)*

# சில இடங்களில் எரிபொருள் தட்டுப்பாடு

*கொழும்பு, பெப். 20*

*நாட்டின் சில பிரதேசங்களில் பெட்ரோல் மற்றும் டீசலுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரியவருகிறது.*

*வாகனங்களின் உரிமையாளர்கள் எரிபொருள் தாங்கிகளை நிரப்பிக்கொண்டுள்ளதால், பல எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் எரிபொருள் தீர்ந்து போயுள்ளது.*

*சில எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு கடந்த மூன்று நாட்களாக எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை என அவற்றின் முகாமையாளர்கள் தெரிவித்தனர்.*

*இதனிடையே எரிபொருள் விலைகள் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் சில எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் உரிமையாளர்கள் எரிபொருளை விற்பனை செய்யாது இருப்பதாக நுகர்வோர் குற்றம்சுமத்தியுள்ளனர்.*

*இந்த நிலையில், நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை எனவும் கையிருப்பில் எரிபொருள் தேவையான அளவு இருப்பதாக எரிசக்தி அமைச்சு கூறியுள்ளது.*

# ஏப்ரல் 30ஆம் திகதிக்கு பின் தடுப்பூசி அட்டை கட்டாயம்

*கொழும்பு, பெப். 20*

*ஏப்ரல் 30ஆம் திகதிக்கு பின்னர் முழுமையாக தடுப்பூசியை பெற்றவர்கள் மட்டுமே பொது இடங்களில் நடமாட அனுமதிக்கப்படும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*நாட்டில் உள்ள கோவிட்-19 தடுப்பூசி தொகை, எதிர்வரும் ஜூலை மாதத்துடன் காலாவதியாகும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.*

*தற்போது, இலக்கு வைக்கப்பட்டுள்ள தரப்பினருக்கான தடுப்பூசி நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 6.2 மில்லியன் பேருக்கு இதுவரை தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.*

*பொது இடங்களுக்கு செல்பவர்கள், பூரண தடுப்பூசி ஏற்றி இருக்கவேண்டும் என்ற நடைமுறை ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியின் பின்னர் அமுலுக்கு வரவுள்ளது. இதற்கமைவான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.*

*பொதுமக்கள் பூரண தடுப்பூசி ஏற்றியுள்ளனரா இல்லையா என்பதை அறிந்துகொள்ள செயலி ஒன்றையோ அல்லது அட்டை ஒன்றையோ அறிமுகப் படுத்த எதிர்பார்ப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.* *(அ)*






# மரண அறிவித்தல்

பிறப்பு
16 - 09 - 1946



இறப்பு
17 - 02 - 2022

## கந்தையா மகாலிங்கம்

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Mönchengladbach ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாலிங்கம் அவர்கள் 17.02.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா – கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிறிஸ்ணபிள்ளை – மங்கையகரசி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயராணி அவர்களின் அன்புக் கணவரும், அனுஜா (மோகனா), அனுரா(வதனா), தனராஜ்(வசந்தன்), தவக்குமார்(குமார்), தனஜெயந்தன்(மயூரன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, கந்தசாமி, சுப்பிரமணியம் மற்றும் குகதாஸ், ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகுருநாதன், காலஞ்சென்ற அருந்ததி, இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கருணாதேவி, காலஞ்சென்ற பத்மதேவி, இந்திராணி, சிவயோகராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,லோகேந்திரன், ஜெகதீஸ்வரன், சோபனா, மயூரா ஆகியோரின் அன்பு மாமாவும்,சுருதி, ஜெகீனா, ப்ரித்தி, லதுஷன், மிதுஷா, யஸ்வின், றிஷா, றக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**தனராஜ்(வசந்தன்) - மகன்**
**Mobile : +33652118337**

தகவல்:
**குடும்பத்தினர்**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-சம்திங் சம்திங்
4.30 மணி : உதவும் கரங்கள்



5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்

**இரவு**

7.00 மணி : SPOTLIGHT- சட்டதரணி ந.காண்டீபன் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை-அஸீஸ் நிசாருதீன்-ஒரே நாடு ஒரே சட்டம் செயலணி




## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவன் டிவி

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு